ாரப்பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
## SUTANTIRAN

194 A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.




புத்தகம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 1991 மாசித் திங்கள் 30-ம் நாள் (13—3-1960) ஞாயிற்றுக்கிழமை றம்ழான் 14 | இதழ் 36

# சுய நிர்ணய உரிமைபெற தமிழ் பேசும் மக்கள் இன்று திரண்டு விட்டார்கள்

## இதைக் காட்டும் சர்வஜன வாக்கெடுப்பாக பொதுத் தேர்தல் அமைய வேண்டும்

## தமிழரசு அபேட்சகர்கள் 19 பேரையும் வெற்றி பெறச் செய்வது கடமை

### தமிழரசுத் தந்தை விடுத்துள்ள விசேஷ வேண்டுகோள்

இம்மாதம் 19ந் தேதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலை ஆட்சியாளரும் சிங்களப் பொதுமக்களும் சாதாரண ஒரு பொதுத் தேர்தலாக கருதலாம்.

தமிழ் பேசும் மக்களாகிய எம்மைப் பொறுத்தவரையில் நிலைமை வேறு. எமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டும் சரித்திர முக்கியத்துவம் நிறைந்த ஒரு மாபெரும் சர்வஜன வாக்கெடுப்பாக எதிர்வரும் பொதுத் தேர்தலை நாம் பாவிக்க வேண்டும்.

ஒரே குரலில் தமது சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை வலியுறுத்த இலட்சோப இலட்சம் தமிழ் பேசும் மக்கள் திரண்டு விட்டார்கள் என்பதை எடுத்துக்காட்ட வேண்டும்.

தமிழரசுக் கட்சிக்கே வாக்களித்து தமிழரசுக் கட்சியின் அபேட்சகர்கள் 19 பேரையும் ஒருவர்தானும் பாக்கியில்லாமல் வெற்றி பெறச் செய்யும்படி வேண்டுகிறேன்.



தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தமது கையொப்பத்தின்கீழ் தமிழ் பேசும் வாக்காளர்களுக்கு விடுத்துள்ள ஒரு விசேஷ வேண்டுகோளில் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

"தமிழரசுக் கட்சி அபேட்சகர்களின் சாதாரண வெற்றி ஒரு பொருட்டல்ல. சர்வஜன வாக்கெடுப்பில் அமோகமான விகித அதிகப்படி வாக்குகள் கிடைக்க வேண்டும். எனவே வாக்காளர் இடாப்பிலுள்ள ஒவ்வொரு புனித வாக்கும் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமை பெறுவது என்ற புனித இலட்சியத்துக்குப் பயன்பட வேண்டும்.

"தமிழ் பேசும் இனம் தன் தனிப் பண்புகளை இழக்காத ஒரு தனி இனமாக இந்நாட்டில் வாழ வழி செய்ய வேண்டியது தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவரதும் நீங்காக் கடமையாகும். சில்லறைப் பிரச்னைகளோ கிராம விவகாரங்களோ, பந்துமித்திர பாசங்களோ இப் புனித கடமையில் குறுக்கிடக் கூடாது" என்று மேலும் தமது வேண்டுகோளில் தெரிவித்திருக்கிறார் தமிழரசுத் தந்தை.

மேற்படி வேண்டுகோளில் அவர் தொடர்ந்து சொல்லியிருப்பதாவது:-

இலங்கைவாழ் தமிழ் பேசும் இனம் ஆட்சி அதிகாரம் அற்று, தம்முடைய தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் உரிமையற்று—அதாவது எந்த இனத்துக்கும் அத்தியாவசியம் தேவைப்படும் சிறிய சுயாட்சி உரிமை மறுக்கப்பட்டு ஒற்றை ஆட்சி அரசமைப்பில் சிறையுண்டு கிடக்கிறது.

ஒற்றை ஆட்சி அரசமைப்பினால், சிங்களப் (பெரும்பான்மை) இனத்துக்குள் மாத்திரம் அதிகப்படியான வாக்குகளைக் கவரக் கூடிய கட்சி, தமிழ் பேசும் மக்கள் உட்பட இலங்கை அனைத்தையுமே ஆளும் அதிகாரத்தைப் பெறுகிறது. இதனால் தமிழ் பேசும் மக்களின் வாக்குகள் பெறுமதியற்றவையாகி விடுகின்றன. எனவே தமிழ் பேசும் மக்களின் தலவுரிமைகள் புறக்கணிக்கப்படுகின்றன. தமிழ் பேசும் இனம் ஒதுக்கப்பட்டு அடிமை நிலை அடைகிறது.

வாக்குகளுக்கும் பெறுமதியில்லை; ஆகவே ஆட்சிப் பொறுப்பில் பங்கு கிடையாது; எனவே ஆளப்படும் அடிமை நிலைக்குத் தள்ளப்படுகிறது தமிழ் பேசும் இனம்!

பல்வேறு இன மக்கள் வாழும் நாட்டில், பெரும்பான்மையினம் ஆளுபவர்க

(9-ம் பக்கம் பார்க்க)

---

### இவ்வாரம் கு. வ. படம்

இவ்வாரம் சுதந்திரன் ஒவ்வொரு பிரதியுடனும் மறைந்த தலைவர், கோப்பாய்க் கோமான் திரு கு. வன்னியசிங்கம் அவர்களின் படம் ஒன்று பிரேம் போட்டு வைக்கத் தக்க வகையில் அழகாக அச்சிட்டு வழங்கப்படுகிறது. பத்திரிகை வாங்குபவர்கள் இப்படத்தையும் தமது ஏஜண்டுகளிடம் கேட்டு இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

### அடுத்த வாரம்

அடுத்த வாரச் சுதந்திரன் பொதுத் தேர்தலை முன்னிட்டு குறித்த காலத்துக்கு முன்னதாக அதாவது வியாழன் வெள்ளிக்கிழமைகளில் இலங்கையெங்கும் விற்பனைக்குக் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—ஆசிரியர்

---

# வெளியூர் சென்றிருக்கும் தமிழரசு வாக்காளர்கள்

## 18-ந் தேதியே தொகுதிக்கு தவறாது திரும்பிவிட வேண்டும்

### தமிழரசு அபேட்சகர்கள் கூட்டு விண்ணப்பம்

தொழில் காரணமாகவும், வேறு அலுவல்கள் காரணமாகவும் வெளியூர்களுக்கு சென்றிருக்கும் தமிழரசுக் கட்சி ஆதரவாளர்களான வாக்காளப் பெருமக்கள் முடிந்தவரை 18ந் தேதிக்குப் பிந்தாமல் தத்தம் தொகுதிக்குத் திரும்பிவிட வேண்டும் என்றும், 19ம் தேதி காலையிலேயே தவறாது தத்தமது வாக்குகளைப் பதிவு செய்துவிட வேண்டும் என்றும் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் 19 அபேட்சகர்களும் ஒன்று சேர்ந்து சுதந்திரன் வாயிலாக இவ்வேண்டுகோளை வெளியிடுகின்றார்கள்.

யாழ்ப்பாணத்திலுள்ள தொகுதிகளைச் சேர்ந்த வாக்காளர்கள் பலர் தொழில் காரணமாகவும், உத்தியோகம் காரணமாகவும் கொழும்புக்கும், இலங்கையின் தென் பகுதிகளுக்கும் சென்றிருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் உரிய காலத்தில் தமது தொகுதிகளுக்குத் திரும்பி தேர்தல் தினத்தன்று தமது வாக்குகளைத் தமிழரசுக் கட்சிக்கு வழங்குவதன் மூலம் ஒரு புனிதமான நாட்டுப் பணியை நிறைவேற்ற வேண்டுமெனப் பிரஸ்தாப வேண்டுகோளில் கூறப்பட்டிருக்கிறது.

மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்த—விசேஷமாக பட்டிருப்பு, கல்முனைத் தொகுதிகளைச் சேர்ந்த—வேளாண்மைத் தொழிலாளர் பலர், வேளாண்மை வெட்டு வேலை காரணமாக

(8-ம் பக்கம் பார்க்க)

தொய்வு (ASTHMA) சங்காரி

ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(RICHELET'S PECTORAL)



★ இடைவிடாத இருமல்
★ இளைப்பு
★ மூச்சுத் திணறல்
★ கிர்ர் புர்ர் சத்தம்
★ நெஞ்சுவலி
★ தொண்டை வலி




இவைகளை ஒழித்துக் கட்டுவதில் இணையற்றது. சளி நோயினால் இன்னலுறுபவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதம். சில டோஸ் சாப்பிட்டதுமே நிம்மதியளிக்கக் கூடிய இவ்வற்புத சஞ்சீவி.

எங்கும் கிடைக்கும்.

ஏகவிநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

63, பேங்ஷால் வீதி, கொழும்பு.

(போன் : 2885)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூழ்முட்டையும் கூட்டுமாறும் பரிசளிப்பு

## சிங்களவர் செய்ததோடு

### மாஜிக் கட்சிக் கொள்கை மாறியது

## மலை நாட்டுத் தமிழ் தொழிலாளரை வேலையினின்று நீக்கி வெளியேற்றும் பிரேரணைக்கு 1939-ல் ஆதரவளித்தது

## இந்திய வம்சாவழியினர் விஷயத்தில்

### துளியும் அக்கறை கிடையாது இக்கட்சிக்கு

பொதுவுடமைச் சுலோகங்களைப் பல்லவி பாடுவதினால் தம் சொந்தத் தீர்மானத்தையும் நிதான புத்தியையும் இழந்த ஒருசில தமிழ் வாலிபர்கள் சமசமாஜக் கட்சியினர் மலைநாட்டுத் தமிழ் மக்கள்மேல் அனுதாபமுடையவர்கள் என்றும் அவர்கள் நயங்கள் உரிமைகளை இந்த சமசமாஜிகள் பாதுகாப்பர் என்றும் ஒரு தப்பபிப்பிராயத்தை வளர்த்து வருகின்றனர்.

சர்வதேசப் பொதுவுடமை இலட்சியத்தைப் பிரகடனம் செய்வதால் அநேகர் இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமோ என்ற தோரணையில் சமசமாஜக் கட்சியும் சாதி அடிப்படையில் பாரபட்சமாக அதுவும் தொழிலாளரைப் பாதிக்குமுகமான கருமங்களைச் செய்யுமோ என்று எண்ணுகிறார்கள்.

அந்த எண்ணம் தவறானது. தமிழ் வாலிபர்கள் சிலர் நினைப்பதுபோல் இல்லை சமசமாஜக் கட்சி. மலைநாட்டுத் தமிழர்பால் அந்தக் கட்சிக்கு அனுதாபமோ அக்கறையோ கிடையாது. அதை இங்கு ஆதாரபூர்வமாகக் காண்போம்.

### பிரேரணை

1939ம் ஆண்டு மே மாதம் 23ந் தேதி இலங்கை அரசாங்க சபையில் 5 லட்சம் ரூபாய் கோரி ஒரு உபமான்யப் பிரேரணையை நிதி இலாகாக் காரியதரிசி திரு ஹக்ஸாம் கொண்டுவந்தார். (Supplementary estimate for Rs. 500,000 moved by Mr. H. J. Huxham, Financial Secretary). பிரேரணையை கொண்டு வந்தவர் ஆங்கிலேயர் அவர் மிகவும் விநோதமாக அந்தப் பிரேரணையை ஆதரித்துப் பேசினார். தான் கொண்டுவந்த பிரேரணையின் கொள்கைகள் இலட்சியங்களில் தமக்கு பங்கு இல்லை என்றார். அந்தப் பிரேரணையால் பாதிக்கப்படும் தொழிலாளிகட்கு நீதி வழங்கப்படுகின்றதோ இல்லையோ—அதுபற்றியெல்லாம் தமக்கு கவலை இல்லை என்றார். ஆனால் செலவு செய்யப்படும் பணம் நிதி இலாகா விதிகளின்படி சரியாகச்செலவாகின்றதா என்பதைக் கவனிக்க வேண்டியது ஒன்றுதான் தமக்கு உள்ள பொறுப்பு என்று சொல்லி மிகவும் விநோதமான முறையில் அந்தப் பிரேரணையை விவரித்தார் அவர்.

### பிரேரணையின் நோக்கம்

இவ்வளவு விநோதமாகப் பிரேரிக்கப்பட்ட பிரேரணை என்ன என்று வாசகர்கள் எண்ணுவது சகஜம் அப்பொழுது போக்குவரத்து இலாகா மந்திரியாகக் கடமை பார்த்த திரு கொத்தலாவலையின் ஆர்ப்பாட்டத்தின் நிமித்தம் மந்திரி சபை ஒரு புதிய கொள்கையை ஏற்றது. அப்புதியகொள்கை வேறொன்றுமல்ல: அரச சேவையில் தினசரிச் சம்பள முறையில் ஊழியம் செய்யும் இலங்கையரல்லாதவரில் (அதாவது இந்திய வம்சாவழியினர்) சிலரைக் கட்டாயப் பிரகாரமாகவும் மற்றையோரைப் பல்வேறு வகையான தூண்டுதலின் மூலமாகவும் வேலையினின்றும் நீக்கி வெளியே அனுப்பும் ஒரு திட்டமே அது அத்திட்டத்தை நிறைவேற்றத் தேவையான பணத்திற்குத்தான் உபமான்யப் பிரேரணை கொண்டுவரப்பட்டது. உபகாரச்சம்பளம் (Gratuity) என்ற வகையில் பணம் கொடுக்கப்படுவதால் நிதி இலாகாக் காரியதரிசி பிரேரிக்க வேண்டியிருந்தது.

### சிங்களவரின் மழுப்பல்

"பிரேரணையின் நோக்கம் இந்திய வம்சாவழியினரின் மேல் துவேஷம் காட்டுவது அல்ல; இலங்கை மக்களிடையே நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குப் [illegible] டம்" என்று சிங்கள மந்திரிகள் பகுத்தால் போர்த்த புலியின் இலட்சணமாக வாதித்தனர். அக்காலத்தில் சிங்கள அரசியல்வாதிகள் தங்கள் ஜாதித் திமிரை வெட்ட வெளிச்சமாக அவிழ்த்துவிடுவதில்லை. காரணம் அப்பொழுது அவர்கட்குப் பூரண சுயராச்சியம் கிடைக்கவில்லை. பத்தில் ஏழு பங்கு சுயராச்சியம்தான் உண்டு.

### தமிழ்ப் பிரதிநிதி எதிர்ப்பு

இப்பிரேரணையை எதிர்த்துப் பேசியவர்களுள் விசேடமான சொற்பொழிவு ஒரு தமிழ் பிரதிநிதியிடமிருந்து வந்தது. 'வேலையில் இருப்பவர்க்கு வேலை கொடுப்பதற்காக ஏற்கனவே வேலையிலிருப்பவர் ஒருவரை வேலையினின்றும் நீக்குவது தர்மநீதிக்கொவ்வாத செயல் என்று அவர் எடுத்துக்காட்டினார்.

மேலும் நவீன பொருளியல் ஞானக் கருத்துக்கள் கொண்ட ஒரு நியாயத்தையும் அவர் சமர்ப்பித்தார்: குறிப்பிட்ட இந்திய வம்சாவழியினரை வேலையிலிருந்து விலக்குவதற்காக செலவழிக்கப்போகும் 5 லட்சம் ரூபாயைக்கொண்டு ஆக்க வேலைகளைத் தொடங்கி ஒரு ஆயிரம் சிங்களவருக்கு உழைப்புச் சந்தர்ப்பம் கொடுக்க முடியாதா என்று ஆணித்தரமாகக் கேட்டார்.

முடிவாக இப்பிரேரணையால் பாதிக்கப்படுபவர் பெரும்பாலானோர் மலையாளப் பகுதியைச் சேர்ந்தவர்களாதலால் மலையாள அரசாங்கம் எதிர் நடவடிக்கையாக யாழ்ப்பாணப்புகையிலை இறக்குமதிமேல் தடையுத்தரவு விதிக்கக்கூடும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வளவு நிதானமாகப் பேசியவர் வேறு யாருமல்லர். "தனிப்பெருந் தலைவர்" திரு ஜீ. ஜீ பொன்னம்பலத்தினால் "தமிழ் துரோகி" என்று குறி சுட்டு அரசியலிலிருந்து வெளியேற்றப்பட்ட திரு ஏ. மகாதேவாதான் அவர்.

### பிலிப் ஆதரவு

எவ்விடயத்தையும் சர்வதேச நோக்குடனும் பொருளியல் ஞான அடிப்படையிலும் தாம் கண்ணுறுவதாகச் சொல்லிக்கொள்ளும் சமசமாஜக் கட்சியினர் இப்பிரேரணையின் பொழுது என்ன செய்தனர் தெரியுமா?

சமசமாஜக் கட்சியினர் அப்பொழுது அரசாங்க சபையில் இருவர்தான் இருந்தனர். அதாவது திரு பிலிப் குணவர்த்தனவும் டாக்டர் என். எம். பெரேராவும்தான் இருந்தார்கள் முதலில் பிலிப் குணவர்த்தன பேசினார். மிகவும் சுருக்கமாக வே பேசினார். பேசும்பொழுது "தாங்கொணாத வியாதிகட்குத் தாங்கொணாத மருந்துகளைப் பிரயோகிக்க வேண்டும்" (Desperate diseases require desperate remedies) என்று உபதேசஞ் செய்து பிரேரணையை சமசமாஜக் கட்சி ஆதரிப்பதாக அறிவித்தார். அதாவது இந்தியர்களை வேலையினின்று நீக்கி தாயகம் அனுப்புவதை சமசமாஜக் கட்சி ஆதரிக்கின்றது என்று பேசி முடித்தார்.

(10-ம் பக்கம் பார்க்க)

வியாபாரத்திற்கழகு
விளம்பரம் செய்தல்

ஆங்கிலம்
சிங்களம்

ஆங்கிலம் சிங்களம் தெரியாது
என்ற கவலையை ஒழியுங்கள்.
இன்றேஅற்லஸ் ஹோலில்
ஆங்கிலம் சிங்களம் தபால்மூலம்
கற்று வாழ்வில் உயர்வடையுங்கள். இன்றே இலவச விபரங்கட்கு எழுதுங்கள்.

ஆசிரிய கலாசாலை
பிரவேசப்பரீட்சை 1960
இப்போட்டிப் பரீட்சைக்கு
இன்றே படிக்கத் தொடங்குங்கள்.
- பொது விஞ்ஞானம்
- தூய கணிதம்
- தமிழ்ப் பாஷை
- சரித்திரம் / பூமிசாஸ்திரம்
- பொது விவேகம்
- எண் கணிதம்

ஜீ. சி. ஈ.
ஆகஸ்ட்/டிசம்பர் மாதங்களில்
நடக்கும் கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சையில்
சித்தி பெறுவது நிச்சயம்
பாடத் திட்டம் / பரீட்சை
விதிகள் உள்ளடங்கிய
விபரங்கள் இலவசமாக
அனுப்பப்படும்.
விபரங்கட்கு

அற்லஸ் ஹோல்
723, மருதானை றேட், கொழும்பு.

## சிவகங்கை சீமையில்

### ஆத்மீகப்பணிக்கு அத்திவாரம்

## ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் பெயரால் ஆசிரமம்

தமிழ் நாட்டில் சரித்திரப் புகழ் பெற்ற சிவகங்கைச் சீமையில் அன்பர்கள் பலர் கூடி ஆத்மீகப் பணிக்கு அத்திவார மிட்டிருக்கிறார்கள். சிவகங்கை - திருப்பத்தூர் ரோட்டில் மணிமுத்தா வட கரையில் அணிசேர் கஜேந்திர மண்டபத்தோப்பில் ஸ்ரீ ராமகிருஷ்ண ஆசிரமம் ஒன்றை அமைத்திருக்கிறார்கள். கடந்த 28-2-60ல் அங்கு பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் 125-வது ஜெயந்தி விழா திரு சோம நாராயணன் தலைமையில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

பெண்கள் உட்படப் பெருந்திரளான மக்கள் விழாவில் கலந்து கொண்டார்கள். திரு சோம ராஜாராம் தமக்கே உரிய பாணியில் அருமையாகப் பஜனை நிகழ்த்தினார். திருவாளர்கள் எஸ். ஆர். எம். வள்ளியப்பச் செட்டியார், ஆர். ரெங்கராஜன் பி. ஏ. பி. டி., மா. சண்முகம், எஸ். சந்திரசேகரன், ராம விஸ்வநாதன், மற்றும் பலர் சொற்பெருக்காற்றினார்கள்.

தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இலங்கையிலிருந்தும் பல அன்பர்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்திகள் விழாவில் படித்துக் காண்பிக்கப்பட்டன. ஆசிரமம் தொடங்கப்படுவதற்கு மூல காரணஸ்தரும் இலங்கையிலிருந்த வண்ணமே அதற்கான கருமமாற்றி வருபவருமான திரு ஆர். எம். வள்ளியப்பன் தாம் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில், 'தொண்டு தான் முக்கியம் அமைதியுடன் பணி புரியுங்கள்" என்று குறிப்பிட்டிருந்தார்.

சுமார் இருபத்தைந்து வருட ஆத்மீகத்துறை ஈடுபாடுடைய திரு வள்ளியப்பன் இந்த ஆசிரமத்தின் மூலம் சிவகங்கைப் பகுதியின் நீண்டகாலத் தேவைகளுள் ஒன்று ஓரளவு பூர்த்தி செய்யப்படுகிறது என்றார். மகளிர் கல்லூரி, மற்றும் சமூக சேவை ஸ்தாபனங்கள் முதலியனவற்றை கஜேந்திர மோட்ச ஆஸ்ரமம் ஆரம்பித்து நடத்தத் திட்டம் உண்டு என்றும் அவர் தெரிவித்தார். தாம் இலங்கையிலிருந்து என்ன தான் செய்த போதிலும் ஸ்தலத்தில் இருந்து சகல விஷயங்களையும் பொறுப்பேற்று வெற்றிகரமாக நடத்தி வைத்த திருவாளர்கள் கா. மெய்யப்பன், சி. சாத்தப்பன் ஆகியோரே நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்கள் என்று திரு வள்ளியப்பன் மேலும் தெரிவித்தார். விழா முடிவில் சுமார் 600 பேருக்கு பகல் உணவு வழங்கப்பட்டது. திரு வி. ராமசாமி நன்றி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எஸ். எஸ். மிக்கேல்,
முல்லைத்தீவு.

கே: அங்கங்கள் தெரிய வெங்காயச் சருகு சேலை கட்டித் தெருவில் திரிகிறார்களே பருவப் பெண்கள். அதனால் அவர்கள் அடையும் லாபம் என்ன?

ப: திரியட்டுமே. அதனால் நீர் அடையும் நட்டம் என்ன?

ஃ

ரா. சோமசுந்தரம், மாஹோ.

கே: பண்டாரவளையில் நடந்த சம்பவத்தின் பின்பாவது தன்மானமற்ற தமிழர்கள் சிங்களச் சிறீ பொறித்த கார்களில் தமிழ் பிரதேசங்களில் பவனி வருவதைத் தவிர்ப்பார்களா?

ப: அவ்வளவு அபிமானம் இருந்தால் தமிழன் என்றோ தன்னைத்தானே ஆளும் இனமாகியிருப்பானே!

ஃ

சே. சித்திராஞ்சன்,
யாழ்ப்பாணம்.

கே: குயுக்தியாரே, தாங்கள் யாழ்ப்பாணம் வந்திருந்த சமயம் ஒரு டாக்ஸிக்காரனோடு சண்டை போட்டீர்களாமே, உண்மையா?

ப: உண்மைதான். அடிதடியல்ல. வெறும் வாய்த்தர்க்கமே. ஒன்றன் பின் ஒன்றாக இரண்டு டாக்ஸிகள் வந்து கொண்டிருந்தன. கையைக் காட்டினேன். இரண்டும் நின்றுவிட்டன. பின்னால் நின்ற டாக்ஸியில் நான் சென்று ஏறினேன். முன்னால் வந்த டாக்ஸிகாரன் தன்னுடைய வண்டியில் தான் நான் ஏறியிருக்க வேண்டும் என்று சண்டைக்கு வந்தான். நான் சொன்னேன்: "தம்பி, நீ சொல்வது சரி. நீதான் முன்னால் வந்தாய். உன் வண்டியில்தான் ஏறியிருக்க வேண்டும். ஆனால் நீ சிங்கள சிறீ போட்டிருக்கிறாயே. தமிழ்ப் பிரதேசத்தில் நான் சிங்கள சிறீ போட்ட வண்டியில் ஏறுவதில்லை. பின்னால் வந்த வண்டி தமிழ் சிறீ போட்டிருந்ததால் அதில் ஏறியிருக்கிறேன் பணம் கொடுப்பவன் நான். எனக்குப் பிடித்தமான வண்டியில் தானே நான் ஏற வேண்டும். தமிழ் சிறீ போட்டுக்கொண்டு வா, வேண்டுமானால் 50 சதம் இனாமாகத் தருகிறேன்" என்றேன். அப்போது அவன் முகம் பட்ட பாட்டைப் பார்க்க வேண்டுமே!

ஃ

க. ஐயாத்துரை, பருத்தித்துறை.

கே: பருத்தித்துறைச் சமசமாஜக் குஞ்சு எப்படிப்பட்டவர். அவரை உங்களுக்கு நன்றாகத் தெரியுமா?

ப: நன்றாகத் தெரியும். இந்தியாவில் அவர் இந்திய தேசிய காங்கிரஸ் வாதி. இலங்கையில் 1956 வரை திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தை விரவணக்கம் செய்து வந்த தமிழ்க் காங்கிரஸ் வாதி. 1959-ல் பாராளுமன்றம் கலைக்கப் பட்டதும் தமிழரசுக் கட்சியின் உயர் பீடத்தில் இரவு பகலாகத் தூங்கிக் கிடந்து பருத்தித்துறைக்கு தமிழரசுக் கட்சி நியமனம் கிடைக்குமா என்று பார்த்திருந்த சந்தர்ப்பவாதி. அது கிடையாமல் போகவே இப்போது சமசமாஜ வாதி! இனி என்ன வாதியோ ஆதியே அறிவார்!

ஃ

தாமரைத்தீவான், கந்தகெதர.

கே: திரு. செல்வநாயகம் இருபத்து நான்கு மணித்தியாலத்தில் நாற்பத் தெட்டுப் பொய்கள் சொல்வார் என்கிறாரே திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம். இது உண்மையா?

ப: "அவன் கிடக்கிறான் குடிகாரப் பயல். எனக்கு ஊற்று இன்னும் ஒரு பிளா" என்றானும் விழி சொருகிய நிலையில் உடை பிசகிக் கிடந்த ஒரு 'நிதார்த்தவாதி',

ஃ

ஆ. செல்வநாயகம், மூளாய்.

யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும், புதுப் புதுப் பத்திரிகைகள் தோன்றிச் சுதந்திரனையும், சுதந்திரன் ஆசிரியரையும், தமிழரசுக் கட்சியையும் திட்டிக் கொண்டிருக்கின்றனவே அவற்றிற்கு நீங்கள் பதில் கொடுத்தால் என்ன குயுக்தியாரே?

ப: தேர்தல் காலத்துக் காளான் பத்திரிகைகள் அவை. யாராவது ஒரு பணக்கார அபேட்சகரின் மூலதனத்தைக் கொண்டு சுய நலத்துக்காக முளைத்தெழுபவை, காசுக்கு விலையாக முடியாமல் இனாமாகக் கொடுக்கப்படுபவை. இன்று வரும், நாளை நின்றுவிடும் இவற்றைத் திருப்பித் தாக்கித் திட்டிக்கொண்டிருப்பதை விட முக்கியமான வேலைகள் நமக்கு உண்டே. "The dog barks and the caravan moves" என்று ஒரு வாக்கியம் உண்டு. 'நாய்கள் குலைத்துக் கொண்டேயிருக்க ஒட்டகப் பிரயாணிகள் ஊர்ந்து கொண்டேயிருப்பார்கள்' என்பது இதன் பொருள்.

ஃ

த. சரோஜினி,
கொழும்புத்துறை.

கே: கோப்பாய்த் தொகுதியில் போட்டியிடும் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் தமிழ் இனத்துக்குச் செய்த சேவை என்ன?

ப: துண்டுப் பிரசுரமடித்து வெளியிடுவனவெல்லாம் உண்மையில் அவர் செய்த சேவைகள் ஆகா. அவர் தமிழ் இனத்துக்குச் செய்துள்ள மிக உன்னதமான சேவை அவரும் அவர் தம் துணைவியாருமாகச் சேர்ந்து திரு ஜீ. ஜீ பொன்னம்பலத்தைத் தோற்கடித்து வெற்றி வாகை சூடவிருக்கும் திருவாளர் கதிரவேற்பிள்ளை போன்ற ஒரு சிறந்த தொண்டனை இன்று தமிழரசுக் கட்சிக்கு அளித்ததாகும்.

ஃ

தெ. கருணாகரன்,
யாழ்ப்பாணம்.

கே: காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயகா தமது குடும்பத்துக்கும் பிள்ளைகளுக்கும் எவ்வளவு ஆஸ்தியை விட்டு விட்டுச் சென்றிருக்கிறார்?

ப: குடும்பம் தளம்பாமல் இருக்கக் கூடிய அளவு விட்டுச் சென்றிருக்கிறார். நாலு லட்சத்து எண்பதினாயிரம் ரூபாய் அவர் விட்டுச் சென்றிருக்கும் ஆஸ்தியின் பெறுமதி. நமது தலைவர் திரு. வன்னியசிங்கம் தமது காலம் முழுவதையும் தமிழ் இனத்தின் சேவைக்காக அர்ப்பணித்தார். தமது குடும்பத்துக்கு அவர் நானூறு ரூபாய் கூட விட்டுச் செல்லவில்லையே. இதுதான் வித்தியாசம்!

ஃ

கோபாலன், தெல்லிப்பளை.

கே: "எங்கள் மொழிக் கொள்கை மாறவில்லை. பத்திரிகையில் வெளியாகும் செய்திகளை நம்பாதீர்கள்." இப்படி டாக்டர் என். எம். பெரேரா அறிக்கை வெளியிட்டிருந்தாரே, நீர் படிக்கவில்லையா குயுக்தியாரே?

ப: படித்தேன். பத்திரிகையில் தானே அறிக்கை வெளியிட்டிருந்தார்? அவர் நம்ப வேண்டாம் என்று கேட்டுக்கொண்டபடி பத்திரிகையில் வெளியான 'என். எம். பெரேரா அறிக்கை வெளியிட்டுள்ளார்' என்ற செய்தியையும் நான் நம்பவேயில்லை.

ஃ

[illegible]
[illegible] யையா ரூ. 25,000க்கு செக் அனுப்பிய செய்தி சுதந்திரனில் வெளி வரவில்லையே ஏன்?

ப: பிரஸ்தாப செய்தியைத் திரு. தம்பியையா சுதந்திரனுக்கு அனுப்பவில்லையே! அதனால் வெளிவரவில்லை. சுதந்திரதின பகிஷ்காரச் செய்தியை அவரே சுதந்திரனுக்கு அனுப்பியிருந்தார்; வெளியிட்டோம். செய்தியை வெளியிடுவதில் சுதந்திரன் ஒரு போதும் இரட்டடிப்பைக் கையாளுவதில்லை. தமிழரசாருக்கு நெடுந்தீவில் அபிஷேகம் நடைபெற்ற செய்தியைக் கூட மறைக்காமல் வெளியிட்டிருந்தோமே.

கா. இரத்தினம்,
யாழ்ப்பாணம்.

கே: உடுப்பிட்டித் தொகுதி தமிழ் காங்கிரஸ் அபேட்சகர் திரு. சிவசிதம்பரம் 5-3-60 குருநகர் மைதானத்தில் திரு. பொன்னம்பலத்தை ஆதரிக்கு முகமாக நடந்த கூட்டத்தில் பேசிய போது தமிழரசுக் கட்சியினர் காலிமுக மைதானத்தில் சத்தியாக்கிரகம் நடத்திய போது அந்தப் பக்சம் வணக்கத்துக்குரிய தனிநாயக அடிகளார் தலைகாட்டியதே இல்லை யென்றும், அவர் அங்கு வந்து பங்கு பற்றியதாகத் தமிழரசார் சொல்வதெல்லாம் வெறும் சூழ்ச்சி யென்றும், கத்தோலிக்க மக்களை ஏமாற்றச் செய்யும் சதித்திட்டங்களில் இதுவும் ஒன்று என்றும் கூறினார். இக் கூற்று சரியா குயுக்தியாரே.

ப: முற்றும் பிழை யென்பதை எழுத்தில் அல்ல இதோ இதே பக்கத்தில் படத்தின் மூலம் விளக்கம் தருகிறோம். நீங்களே பார்த்து தீர்மானியுங்கள்.

ஃ

க. செல்வராணி, மட்டக்களப்பு

கே: 1957ம் ஆண்டு வெள்ளத்தின்போது காலஞ்சென்ற எங்கள் மதிப்புக்குரிய தலைவர் திரு வன்னியசிங்கம் யாழ்ப்பாணத்திலிருந்து துணிமணிகளும், மற்றும் உபயோகப் பொருட்களும் சேர்த்து லொறியில் ஏற்றிக்கொண்டு வந்து மட்டக்களப்பு வெள்ள அகதிகளுக்கு வழங்கினாரே, இம்முறை வெள்ளத்தின்போது தமிழரசுக் கட்சியார் தொடர்ந்து ஏன் இந்தத் தொண்டைச் செய்யவில்லை?

ப: இப்படியாக இம்முறையும் உதவி செய்வதற்கு கொழும்பில் உள்ள தமிழரசு வாலிபர்களும், யாழ்ப்பாணத்து தமிழரசு வாலிப முன்னணியினரும் துடியாகத் துடிக்கவே செய்தார்கள். ஆனால் தமிழரசு மேலிடம் இப்போதுள்ள சந்தர்ப்ப சூழ்நிலையில் அப்படிச் செய்வது புத்தியாகாது என்று தடுத்துவிட்டது. காரணம் என்ன தெரியுமா? இது தேர்தல் காலம் தேர்தல் பிரசாரங்கள் மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த நேரத்தில் ஒருவருக்கு ஒரு வேஷ்டியோ சேலையோ கொடுப்பது அல்லது ஒரு நேரச் சாப்பாடு போடுவது தேர்தல் சட்டத்தின்கீழ் இலஞ்சக் குற்றமாகிவிடலாம். சட்ட விற்பன்னர்களான தமிழரசுத் தலைவர்கள் இப்படியான சிக்கல்களில் தமிழரசுக் கட்சியும், தமிழரசு அபேட்சகர்களும் மாட்டிக்கொள்ளக் கூடாதென்ற முன்யோசனையினால்தான் தடுத்துவிட்டார்கள்.

ஆனால் சட்டவாதிகளான திரு மயில்வாகனமும், திரு நல்லையாவும் என்ன செய்கிறார்கள்? சென்ற வாரம் திரு எதிர்மன்னசிங்கத்துக்கு ஆதரவாகக் கொக்கட்டிச்சோலையில் ஒரு கூட்டம் போட்டார்கள். அதற்கு 'மைக்' பூட்டிய காரில் ஊர் ஊராக விளம்பரம் செய்யப்பட்டது. "பொது மக்களே, கூட்டத்துக்குத் திரளாக வாருங்கள். எல்லோருக்கும் ஆட்டிறைச்சிக் கறியுடன் மதிய போசனம் கிடைக்கும்" என்று விளம்பரம் ஒலித்தது! வாக்காளரை அழைத்து விருந்து போசனம் அளிப்பது தேர்தல் குற்றம் என்பதை அறியாத அப்புக்காத்தர்கள் தாமே இவர்கள்!

மட்டக்களப்பு

## தேர்தல் 'பைலா'!

"எமன்"

['டிங்கிரி டிங்காலே மீனாட்சி டிங்கிரி டிங்காலே' என்ற மெட்டு]


டிங்கிரி டிங்காலே மீனாட்சி டிங்கிரி டிங்காலே
'எலக்ஷன்' போற போக்கைப்பாரு தங்கமே தில்லாலே

அதிகமாகப் படிச்சுப் படிச்சு மூளை கலங்கிப்போச்சு
மதியிழந்து மட்டக்களப்பில் மண்ணைக் கவ்வலாச்சு
ஆய்வில்லாமல் தேர்தலிலே குதிச்சுப்புட்டார் பாரு- அந்த
'அப்புக்காத்து' ஐயாவுக்கு 'அரஹரா'தான் கேளு!
(எலக்ஷன் போற)

'ஐயா' வரவைப் பார்த்துப் பார்த்து ஏங்குதிங்கே 'ஏனி'
மாஸ்டர் ஐயா அங்கே 'கிண்ணத்'திலே அருந்துறாரே பாணி
அப்பன் பாட்டன் ஆஸ்தியெல்லாம் 'புட்டி'யாக மாறி
'பீயே' வயிற்றில் செரிக்குது பார் 'ஐயாம் வெரி சாரி!'
(எலக்ஷன் போற)

நல்ல வார்த்தை நாலு பேச மாட்டார் இந்த 'பீயே'
நாளும் கள்ளும் அரக்கும் பீரும் நாறும் அவர் வாயே
குருட்டு வழியில் 'வோட்டை'ப் பிடுங்க இந்த மனுஷர் ஆசை
குதர்க்க மொழி பேசும் வெற்று 'டுஸ்னியும்கொ ஓசை'
(எலக்ஷன் போற)

கண்ணும் கண்ணும் கிறுகுது காலுங்கையும் உதறுது
'கிண்ணம்'-'ஏனி' ஜோடி போட்டுக்கிறுகிறுத்து ஆடுது
'மன்னார்' 'மாஸ்டர்' 'மயில'ரோடு மணிப்புலவர்-'பீயே'
ஐன்னிகண்டு ஓடுகிறார் தலைதெறிக்க ஓட்டம்
(எலக்ஷன் போற)



1956 ஜூன் 5-ல் காலிமுக மைதானத்தில் தமிழரசு சத்தியாக்கிரகிகளைச் சந்தித்து அளவளாவிவிட்டு வண. தனிநாயக அடிகளார் ஏறு நடை போட்டு வரும் காட்சி. (இது பற்றிய கேள்விக்கு குயுக்தியார் பதில் பார்க்கவும்)

உங்கள் நீடித்த எழிலுக்கு
'எலைட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட்
என்னும் அழகின் அணிகலனை
அணியுங்கள்.
பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றது.
இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல், மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது
'எலைட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட்
அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர் வர்ணங்களிலும் கிடைக்கின்றன.
குண்டன்மால்ஸ்,
லிமிட்டெட்,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காடைத்தனத்தால் காரியம் சாதிக்க

# சமசமாஜிகள் எண்ணம்

## ஆடி அடங்கிய சாண்டோ ருத்திராவை அவர்கள் மேடை யேற்றுவதன் மர்மம்:

## தாம் தமிழரை நேரடியாகத் திட்டமுடியாது அதனால் தமிழரைக் கொண்டே செய்விக்கிறார்கள்

### கருவியாகிவிட்ட இப்பிரகிருதியின் வீரத்துக்கு இதோ ஒரு சாம்பிள்

"ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றப் போராடுகிறோம் ...... ஆமாம், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றத்தான் நாம் போராடுகிறோம் (We fight for power ......We fight for power)" என்று மேடைக்கு மேடை முழக்குகிறார்கள் சமசமாஜக் கட்சிச்சூரர்கள். அதிகார வெறி அவர்கள் தலைக்கேறி விட்டது முடிவு......? மார்ச் 19 முடிந்தால் தெரிந்து விடும். அது வரையில் வெறி தணியாது; அட்டகாசம் ஓயாது; சண்டப் பிரசண்டம் தீராது.

மார்க்ஸிய வாதிகளுக்கு மதம் அபின் போன்றது என்பார்கள் மேலை நாடுகளைப் பொறுத்தவரையில் தான் அந்த நிலைமை. இங்குள்ளவர்களுக்கோ மதம் மட்டுமல்ல அரசியல் கூட அபினாகி விட்டது; போதையூட்டும் பொருளாகிவிட்டது.

### காடைத்தனம்

அரசியலில் கருத்து வேறுபாடு இருப்பது காணச் சகியாது குதிக்கிறார்கள். மாற்றுக் கருத்துத் தெரிவிப்பவர்களை மூர்க்கத்தனமாக எதிர்க்கிறார்கள். எதிர்த் தரப்பாரின் ஆணித்தரமான எழுத்துக்களுக்கு தாக்குப் பிடிக்க முடியாத நிலையில் எழுதியவர்களையே தாக்க முயல்கிறார்கள்; குளுரைக்கிறார்கள். அரசியல் நாகரிகத்தை அடகு வைத்து விட்டு காடைத்தனத்தால் காரியம் சாதிக்க விழைகிறார்கள் இது தான் மாஜிக கட்சியினர் தற்போது கையாளத் தொடங்கியுள்ள நடைமுறை. அதிகாரத்தைக் கைப்பற்ற காடைத்தனம் ஒன்றே வழி என்று கண்டு கொண்டார்கள் போலும்!

### விசில் அடிக்கும் பட்டாளம்

இதற்காகக் கட்சித் தலைவர்கள் பின்னால் ஒரு பட்டாளம்! விசில் அடிப்பதும், வீண் வம்பு வளர்ப்பதும் இதன் முக்கிய வேலை. காடைத்தனத்தால் மாற்றுக் கட்சிக்காரரைத் திருப்பலாம்; எதிர்க் கருத்துக்கள் எழுதப்படுவதைத் தவிர்க்கலாம்; காரியம் சாதிக்கலாம் என்று எண்ணுவது வடிகட்டிய முட்டாள்தனம் என்பதை மட்டும் இவர்களுக்கு நினைவு படுத்தினால் போதும் என்று நம்புகிறோம்.

### ருத்திராட்சப் பூனை

இவர்கள் மத்தியிலே ருத்திராட்சப் பூனை ஒன்றும் புகுந்து கொண்டு புதிதாக வாலாட்டத் தொடங்கியிருக்கிறது. அந்தப் பூனைக்கும் ஒன்று சொல்ல வேண்டியிருக்கிறது.

சம சமாஜக் கட்சியினரின் கொழும்புக் கூட்டங்களிலே புதுக்குரல் ஒன்று தடிப்பாக வரத் தொடங்கியிருக்கிறதல்லவா? அந்தக் குரலுக்கு உரியவர் திருவாளர் ருத்திரா. முன்னாள் கொழும்பு மேயர்; தற்போது கொழும்பு முனிசிபல் கவுன்ஸிலர்.

### உபதேசம்

சம சமாஜக் கட்சி தான் இதுவரை தன் கொள்கைகளை மாற்றாத கட்சி என்றும் அக்கட்சி தான் தமிழ் பேசும் மக்களுக்கு கதி மோட்சம் அளிக்க கூடிய கட்சி என்றும் குழலூதி வருகிறார். அம் மட்டல்லதாம் அந்தக் கட்சியைத்தான் அன்றும் ஆதரித்தாராம்; இன்றும் ஆதரிக்கிறாராம்; என்றுமே ஆதரிப்பாராம். ஆகவே தம்மைப் போலவே தமிழ் பேசும் மக்கள் அனைவரும் அக்கட்சியையே ஆதரிக்க வேண்டுமாம். தாம் வழங்கக் கூடிய புத்திமதியும் விடுக்கக் கூடிய வேண்டுகோளும் அது ஒன்று தானாம் - உபதேசம் செய்கிறது ருத்திராட்சப் பூனை!

### தொண்டு விஷயத்தில் கூடுதலை வேலையும்

சம சமாஜக் கட்சி தான் சிறந்த கட்சி என்று தெரிந்து கொண்ட திரு ருத்திரா அந்தக் கட்சியில் ஏன் ஓர் உறுப்பினராகச் சேரத் தயங்குகிறார்? அணிமையில் நடந்தேறிய கொழும்பு முனிசிபல் சபைத் தேர்தலில் இவர் சுயேச்சை வேஷம் போடாமல் சம சமாஜக் கட்சி அபேட்சகராகவே போட்டியிட்டிருக்கலாமே! ஏன் அப்படிச் செய்யவில்லை. அப்படிச் செய்திருந்தால் தோல்வி கைமேல் கிடைத்திருக்கும் என்பதை முன் கூட்டியே அறிந்து கொண்டாரா?

திரு. ருத்திரா தாம் சமசமாஜக் கட்சி உறுப்பினராகச் சேரவும் மாட்டார்; அக் கட்சி அபேட்சையை நாடவும் மாட்டார். காரணம் உள்ளூர அந்தக் கட்சி மீது அவருக்கு பற்றுமில்லை; நம்பிக்கையும் இல்லை. ஆயினும் தமிழ் பேசும் மக்களுக்கு உபதேசம் செய்யப் புறப்பட்டு விட்டார். அதுதான் சிறந்த கட்சியாம்—அதனால் ஆதரிக்கட்டுமாம் அதை! பொறுப்புள்ள ஒரு மனிதர் பேசக் கூடிய பேச்சு இது—இல்லை?

### மேடை தேடி அலைச்சல்

பாவம், திரு. ருத்திராவுக்கு உள்ள சங்கடம் பலருக்கு தெரியாது. ஆடி அடங்கிய மனிதர் அவர். இப்போதெல்லாம் தேடுவாரற்றுக் கிடக்கிறார். சிறிது காலமாக மேடை எங்காவது கிடைக்குமா என்று பறந்து திரிந்தார். உட்கார முடிந்தது சமசமாஜ மேடையில்தான்.

### சிங்களவர்கருவி ருத்திரா

மேடை அளித்தவர்களும் மூளையோடு தான் அதைச் செய்திருக்கிறார்கள். தமிழ் பேசும் மக்களை, தமிழர் தலைவர்களைத் தாமே திட்டிவிட்டு வடக்கு கிழக்கு மாகாணங்களில் தலைகாட்டக் கூடிய துணிச்சல் சமசமாஜ சிங்களத் தலைவர்களுக்கு இல்லை. அப்படிச் செய்தால் மறைத்து வைத்திருக்கும் தமது இனவெறிக் கொள்கை வெட்ட வெளிச்சமாகி எல்லாமே கெட்டுவிடும் என்பது அவர்களுக்குத் தெரியும். அதனால் இலகுவாகக் கிடைத்த திரு ருத்திராவைக் கருவியாகப் பயன் படுத்தி தமிழ் பேசும் மக்களுக்கும் அவர்கள் தம் தலைவர்களுக்கும் அவரைக் கொண்டு வசைமாரி பொழிவித்து வருகிறார்கள். இதுதான் ருத்திராட்டப் பூனையின் திருஷ்டாந்தம்.

### கொம்யுனிஸ்டு உறவு

சம சமாஜக் கட்சியின் பெயரை உச்சரிக்கத் தொடங்கு முன் திரு ருத்திரா தாம் கொம்யுனிஸ்டுகளுடன் கொண்டாட்டம் வைத்திருந்ததை இப்போது மறந்து விட்டார். மக்களும் அப்படியே மறந்திருப்பார்கள் என்று வீண் கனவு காண்கிறார். அதனால் தான் இன்று புது வேஷம் போட்டுக் கொண்டு வருகிறார்; சம சமாஜக் கட்சியை ஆதரிக்கும்படி தமிழ் பேசும் மக்களுக்கு உபதேசம் செய்கிறார். தாம் செய்து காட்டாத ஒன்றைப் பிறர் செய்ய வேண்டும் என்று எதிர் பார்த்து உபதேசம் செய்யும் பிரகிருதியைப் பற்றி என்ன சொல்ல இருக்கிறது?

### வீரத்துக்கு ஒரு சாம்பிள் அரசி எலிஸபத் விஜயம்

ஒவ்வொரு மேடையிலும் திரு ருத்திரா தம்மை ஓர் தன்மானத் தமிழர் என்றும் வீராதி வீரர் என்றும், தாம் ஏதோ அரிய பெரிய காரியங்களைச் சாதித்து விட்டதாகவும் வீரப்பிரதாபம் பேசத் தவறுவதில்லை.

இவருடைய வீரத்துக்கு ஒரு சாம்பிள் இங்கு தருகிறோம். பிரிட்டிஷ் அரசி இரண்டாவது எலிஸபெத் இலங்கைக்கு விஜயம் செய்தது தெரியுமல்லவா? அவருடைய விஜயத்தை பகிஷ்கரித்து ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக இங்குள்ள சமசமாஜிகள் கொக்கரித்தனர். "...ாதிபத்திய அரசிக்கு சுதந்திர இலங்கையில் இத்தனை கோலாகல வரவேற்பா? கூடாது பகிஷ்கரித்தே தீருவோம்" என்று சவடால் அடித்தனர் மாஜிகள்.

அப்போது கொழும்பு நகர மேயராக—நகர பிதாவாக—இருந்தவர் திரு ருத்திரா. "கடைசி நேரத்தில் காலை வாரிவிடவேண்டும். நகர பிதா இல்லாமல் ஒரு வரவேற்பா? நாமும் பகிஷ்கரித்தால் விஷயம் அப்படியே படுத்துவிடும்" என்று மனப்பால் குடித்துக் கொண்டு இருந்தார் தமது இந்த எண்ணத்தை வெளியிலும் விட்டு விட்டார்.

### சேர் ஜோன் அறிக்கை

விஷயம் அறிந்தார் சேர் ஜோன் கொத்தலாவலை. அப்போது அவர்தான் நாட்டின் பிரதமர். ஒரே ஒரு அறிக்கை விட்டார். "யாராவது அரசியின் பார்வைக்கு எட்டக் கூடியதாக பகிஷ்கரித்து ஆர்ப்பாட்டம் நடத்தினால் அவர்கள் முதலில் பொலீஸ் ஸ்டேஷனுக்கு அல்ல; ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸில் போக நேரிடும். துணிவிருந்தால் யாராவது செய்து பார்க்கட்டும்" என்ற ரீதியில் சர் ஜோன் கொத்தலாவலையின் அறிக்கை அமைந்திருந்தது.

### மாஜிகள் குலைநடுக்கம்

பின்னர் நடந்தது என்ன? பகிஷ்கரிக்கப் போவதாகக் கொக்கரித்த சமசமாஜிகள் கப்சிப். குலை நடுக்கத்தில் அரசி பவனி சென்ற பாதையின் பக்கம் தலைகாட்டவே இல்லை.

### ருத்திரா துடை நடுக்கம்

நல்ல வேளை அன்று இவர்கள் வாலாட்டியிருந்தால் ஒட்ட நறுக்கியிருப்பார் கொத்தலாவலை. கூழ் முட்டையும் கூட்டுமாறும் சிங்களப்பிரதேசத்தில் பரிசு வாங்கிக் கொள்கை மாறிய தேவலத்தை கட்சித் தலைவர்களுக்கு நெற்றிக்கு நேரே சொல்லி மானத்தை வாங்கியவர் திரு. கொத்தலாவலை. அவருக்கு இவர்கள் அஞ்சுவதில் ஆச்சரியமில்லை. இவர்கள் தான் இப்படி யென்றால் இவர்களது கருவியாகப் பயன்பட்டு வரும் பிரகிருதி என்ன செய்தார் தெரியுமா?

சாண்டோ ருத்திரா அவசர அவசரமாகத் தமது கறுத்த அங்கியை எடுத்து மாட்டிக் கொண்டு அரசியை வரவேற்க ஓடோடிச் சென்றார். அவரோடு கூட நின்று படம் பிடித்துக் கொண்டார். அரசியோடு எடுத்த படங்களை இன்னமும் தம்முடைய வீட்டிலும் தமக்குச் சொந்தமான ஸ்தானங்களிலும் தொங்கப் போட்டு அழகு பார்த்துக்கொண்டிருக்கிறார்.

இது தான் அவருடைய வீரம், இந்த லட்சணத்தில் வீறுப்புப் பேச்சு வேறு!

—சிங்கம்.


## ஆஸ்த்மாவால் அவதிப்படும் அன்பர்களுக்கு....

ஆஸ்த்மா என்ற தொய்வு ஏற்படுவதற்கு மார்ச்சளி, மூக்கடைப்பு, இருமல், காலநிலை, மூச்சடைப்பு, மூத்திரக் கோளாறுகள் என்பன போன்ற பல காரணங்கள் உண்டு காரணம் எதுவானாலும்..........................

## ஆஸ்த்மடிக்கா

வியாதியைப் பூரணமாகக் குணமாக்கும் என்பது நம் உத்திரவாதம்.

பாவித்த அன்பர்கள் கூறுவதைக் கேளுங்கள். வணக்கத்துக்குரிய பிதா தோமஸ் (டிரெக்டர் ஜெனரல்) ரோசரி ஆஸ்ரமம் வாசவிளான் எழுதுகிறார்.

தங்களது ஆஸ்த்மடிக்காவைப் பாவித்ததில் என் வியாதியஸ்தர் பெரிதும் குணமடைந்துள்ளார் என்பதை—நன்றியுடன் தெரிவிக்கிறேன்—என் வாழ்த்துக்கள்—ஆஸ்த்மடிக்காவுக்கு

**Rev. Fr. B. A. Thomas (O. M. I.)**
Rosary Asthrama,
VASAVILAN.

எனக்கு வயது 50 க்கு மேலாகிறது—கொழும்பிலுள்ள பெரிய கம்பெனி ஒன்றில் சித்திர லிபிகையாக Draughtsman) வேலை பார்க்கிறேன்.

சென்ற 20 வருட காலமாக ஆஸ்த்மா—மாரடைப்பு, மார்ச்சளி, இரவில் தூக்கமின்மை இவைகளால் பெரும் கஷ்டப் பட்டுள்ளேன், நான் காணாத டாக்டர்கள் இல்லை. எவ்வளவோ ஊசிகள் போட்டும் பலனில்லாமல்இருந்த எனக்கு ஆஸ்த்மடிக்கா 3 பாட்டில்கள் பூரண குணமளித்துள்ளது. என்பதை கடவுள் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன்.

எஸ். ஏ. தோமஸ்,
87, தெலன்கபாத ரோட்,
வத்தளை.

**S. A. Thomas,**
87, Telangapatha Road,
WATTALA.

ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி, இருமல் இவைகளுக்கு ஆஸ்மடிக்கா ஒரு நவீன சஞ்சீவி.

3 அல்லது 4 பாட்டில்கள் தொடர்ச்சியாகப் பாவித்தால் வியாதி பூர்ண குணமடையும் என்பது உத்திரவாதம்.

ஆஸ்த்மடிக்கா சாதாரணம் ரூ. 5/-
ஆஸ்த்மடிக்கா ஸ்பெஷல் ரூ. 15/-
(மிக உபாதைத் தரக்கூடிய ஆஸ்த்மாவுக்கு)

வி. பி. பி. தனி

விபரங்களுக்கும் வி. பி. பி. ஆடர்களுக்கும்,

டாக்டர்

## மொடர்ன் கிளினிக்,

255, காலி ரோட்,
பம்பலப்பிட்டிய கன்வன்ட் எதிரில்
பம்பலப்பிட்டிய
கொழும்பு—4.

கடுகண்ணாவையில் கிடைக்குமிடம்:

**டி. பி. குஞ்சிமூசா & கோ,**
கடுகண்ணாவை.

சம்மாந்துறையில் கிடைக்குமிடம்:

**எம். வெள்ளத்தம்பி,**
புடவை வியாபாரம்,
3-ம் குறிச்சி,
சம்மாந்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மயில்வாகனத்துக்கு வண. பிதா. ஈ. கிரௌதர் சூடு

## சுயேச்சை வேஷத்தில் உலாவும் சமசமாஜி அவர் என்று நிரூபிக்கிறார்

## ஏன் பொய், புளுகு, திருகுதாளம்? உண்மை நிலையை எடுத்துச் சொன்னால் வாக்கு கிடையாது என்ற பயமா?

### இறுதியாக, வாக்குகளை இழப்பதானாலும் கண்ணியத்தை காப்பாற்ற வேண்டுமென்று புத்திமதி

தாம் ஒரு சுயேச்சை அபேட்சகர் என்று சொல்லி மட்டக்களப்புத் தொகுதியில் போட்டியிடும் திரு டி. மயில்வாகனத்தின் வேஷத்தை மட்டக்களப்பு வண. பிதா ஈ. கிரௌதர் கலைத்து விட்டார். திரு மயில்வாகனம் உண்மையில் சம சமாஜ வட்டாரத்துப் பெருச்சாளி என்பதை திரு மயில்வாகனம் தமக்கு எழுதிய கடிதங்களிலிருந்தும் அவரது நடத்தையிலிருந்தும் ஆதாரங்காட்டி நிரூபித்திருக்கிறார்.

"பொய்யும் புனை கதையும் புளுகும் ஏன்? இப்படி எல்லாம் எதற்காகச் சொல்கிறீர்கள்? உண்மையைப் பகிரங்கமாகச் சொன்னால் கொஞ்ச வாக்குகளை இழக்க நேரிடுமே என்ற பயமா? உங்கள் கண்ணியம் ஒன்றை இழப்பதைக் காட்டிலும் உலகத்தில் உள்ள அத்தனை வாக்குகளையுமே இழப்பது நல்லதில்லையா?" -இப்படிக் குத்திக் காட்டித் தாம் திரு மயில்வாகனத்துக்கு 28-2-60ல் எழுதிய கடிதம் ஒன்றில் .வண பிதா ஈ.கிரௌதர் குறிப்பிட்டிருக்கிறார்.

திரு மயில்வாகனம் மட்டக்களப்பு வாழ் கத்தோலிக்கப் பெருமக்களின் வாக்குகளைப் பெற வேண்டி வண. பிதா ஈ.கிரௌதருக்கு பல கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

வண. பிதா கிரௌதரும் தம்முடைய முந்திய கடிதங்களில எதற்காகத் திரு மயில்வாகனத்தை ஆதரிக்க வேண்டும் என்றும் அவருடைய உண்மை நிலைமை என்ன என்றும் கேட்டு எழுதியிருந்தார்.

28-2-60 கடிதத்தில் வண. பிதா கிரௌதர் சொல்லியிருப்பதாவது:—

#### கேள்வியும் பதிலும்

நீங்கள் (திரு டி. மயில்வாகனம்) லங்கா சம சமாஜக் கட்சியிலோ அல்லது வேறு எந்த மார்க்ஸீய இயக்கத்திலோ தலைவராக அல்லது சாதாரண உறுப்பினராக இருந்ததுண்டா என்று எனது 18-1-60 கடிதத்தில் கேட்டிருந்தேன் அல்லவா? கேள்வியின் முதல் பகுதிக்கு மட்டும் பதிலளித்து விட்டு மற்றப் பகுதியை அதாவது மார்க்ஸீய இயக்கங்கள் சம்பந்தப்பட்ட பகுதியை விட்டுவிட்டீர்கள். அதே வேளையில் எந்த அரசியல் கட்சியையும் நீங்கள் சார்ந்திருக்கவில்லையென்று வலுவில் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

#### சமசமாஜ வாலிப முன்னணித் தலைவர்


(மட்டக்களப்பு) சமசமாஜ வாலிப முன்னணித் தலைவராக நீங்கள் தெரிவு செய்யப்பட்டதாக நான் அறிகிறேன். இச் செய்தி 1-11-58 தினகரனில் வெளியிடப்பட்டிருந்தது. அகராதி அர்த்தப்படி பார்த்தால் சமசமாஜ வாலிப முன்னணி அரசியல் கட்சியாக இல்லாமல் இருக்கலாம்.

#### திருகுதாளம் பண்ணுகிறீர்கள்

ஆனால் நீங்கள் அதில் சேர்ந்திருந்தால் அதன் பொருள் நீங்கள் ஒரு மார்க்ஸீய இயக்கத்தில் இருக்கிறீர்கள் என்பதுதான். உங்களைப்போன்ற ஒரு படித்த மனிதர் ஒரு விஷயத்தை எழுத்தில் போடுவதானால் ஆழ்ந்து சிந்தித்துவிட்டுத்தான் அப்படிச் செய்வார். ஆகவே என்னுடைய கருத்து இதுதான்: உங்கள் மார்க்ஸீய இயக்கத் தொடர்பு பற்றி நான் வினவியதற்கு நீங்கள் மழுப்பியதும் தவறான பதில் தந்ததும் தற்செயலாக நடந்ததல்ல. வேண்டுமென்றே செய்திருக்கிறீர்கள். உங்களைப்போன்ற படித்த பெருமைகுரிய ஒரு மனிதர் இந்தவிதமாகத் திருகுதாளம்பண்ணுவது பரிதாபத்துக்கு உரியதாகும்

#### சம சமாஜக் கட்சியை ஆதரிக்க முடிவு

நான் இன்னொரு கேள்வி உங்களைக் கேட்டிருந்தேன். எம் பி யாக வந்தால் நீங்கள் சமசமாஜக் கட்சிக்கோ அல்லது வேறு எந்த மார்க்ஸீய இயக்கத்துக்கோ ஆதரவு கொடுப்பதில்லை என்று வாக்குறுதி அளித்திருக்கிறீர்களா என்ற எனது கேள்விக்கு நீங்கள் பின்வருமாறு பதில் தந்திருக்கிறீர்கள்: "எந்தக் குழுவை ஆதரிப்பேன் அல்லது எதில் சேருவேன் என்பதை இப்போது தீர்மானிக்க முடியாது. அப்படித் தீர்மானிப்பதற்கு முன்னால் தொகுதியில் உள்ளவர்களைக் கலந்து ஆலோசிப்பேன்" இதுவும் ஒரு குள்ளப் பேச்சு உங்களுக்கு இப்போது தீர்மானிக்க முடியாதுதான். ஏனெனில் நீங்கள்தான் சமசமாஜக் கட்சியில் சேர்வது அல்லாவிட்டால் அதை ஆதரிப்பது என்று ஏற்கனவே முடிவு




### பொன்னுச்சியின் மறுமணம்!

### இருதலை ஐயாவின் தரகுவேலை

அகில இலங்கை ஆனைப்பந்தி காங்கிரஸை யு. என். பி. முகமூடியாகப் பாவித்து வருகிறது என்பதை ஐனுப் ஐயாவின் நவீன தரகு வேலை நிரூபிக்கிறது. தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர்கள் தேர்தலில் வெற்றி பெற்றால் யு. என். பி. யிடம் பழைய படியும் தஞ்சம் புகுந்து கொள்வார்கள் என்பது இப்போது தெளிவாகிறது.

ஐனுப் ஐயா கண்டியிலும் மற்றும் பல இடங்களிலும் யு. என். பி. கூட்டங்களில் பேசும் போது மக்கள் அக் கட்சிக்கே வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதே ஐயா யாழ்ப்பாணத்தில் திரு. பொன்னம்பலத்தின் தமிழ்க் காங்கிரஸ் கூட்டத்திலும் பேசினார். அங்கு எல்லோரும் தமிழ்க் காங்கிரஸுக்கே வாக்களிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். அதாவது யு என் பி யும் தமிழ்க் காங்கிரஸும் ஒன்றுதான் என்று சொல்லாமல் சொல்லியிருக்கிறார். அவ்வாறு தலையை ... கட்சியையும் பொன்னம்பலத்தை புது கூட்டி வைக்கும் தரகு வேலையில் ஐனுப் ஐயா ஈடுபட்டிருப்பதை மேலேயுள்ள கூடாரத்துச் சித்திரம் காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதம்

## படு தோல்வி நிச்சயம்

## ஆனால் டிபாஸிட் தப்பலாம்!

### கொழும்புமத்தியில் பாலா டாம்போ

கொழும்பு மத்திய தொகுதியில் சமசமாஜக் கட்சி அபேட்சகரான திரு பாலா தம்பு வெற்றியீட்ட முடியாதெனக் கடந்தவார சுதந்திரனில் புள்ளி விவரங்களுடன் ஆதாரபூர்வமாக எழுதப்பட்ட கட்டுரையைப் படித்தேன்.

தாங்கள் கூறியுள்ளபடியே நடக்கும் என்பதில் எனக்குத் துளிகூடச் சந்தேகம் கிடையாது. நான் சி. எம். யு. வில் ஒரு உறுப்பினன். திரு பாலா தம்புவிடம் நல்லெண்ணமும் அபிமானமும் கொண்டவன். அதனால் என்ன? உண்மையை ஒப்புக்கொண்டு தானே ஆக வேண்டும். நிச்சயமாக திரு பாலா தம்பு படு தோல்வி அடைந்தே தீருவார். ஆனால் ஒரு விஷயம்: தாங்கள் கூறியுள்ளபடி அவர் கட்டுப்பணத்தை இழக்கமாட்டார் என்று நினைக்கிறேன்.

திரு பாலா தம்புவுக்கு தாங்கள் கணக்கிட்டுள்ளபடி 9,000க்கும் 10,000க்கும் இடையில்தான் வாக்குகள் கிடைக்கும். டிபாஸிட்டைப் பாதுகாக்க இத்தொகை போதும். மூவர் போட்டியிடும் ஒரு கூட்டுத் தொகுதியில், அபேட்சகர் ஒருவர் தமது கட்டுப் பணத்தைக் காப்பாற்றுவதற்கு பதிவாகும் மொத்தம் வாக்குத் தொகையில் இருபத்து நாலில் ஒரு பங்கு வாக்குப் பெற்றால் போதும் என்பது தான் சட்டம் என்று நினைக்கிறேன். அப்படியானால் 6666 வாக்குகள் கிடைத்தால் கட்டுப் பணத்தைக் காப்பாற்றிக்கொள்ளலாம் அல்லவா?

இங்ஙனம்
க. சண்முகநாதன்

கொழும்பு-6
7-3-1960.

செய்துவிட்டீர்களே! சமசமாஜக் கட்சியின் அதிகாரபூர்வமான சிங்களப் பத்திரிகையான "சமசமாஜிஸ்ட்" (Sama Samajist) வெளியிட்ட செய்திப்படி நீங்கள் சமசமாஜக் கட்சி தேர்தல் கொள்கைத் திட்டத்தை ஏற்று ஒப்பமிட்டுக் கொடுத்திருக்கிறீர்களே!

#### ஒப்பமிட்டு கொடுத்தீர்கள்

சமசமாஜக் கட்சித் தேர்தல் கொள்கைத் திட்டத்தில் ஒரு அம்சம் அரசாங்கம் கல்வி ஆதிக்கம் செலுத்துவதும் அரசாங்க நன்கொடை பெறும் பாடசாலைகளை எடுத்து நடத்துவதுமாகும். நீங்கள் ஒப்பமிட்டுக்கொடுத்ததோடு இந்தக் கொள்கையை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள் என்று ஆகிறது.

#### யாரை நம்புவது?

ஆனால் நீங்கள் எனக்கு எழுதிய கடிதத்திலும் உங்களுடைய தேர்தல் கொள்கைத் திட்டத்திலும் அரசாங்க நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுத்து நடத்தும் கொள்கையை எதிர்ப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். நாம் யாரை நம்புவது? சமசமாஜக் கட்சி தேர்தல் கொள்கைத் திட்டத்தில் கையொப்பமிட்டுக் கொடுத்த திரு மயில்வாகனத்தையா அல்லது தாம் தேர்தல் கொள்கைத் திட்டம் வெளியிட்டதோடு எனக்கும் கடிதம் எழுதிய திரு. டி. மயில்வாகனத்தையா? அல்லது இரண்டு பேரையுமே நம்பக்கூடாதா?

#### சமசமாஜக் கட்சி சார்பில் சாட்சியம்

தொகுதி எல்லை நிர்ணயக் கமிஷனுக்கு மட்டக்களப்பில் சமசமாஜக் கட்சி சார்பாகச் சாட்சியமளித்தவர்களுள் நீங்களும் ஒருவர் என்று கமிஷன் அறிக்கையில் காணப்பட்டது. இதைத் தொடர்ந்து "நீங்கள் சமசமாஜக் கட்சி உறுப்பினரா?" என்று உங்களைக் கேட்டிருந்தேன் அல்லவா? அதற்கு நீங்கள் என்ன சொன்னீர்கள்? "அறிக்கையில் குறிப்பிடப்பட்ட மற்ற சாட்சியக்காரரின் சார்பாகப் பேசுவதற்காகவே நான் (மயில்வாகனம்) போனேன்" என்று சொல்லியிருந்தீர்கள். இங்கே வெறும் பொய் அல்ல, சுத்த அபத்தம் கூறியிருக்கிறீர்கள். சமசமாஜக் கட்சி சாட்சி என்று கமிஷன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும்போது நீங்கள் சொல்லுகிறீர்கள். "நான் மற்றவர்கள் சார்பில் பேச மட்டும் போனேன்" என்று;

ஒன்பது நாட்களாக ஆலோசித்து இன்னொரு புத்திசாலித்தனமான பேச்சை எடுத்திருக்கிறீர்கள். "மற்றவர்கள் சார்பில் நான் பேசப் போனேன், ஏனெனில் மட்

(13-ம் பக்கம் பார்க்க)

# 'தமிழ் பேசும் இனம் இழித்துப் பழித்து

## சித்திரவதை செய்து

### சீரழிக்கப்படுவதை நான் சகியேன்

## அதன் வாழ்வுக்காக பாடுபடுவேன்- அது தேசத் துரோகம் என்றால்

### தூக்குக் கயிற்றில் தொங்கவும் நான் தயார்'

## இப்படி உணர்ச்சியோடு கூறினர்

### கோப்பாய்க் கோமான் திரு. [redacted]வன்னியசிங்கம்

வண்டமிழ் பேசும் இனத்தை வாழ்வித்த வன்னியசிங்கம் அவர்கள் மறைந்து இன்று ஏறக்குறைய ஆறு மாதங்கள் ஆகின்றன. நாட்கள் நகர நகர மறைந்தவர் நினைவும் மெல்ல மெல்ல எம் நினைவிலிருந்து மறைவதுதான் உலக இயற்கை. ஆனால் நாட்கள் கிழமைகளாக மாறி கிழமைகள் மாதங்களாக மாறி அரை ஆண்டு கழிகின்ற நேரத்திலும் அவர் நினைவு எம் நெஞ்சிலிருந்து அகல மறுக்கிறது. மாறாக காலம் செல்லச் செல்ல அவரின் திருவுருவம், அவர் ஆற்றிய அளப்பரிய தொண்டுகள் எம் நினைவலைகளில் மோதி "ஏ கூற்றுவனே ஏன் எம் வன்னியசிங்கம் அவர்களை எம்மிடமிருந்து பிரித்துச் சென்றாய்? தனக்காக வாழாது தனது குடும்பத்துக்காக வாழாது தமிழ் பேசும் இனத்துக்காக இரவு பகல் என்று பாராது ஓயாது உழைத்து உருக்குலைந்தது அவர் செய்த மன்னிக்க முடியாத தவறா? தம்முடைய இனத்திற்கும் தாம் பேசும் மொழிக்கும் தாம் வாழும் நாட்டிற்கும் அழிவு தேடுவதே தம் வாழ்வின் இலட்சியம் என்று வாழும் மக்கட் பதடிகள் தொடர்ந்து வாழும் பொழுது ஏன் எம் தமிழின் உரிமைக் காவலனாகத் திகழ்ந்த கோப்பாய்க் கோமான் வன்னியசிங்கம் அவர்களைப் பறித்துச் சென்றாய்?" என்று எம்மை அறியாமலே நாம் புலம்ப நேரிடுகிறது. ஆனால் விதியின் விளையாட்டிற்கு விளக்கம் கூற நாம் யார்?

#### முப்பணி

பறிக்கப்பட்ட பைந்தமிழ் மொழி, நாள்தோறும் பறிக்கப்பட்டு வரும் வடக்குக் கிழக்காம் வாழ்விடம், தமிழ் பேசும் இனத்தின் முக்கிய அங்கமாய் விளங்கும் மலைநாட்டுத் தமிழரின் குடியுரிமை வாக்குரிமை ஆகிய அனைத்தினையும் மீட்கும் நோக்குடனும், நிலையான வாழ்வை தமிழ் பேசும் இனம் பெற கூட்டரசு அடிப்படையில் தமிழரசு நிறுவும் இலட்சியத்துடனும் அவர் ஆற்றிய பணி சொல்லில் அடங்காது.

#### தாயகத்தை காப்பாற்றிய தமிழ் அண்ணல்

அவரோடு தமிழ் பேசும் இனத்தின் வருங்கால வாழ்வைப்பற்றி பேசினால் அவர் தம் உரையாடலில் அடிக்கடி ஒரு பேருண்மையை வலியுறுத்துவார்.

"தமிழ் பேசும் இனம் தாம் இழந்த எந்த உரிமையையும் போராடி மீண்டும் பெறலாம். ஆனால் தாம் வழி வழியாக வாழும் வாழ்விடத்தை-தாயகத்தை அவர்கள் பறிகொடுப்பார்களாயின் அதை மீண்டும் மீட்பது மிகக் கடினம்" என்று சொல்லுவார்.

தாயகத்தை இழப்போமாயின் முதலில் நாம் பிரதிநிதித்துவத்தை இழப்போம்-அதை அடுத்து பிரதிநிதித்துவம் குறைந்த சிறு இனம் என்று கருதப்பட்டு, எமது குரலுக்கே பாராளுமன்றத்தில் மதிப்பிருக்காது. இறுதியில் தமிழ் பேசும் இனம் ஒரு தனி இனம் (Racial Identity) என்ற பண்பே கெட்டு காயுமற்ற கறியுமற்ற சாம்பார் நிலைக்குத்தான் தமிழினம் வந்து அழிவுறும் என்றும் அவர் கூறுவார்.

'தனக்கென்ற தனியிடமற்ற பறங்கியரிலும் பாழான நிலைக்கு பைந்தமிழ் பேசும் இனம் இழிந்து அழிவுறுவதை நான் தாங்கேன்' என்று அவர் உணர்ச்சியோடு கூறிய கருத்துக்களை இன்று நினைத்தாற்கூட கண்ணீர் ஆறாகப் பெருகுகிறது. இந்த அடிப்படையில்தான் தமிழ் பேசும் இனத்தின் தாயகத்தை காப்பாற்ற பதவிக்குளம், பாவற்குளம், செட்டிகுளம், முதலிக்குளம் என்று ஓடோடித் திரிந்து சிங்களக் குடியேற்றத்தை தடுத்து நிறுத்தி வெற்றி கண்டார்.

இனவெறிகொண்ட முன்னாள் காணி அமைச்சர் திரு சி. பி. டி. சில்வாவோடு பன்முறை போர் தொடுத்து முதலிக்குளத்தில் தமிழ் பேசும் மக்களை குடியேற்றினர். இதனால் ஈழத் தமிழகத்தின் தலைநகராய் விளங்க இருக்கும் திருமலையைக் காப்பாற்றிய பெருமை பெருமளவு அவரையே சாரும். அவரின் இச்செய்கை ஒன்

ஈழவேந்தன்

றிற்கே எமது வழித்தோன்றல்கள் அவரை வாயார வாழ்த்துவது உறுதி.

#### மலைநாட்டுத் தமிழரும் அவர் பணியும்

மலைநாட்டுத் தமிழ் மக்கள் தாம் இழந்த உரிமைகளைப் பெறுவதற்காக அவர் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் புறத்தேயும் வாதாடிய பெருமை எம் நினைவிலிருந்து என்றும் அகலாது.

"எமது முற்போக்கு சக்திகள் குறிப்பிடுவது போல் வெறும் பொருளாதார அடிப்படையில் மலைநாட்டு தமிழ் தொழிலாளரின் உரிமைகள் பறிக்கப்படவில்லை. ஆனால் தமிழ்த் தொழிலாளிகள் என்ற அடிப்படையில்தான் அவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன. எங்கேயாவது சிங்களத் தொழிலாளியின் உரிமை பறிக்கப்பட்டதா? அப்படி பறித்த பின்பு ஒரு சிங்கள அரசாங்கம் நிலைத்து நிற்க முடியுமா? ஆதலால் மலைநாட்டுத் தமிழர் பிரச்னை பொருளாதார பிரச்னை அல்ல. அது முழுக்க முழுக்க இனப் பிரச்னைதான்—ஆம் தமிழர் பிரச்னைதான்" என்று சில காலத்திற்கு முன்பு கொழும்பு விவேகானந்த சபையில் திரு வன்னியசிங்கம் அவர்கள் கூறிய கூற்று அவரின் கூரிய மதியை எடுத்துக்காட்டுகிறது.

சமசமாஜத் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கு தனித் தொகுதியை எதிர்த்த ஒரவஞ்சனையை குத்திக்காட்டி இது முற்போக்குச் சக்திகளின் உட்போக்கை எடுத்துக்காட்டவில்லையா என்று அவர் கேட்ட கேள்வியை நாம் மறப்பதற்கில்லை. மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கும் ஏனைய வடக்கு கிழக்கு மாகாண மக்களுக்கும் நெருங்கிய உறவும் உள்ளம் கலக்கும் பண்பும் ஏற்பட்டால்தான் தமிழ் இனம் ஒரு பலம்பெற்ற இனமாக விளங்கும் என்பதை உணர்ந்து வடக்கு கிழக்கு மாகாண கல்லூரிகளில் மலைநாட்டு மாணவ மாணவிகள் பயில வாய்ப்பு செய்த வள்ளல் தன்மையை எந்தத் தமிழ் மகனும் மறக்க முடியாது.

#### தமிழின் உருவம்

சுருங்கக்கூறின் அவரின் [illegible] தமிழ் பேசும் இனத்தை வட்டமிட்டபடியே விளங்கின.

தமிழினத்தின் வளமான வாழ்வின்பொருட்டு அறப்போர் தொடுத்து தாக்கிலிடப்பட்டு இறப்பதைக்கூட அவர் வரவேற்றார். 1957ல் நடந்த பாராளுமன்ற கூட்டத்தில் அவர் ஆற்றிய ஆழமிக்க சொற்பெருக்கு அவரின் உள்ளக் குமுறலை எடுத்துக்காட்டுகிறது.

#### உள்ளக் குமுறல்

"ஒருவன் தன் மொழியுரிமைக்காக போராடுவது, அதேசமயம் மற்றொருவரின் மொழிக்கு கேடு பயக்காது. சிங்களத்தோடு செந்தமிழுக்கு ஒத்த உரிமை வழங்க வேண்டுமென கேட்பது தேசத்துரோகமென்றால்—

"எமதுமரபு வழித்தாயகத்தின் அரசியல், பொருளாதாரம் பண்பாடு முதலியன சிங்களப் படையெடுப்பால் அழிந்தொழியாது இருக்க போராடுவது தேசத்துரோகமென்றால்—

"இந்தநாட்டையேதங்கள் தாயகமாக கொண்டு அதன் வருவாயின் நூற்றுக்கு அறுபது சத வீதத்தை நல்கும தமிழ் தொழிலாளர்களது குடியுரிமை - வாக்குரிமைக்கு போராடுவது தேசத்துரோகமென்றால்—

"இதே, தமிழ்த் தொழிலாளர்களது அடிமை நிலையைப் போக்கப் போராடுவது தேசத்துரோகமென்றால்—

"இன்றுஇலங்கையில்உள்ள அரசியல் அமைப்பை மாற்றி கூட்டாட்சி அடிப்படையில் அதிகாரத்தைப் பிரித்து அதே நேரத்தில் நாட்டைப் பிளக்காது. ஒரு அரசியல் அமைப்புக்கு வழிகோல நாம் அறப்போர் தொடுப்பது தேசத்துரோகமென்றால்—

"இத்தனைதேசத்துரோகங்களையும் மொத்தமாக நிறைவேற்றி அதன் பலாபலன்களை மகிழ்ச்சியோடு அனுபவிப்பேனே ஒழிய, எனது இனம் ஒவ்வொரு திருப்பத்திலும் இழித்து பழிக்கப்பட்டு சிதைந்து சீரழிந்து காலப்போக்கில் அழிவதை சகியேன். இனத்தின் உரிமைக்காக போர் தொடுப்பதால் தேசத்துரோகியென குற்றஞ்சாட்டப்பட்டு தூக்குக் கயிற்றில் தொங்கவிடப் படுவதையே நான் வரவேற்கிறேன்" என்றார்.

If to fight for one's language, not to pull down others' language but secure for Tamil its rightful place alongside with Sinhalese is treason—

If to defend our traditional homelands against infiltration and invasion by another set of people in a manner gravely prejudicial, and detrimental to our political economic and cultural interests is treason—

(14-ம் பக்கம் பார்க்க)

# அம்பாறைக் கச்சேரி

## திறப்பது கைவிடப்பட்டது

## பொது ஜன எதிர்ப்புக்கு காபந்து பிரதமர் பணிந்தார்

### காரியப்பர் முஸ்தபா முகங்களில் கரி!

முறைப்படி கல்முனையில் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டிய கச்சேரி, ஒத்துப்பாடி இனத்தைக் காட்டிக்கொடுத்த முதல் தர முஸ்லிம் துரோகிகளான மாமன் ஜனாப் காரியப்பர் மற்றும் மருமகர் ஜனாப் எம். எம். முஸ்தபா ஆகியோரின் திருப்பணியால் அம்பாறையில் ஸ்தாபிக்கப்பட்டது தெரிந்ததே.

அந்தக் கச்சேரியைத் திறப்பதில்லை என்று காபந்து அரசாங்கம் பிரதமர் தஹநாயகா கடந்த வாரம் அம்பாறை சென்று பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

இதனால் பொதுமக்கள் இயக்கம் வென்றது. தமிழரசுப் பிரமுகர்களான எம். மாணிக்கம், ஜனாப் மஷூர் மௌலானா, எஸ். எம். இராசமாணிக்கம், செ. இராசதுரை ஆகியோர் எடுத்த எதிர்ப்பு நடவடிக்கைகள் பலனளித்தன.

கல்முனையிலும் கல்முனைக்குத் தெற்கேயும் வாழும் முஸ்லிம் மக்களுக்காக கல்முனையில் ஸ்தாபிக்கப்பட வேண்டிய கச்சேரி, சிங்கள மக்கள் வாழும் அம்பாறைக்குக் கொண்டு செல்லப்படுகிறது என்ற செய்தியை அம்பலப்படுத்தி பொது மஹா ஜனங்களின் எதிர்ப்பைக் கிளப்பி விட்டது சுதந்திரன்தான் என்பது நேயர்கள் அறிந்ததே.

அம்பாறையில் கச்சேரி ஸ்தாபிப்பது என்று முடிவு செய்யப்பட்ட நாள் தொடக்கம் தமிழரசுக் கட்சியினர் அதற்கு ஆட்சேபம் தெரிவித்தனர், குறிப்பாக திரு எம். மாணிக்கம் பொது ஜன எதிர்ப்பு இயக்கத்துக்கு தலைமை தாங்கிப் பணியாற்றினார். இவர் குடும்பமே இம் முயற்சியில் முழு மூச்சாக ஈடுபட்டு இரவு பகலாக உழைத்தது. சம்பந்தப்பட்டவர்களுக்கு மகஜர்கள் ஆட்சேபனைத் தந்திகள் எல்லாம் அனுப்பப்பட்டன.

#### அரசாங்கம் பணிந்தது

இதன் பயனாக அம்பாறைக் கச்சேரியின் ஸ்தாபிதம் நிறுத்தப்பட்டுள்ளது. அரசாங்கம் பணிந்து கொடுத்தது. கடந்த வாரம் அம்பாறைக் கச்சேரியைத் திறந்து வைக்க அம்பாறை சென்ற காபந்து அரசாங்கப் பிரதமர் திரு தஹநாயகா பிரஸ்தாப கச்சேரி வேலை செய்வது நிறுத்தப்பட்டுள்ள செய்தியைத் தாமாகவே வெளியிட்டார்.

இப்படி நடக்கப் போகிறது என்பதைத் ஏற்கனவே மணந்து பிடித்துக்கொண்ட மாமனும் மருகரும் திரு தஹநாயகாவை வரவேற்க அம்பாறை செல்வதையே நிறுத்திக்கொண்டார்கள். தமது நயவஞ்சக எண்ணம் ஈடேறவில்லையே என்பதில் ஏற்பட்ட ஆத்திரம் காரணமாக தம்மை மந்திரிகளாக்கி கொழுத்த சம்பளம்

(11-ம் பக்கம் பார்க்க)


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்:

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளிவேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, கிரமிகு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் வாந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75 சிறியது ரூ. 3-00

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சிறுபான்மையோர் உரிமை பெறவழி

## அண்டிப் போவதல்ல முண்டி நிற்பதுதான்!

## உலக வரலாறு காட்டும் உதாரணங்கள் பலப்பல

## தமிழ் பேசும் மக்கள் தாமாகப் போராடியே உரிமைகளைப் பெறவேண்டும்

### மாஜிகளை, தோழர்களை நம்பியும் பயனில்லை

பாரிஸ்டர் ஜீ. ஜீ. பொன்னம்பலம், இளைப்பாறிய கல்லூரி அதிபர் வீராதி வீரசிங்கம், சர்வகலாசாலைச் சரித்திரப் பூச்சி மட்டக்களப்பு மயில்வாகனம், மாஜி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் வி. நல்லையா இவர்களுக்கு சரித்திரம் தெரியுமா? தெரியவே தெரியாது என்கிறோம். மறுக்க முடியுமா?

பெரும்பான்மை மக்களைப் "பிளீஸ்" பண்ணி, அவர்களுடைய முதுகைச் சொறிந்து, சப்பாத்தைத் துடைத்துத்தான் உரிமை பெறவேண்டும், சலுகை பெற வேண்டும் என்று உபதேசிக்கிறார்களே இவர்கள்! ஒத்துழைப்புக் கொடுத்து மந்திரிப் பதவியேற்றுத்தான் சோடா பாக்டரியும், காகித பாக்டரியும் பெற முடியும் என்று ஆசை காட்டுகிறார்களே இவர்கள்! இவர்கள் அறிவார்களா உலக வரலாற்றை?

சுவிட்சர்லாந்து, இந்தியா, பாகிஸ்தான், கனடா, அயர்லாந்து, சைப்பிரஸ்—இவை கூறும் சரித்திரம் என்ன? சிறுபான்மையோர் இழந்த உரிமைகளைப் பெற ஒரே வழி போராட்டம் என்றுதான் சரித்திரங்கள் கூறுகின்றன, சம்பவங்கள் காட்டுகின்றன, வரலாறுகள் நிரூபிக்கின்றன.

அணைந்து நடப்பதாலும், அண்டிப் போவதாலும் மண்டியிடுவதாலும், ஒரு இனம் அடிமைப்படலாமே தவிர விடுதலையடைய முடியாது. மேற் கூறிய பிரகிருதிகளுக்கு இந்த உண்மை தெரியாவிட்டால் இக் கட்டுரையைப் படித்தாவது தெரிந்து கொள்ளட்டும்.

—ஆசிரியர்.

க. மகேசன்
பி. ஏ. (பொருளாதாரம்)

ஒடுக்கப்பட்ட ஒரு இனம் — சிறுபான்மையாயிருக்கலாம் அல்லது பெரும்பான்மையாயிருக்கலாம் — தனது உரிமைக்காகப் போராடி வெற்றி காண வேண்டுமாயின் "தன் கையே தனக்குத் துணை" என்ற தத்துவத்தைத்தான் மேற்கொள்ள வேண்டும். அவர்களது சொந்த முயற்சியினாற்றான் தமது போராட்டத்தில் வெற்றி காண முடியும், இதுதான் சரித்திரம் கண்ட உண்மை. சுவிற்சர்லாந்து, கனடா, அயர்லாந்து, இந்தியா, சைப்பிரஸ், முதலிய நாடுகளின் சரித்திரம் இதைத்தான் கூறுகிறது. முடிந்த கால இலங்கைச் சரித்திரமும் இதனை நிரூபிக்கின்றது. ஏன், வருங்கால இலங்கையிலும் இவ்வுண்மையைத்தான் உணரப் போகிறோம். பிறருடைய நல்லெண்ணத்தையும் பெற எத்தனிக்க வேண்டும். தந்தால் நன்றியுடன் ஏற்றுக் கொள்வோம். அங்ஙனம் கிடையாதொழியின் அதற்காகக் காத்திருக்க முடியாது.

### இரக்கத்தால் உரிமை கிடைக்காது

எந்த நல்லெண்ணம் படைத்த பெரும்பான்மையினரும் சிறுபான்மையினரிடத்தில் தாம் கொண்ட இரக்கத்தின் பொருட்டு (On humanitarian grounds) அவர்களது உரிமைகளை வழங்கமாட்டார்கள். ஒருவேளை தனிப்பட்டவர்களுக்கிடையில் இது நிகழலாம். ஆனால் சமுதாய ரீதியில் இது நடவாத காரியம். சூழ்நிலையால் உந்தப்பட்டுத்தான் உரிமையை வழங்குவார்கள். சிறுபான்மையினரின் உரிமைகள் பறிக்கப்பட்டதன் காரணமாக நாட்டில் அமைதியின்மை, நிதி நெருக்கடி, பொருளாதார மந்தம், நிர்வாக ஒழுங்கு சீர்குலைதல் முதலிய இன்னல்கள் ஏற்பட்டு அதனால் பெரும்பான்மைச் சமூகத்தார் அடிக்கடி பாதிக்கப்படுவார்களேயானால், இந்தச் சிறுபான்மையரை அழித்தொழிப்பதற்கு வேறு வழிவகை இல்லையெனக் காண்பார்களேயானால், நசுக்குவதிலும் பார்க்க விட்டுக்கொடுப்பது தமக்கு நன்மை பயக்கும் என்பதை உணர்வார்கள். அப்போதுதான் நல்லெண்ணம் படைத்த சிலரின் உதவியோடு சிறுபான்மையினரின் உரிமை வழங்கப்படும்.

### இந்தியாவில் நடந்தது

அகில உலக வரலாறு அனைத்தையுமே இக்கூற்றுக்கு உதாரணமாகக்காட்ட முடியும். இந்திய நாட்டிலே போன இருபது ஆண்டுகளுக்குள் நடந்த சம்பவம். அங்கு நாட்டிலும், பாராளுமன்றத்திலும் சிறுபான்மையராயிருந்த முஸ்லிம்கள் தமது உரிமைகளை இனவாரியாக நின்று போராடித் தானே பெற்றார்கள். தேசியவாரியாய் நின்று பெற முடியாததை இனவாரியாகப் போராடிப் பெற்றார்கள். அங்கு அன்று அகில இந்தியக் காங்கிரஸ் என்ற தேசிய இயக்கத்தின் முன்னணியில் நின்ற காந்தி, நேரு, படேல், இராசகோபாலாச்சாரி போன்ற பெரியார்களிலும் முன்னேற்றவாதிகளா எமது நாட்டுத் தேசியவாதிகளாகிய என். எம். பெரேராவும் பீற்றர் கெனமனும்? அப்பெரியார்களாற் செய்ய முடியாத ஒன்றை இவர்களாற் செய்ய முடியுமா? அப்படியாயின் இவர்களிடத்தில் தமிழினம் நம்பிக்கை வைத்திருப்பது அறியாமை அல்லவா?

### காத்திருப்பது முட்டாள்தனம்!

சென்னையிலே, தமிழ் நாட்டிலே தமிழ் இன்று (State Language) நாட்டு மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது யாருடைய முயற்சியால் தெரியுமா? தேசியக் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் முதலிய கட்சிகளின் முயற்சியாலா அல்லது தமிழ் மக்களும் மற்றும் இனத்தவர்களும் இனவாரியாக நின்று போராடிய காரணத்தினாலா என்பதைத் தமிழ் மக்கள் அறிவர்.

நாம் ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்திருப்பதிற் தவறில்லை. ஆனால் ஜனநாயகம் என்றால் இனவாரியான பெரும்பான்மையர் கொடுப்பதை ஏற்று வாழ்வது சிறுபான்மையரின் கடமை என்று பொருள் கொள்வது மூடத்தனம். அது உண்மையான ஜனநாயகமுமல்ல. ஜின்னா தலைமையில் ஒன்று கூடிப் போராடாது விட்டால் பாக்கிஸ்தானியர் தனி நாடு பெற்றிருக்க முடியாது. அவர்கள் ஜனநாயகத்தின் பேரில் பெரும்பான்மை வாக்குகளைக் காத்திருந்தால் பாகிஸ்தான் பெற்றிருப்பார்களா?

### கனடாவிலும் இதே கதைதான்

கனடாவை எடுத்துக் கொண்டாலும் இதே நிலைதான். அங்கு சிறுபான்மையினராய் பிரெஞ்சுக்காரர் தமது உரிமைகளைப் பெறுவதற்காக பொது சபையில் (House of Commons) பெரும்பான்மை வாக்குகள் பெற வேண்டுமென்றும் அதற்காகப் பெரும்பான்மையராகிய ஆங்கிலேயருடன் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கருத[illegible] படிக் கருதியிரு[illegible] அது கைகூடியிருக்காது. இனவாரியாக ஒருமித்து நின்று போராடினார்கள். கனடாவை ஆங்கிலேயர் மயமாக்க வேண்டுமென்ற ஆங்கிலேய இன வெறியர்களின் கொள்கை தகர்ந்து சமஷ்டி அடிப்படையில் ஒரு கூட்டாட்சி நிறுவ உடன்பட்டார்கள். பிரெஞ்சுக்காரர் தமது உரிமைகளைப் பெற்றுக் கொண்டார்கள். அதன் பின் சிறுபான்மையருக்கும் பெரும்பான்மையருக்குமிடையில் நல்லெண்ணமும் சமாதானமும் ஏற்பட்டன.

### ஐறிஷ் மக்களின் போராட்டம்

அவ்வாறே அயர்லாந்து மக்களும் பல்லாண்டுகளாக இனவாரியாக நின்று போராடி ஈற்றில் பெரும்பான்மையரும், ஏகாதிபத்தியவாதிகளுமாகிய ஆங்கிலேயரைப் பணிய வைத்தார்கள். ஆங்கிலேயர் ஐறிஷ் மக்களை நசுக்காமல், நல்லெண்ணத்துடன் அவர்களது உரிமைகளைக் கொடுத்திருந்தால் அவர்கள் தனி நாடாகப் பிரிந்திருக்க மாட்டார்கள்.

ஜனநாயகத்திற்குப் பிறப்பிடமான இங்கிலாந்தில் வாழுகின்ற நல்லறிவு படைத்த ஜனநாயகவாதிகளான பெரும்பான்மையினரே தமது உரிமைகளுக்காக நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகப் போராடிய ஐறிஷ் மக்களுக்கு மனமுவந்து உரிமை வழங்கத் தயங்கினால், ஜனநாயகம் அரும்பிலேயிருக்கும் இந்நாட்டில் வாழும் பெரும்பான்மையரின் தயவினால் நாம் [illegible] பெருந்துமா?

### சைப்பிரஸில் துருக்கியர் சாதனை

சைப்பிரஸ் தீவில் நடந்ததைப் பாருங்கள். அங்கு சிறுபான்மையராய் வாழும் துருக்கியர் தமக்குரிய உரிமைகளை அணுவளவும் தவறாது பெற்றுக் கொண்டார்கள். தேசாதிபதி தேர்தலில், மந்திரி சபையில், பாராளுமன்றத்தில் நாட்டு நிர்வாக உத்தியோகத்தர் தேர்வில், ஏன் இராணுவத்திற் கூட விதாசாரப்படி உரிமை பெற்றார்கள் இந்த உரிமைகளையெல்லாம் பெரும்பான்மையராகிய கிரேக்கருடன் தேசியவாரியாக ஒத்துழைத்த காரணத்தால் அவர்கள் பெறவில்லை. கிரேக்க வகுப்பு வாதத்தை இனவாரியாக எதிர்த்து நின்று போராடியதன் பலன்தான் அவர்கள் பெற்ற உரிமைகள். இவற்றையும் இன்னோரன்ன பிற உரிமைப் போராட்டங்களையும் இன்னும் அறியாமலிருக்கின்றார்களா தமிழ் மக்கள்?


அப்படி அறிந்திருந்தும் தமிழரசுக் கட்சியினால் என்றைக்காவது பாராளுமன்றத்திற் பெரும்பான்மை அங்கத்துவம் பெற முடியுமா? இக்கட்சியினர் எப்பொழுதும் சிறுபான்மையினர் தானே! இவர்களால் எப்படித் தமது குறிக்கோளை நிறைவேற்ற முடியும்? என்றெல்லாம் முட்டாள்தனமான வினாக்களை எழுப்புகிறார்கள்.

### நம்பிக் கெட்டவர்கள்

சரி, உலக சரித்திர உண்மையைத் தான் உணரத் தவறினாலும் எமது சொந்த நாட்டு வரலாற்றைத் தானும் மறுக்க முடியுமா? எமது அரசியல் வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும் போது அரசியல் வாழ்விலே அடிக்கடி நம்பிக் கெட்டவர்கள் தமிழர் என்பது புலப்படும். மாபெருந் தலைவராயிருந்து சிங்கள மக்களுக்கெல்லாம் பெருந் தொண்டு செய்த பொன். இராமநாதன், அருணாசலம்போன்றவர்கள் கூட நம்பிக் கெட்ட நம்மவர்கள் தான். பொன் அருணாசலத்தை இலங்கைத் தேசிய காங்கிரசிலிருந்தும் பிரித்துவிட்டது சிங்கள வகுப்பு வாதம். 1936ம் ஆண்டு தனிச் சிங்கள மந்திரிக்குழுவை அமைத்தது சிங்கள வகுப்பு வாதம். இந்தத் தமிழரசுக் கட்சியாலே தான் எல்லாம் ஏற்பட்டதென்றும் சிங்கள வகுப்புவாதத்திற்கு அடிகோலியது தமிழரசுக் கட்சிதானென்றும் பிரசாரஞ் செய்கிறார்களே இடதுசாரிகள், இவர்கள் கூற்றுப் பொருந்துமா? அவ்வாறே ஐக்கிய தேசியக் கட்சி என்றமாயத் திரையில் அகப்பட்டு நம்பிக் கெட்டபேர்வழிதான் எமது ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களும், டி. எஸ். சேனநாயக்காவின் குடியேற்றத்திட்டங்களினாற் தமிழ்ப் பிரதேசங்கள் சூறையாடப் படும் போதும், பின்மலைநாட்டுத் தமிழர் அரசியல் அனாதைகளாக்

(11-ம் பக்கம் பார்க்க)

இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது
உஷா தையல் மெஷின்களே




ஒருவரின் ஆயுள் காலம் முழுவதும் உழைக்கக் கூடிய வெகுமதி
மாதத் தவணைக் கட்டணங்களில் பெறுக் கொள்ளலாம்,
இலங்கை பூராகவும் விற்பனையாகிறது;
உங்கள் உள்ளூர் விற்பனையாளரைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:
ரெய்மூசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11
போன்: 4243, 5060
கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1960 மார்ச் மாதம் 13-ந் தேதி

194ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.
தொலை பேசி எண்: 3411. த. பெ. 1183


## யாரைத் தேர்வது?

அடுத்தவாரம் நடைபெறப்போகின்ற பொதுத் தேர்தலில் இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களாகிய நாம் யார் யாரைப் பாராளுமன்றத்துக்கு நமது பிரதிநிதிகளாக அனுப்பி வைக்கப்போகிறோம்?

குத்துக்கரண வீரர்களான 'வெட்டிக்காரர்'களையா அல்லது உறுதியான கொள்கையோடு கூடிய கட்சிக்காரர்களையா? எதிலுமே ஒட்டிக்கொள்ளாத கட்டாக்காலி உதிரிகளையா? அடிக்கடி நிறம் மாறும் பச்சோந்திகளையா? அல்லது தீரமும் திறமையும் பெற்ற நெறி தவறா நேர்மையாளர்களையா?

1956ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து 16 தமிழ்ப் பிரதிநிதிகள் தேர்ந்தனுப்பப்பட்டனர். இவர்களில் 10 பேர் தமிழரசுக் கட்சியைச் சார்ந்தவர்களாகவும் 6 பேர் வேறு அரசியல் கட்சியினராகவும், உதிரிகளாகவும் இருந்தனர்.

பின்னர் தமிழரசுக் கட்சியைச் சார்ந்த 10 பேரில் இருவர்—முதலியார் எம். எஸ். காரியப்பர், ஜனாப் எம். எம். முஸ்தபா ஆகியோர்—மறுபக்கம் புரண்டனர். அதன்படி தமிழ்ப் பிரதேசத்திலிருந்து வந்த 16 பேர்களில் 8 பேர் ஒரு பக்கமாகவும் 8 பேர் எதிர்பக்கமாகவும் நின்றனர்.

ஆனால் 8 பேர் ஒரு கட்சியின்கீழ், ஒரே கொள்கையோடு கட்டுப்பாடாக நின்றனர். மற்ற 8 பேர் வெவ்வேறு கொள்கைகளோடு வெவ்வேறு இலட்சியங்களோடு தனித் தனியாக நின்றனர்.

தனித்தனியாக நின்றவர்களுள் விண்ணாதி விண்ணர்களும், வீணாதி வீணர்களும் இருந்தனர். வீராதி வீரர் பொன்னம்பலம், சூராதி சூரர் சுந்தரலிங்கம், மன்னாதி மன்னர் எதிர்மன்னசிங்கம், காரியவாதி காரியப்பர், மாஸ்கோ மணி கந்தையா எல்லோரும் கட்டாக்காலி எட்டுப் பேராக விளங்கினர். தமிழரசுக் கட்சியைச் சார்ந்த எட்டுப் பேர் மட்டும் ஒரு கயிற்றில் கட்டியவர்களாக ஒன்றாக நின்றனர்.

இந்த இரண்டு பிரிவிலும் எந்தப் பிரிவுக்கு அதிக பலமும, அதிக செல்வாக்கும், அதிக மதிப்பும் இருந்தது என்பதைத் தமிழ்ப் பொதுமக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

எந்த எட்டுப் பேருடைய கோரிக்கைக்கு மக்கள் கட்டுப்பட்டார்கள். அரசாங்கம், பயந்தது, ஆட்சியாளர் பணிந்தனர், பிரதமர் பண்டாரநாயகா செவி கொடுத்தார்? எம். ஈ. பி. அரசாங்கம் மிக உன்னத நிலையிலிருந்த வேளையிலேயே யாரை அழைத்து உடன்படிக்கை செய்ய நேர்ந்தது என்பதைத் தமிழ் மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எந்த எட்டுப் பேரும் ஒன்றாய் நின்றதனால் மொழியுரிமைப் போராட்டங்களை நடத்த முடிந்தது? சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த முடிந்தது என்பதை நமது மக்கள் நடுநின்று சிர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

எதிர்ப்பக்கம் நின்ற எட்டுப் பேரும் தமிழரசுக் கட்சியினருக்குச் சரிசமதையான தொகையினராக இருந்தும் அவர்கள் செய்தது என்ன? சாதித்தது யாது? சுட்டிக்காட்டிச் சொல்ல முடியுமா? ஒருசிலர் தமக்குத் தமக்கு அரை மந்திரி முழு மந்திரிப் பதவிகளை யாசித்துக்கொண்டார்கள். திரு பொன்னம்பலம், திரு சுந்தரலிங்கம்போன்றோர் பாராளுமன்றத்துக்கும் சமுகம் கொடுக்காமல் பூனையைப்போல் பதுங்கிக்கொண்டார்கள். அல்லது வெளியூர்களுக்கு உல்லாசப் பிரயாணம் சென்றார்கள்.

அந்த எட்டுப் பேரும் சேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ ஏதாவது போராட்டம் நடத்தினார்களா? சரியான காரியத்தையோ அன்றிப் பிழையான காரியத்தையோ செய்தார்களா? செய்யவில்லை! செய்ய முடியவில்லை. காரணம் அவர்கள் ஒன்றாக நில்லாமல் உதிரிகளாக நின்றமைதான்!

தமிழரசுக் கட்சி என்ன செய்தது என்று கேட்கிறார்கள்? எவ்வளவோ செய்திருக்கிறது என்பதுதான் அதற்குப் பதில்.

சிங்களம் மட்டும் சட்டம் வந்தால் எதிர்த்துப் போராடுவோம் என்று சொன்னார்கள் தமிழரசுக் கட்சியினர். அதன்படி போராடினார்கள், அடிபட்டார்கள், உதைபட்டார்கள், சித்திரவதைக்குள்ளானார்கள். அவர்கள் காட்டிய எதிர்ப்பால், அவர்களைப் பிடித்து வீட்டுக் காவலில் வைத்துவிட்டு, 'சிங்களம் மட்டும்' சட்டம் கொண்டுவந்த அரசாங்கம் "தமிழுக்கும் நியாயமான அளவு" என்றாவது இடமளிக்க நேர்ந்தது. இது அவர்கள் போராட்டத்தினால் ஏற்பட்ட அற்ப சொற்ப விளைவு ஆகாதா?

மற்றைய எட்டுப் பேர்களும் என்ன செய்தார்கள்? 1956ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் நிற்கும் போது தாங்கள் தெரிவு செய்யப்பட்டால் 'சிங்களம் மட்டும்' சட்டத்தை எதிர்த்துப் போராடுவோம் என்று ஜி. ஜி. பொன்னம்பலம், வி. சுந்தரலிங்கம், எஸ். யு. எதிர்மன்னசிங்கம். பி கந்தையா, முகம்மது அலி ஆகிய எல்லோரும் வாக்குறுதி அளித்துத்தானே தேர்தலில் நின்றார்கள். என்ன போராட்டத்தை நடத்தினார்கள். சொல்ல முடியுமா?

தமிழரசார் போராடி, தியாகம் செய்து அடியும், உதையும், சிறையும்பட்டபோது எள்ளி நகையாடிச் சிரித்து மகிழ்ந்ததுதான் இவர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டு ஆகும்.

தமிழரசுக் கட்சியார் சிங்கள சிறியை எதிர்த்தார்களே. நூற்றுக்கணக்கான தொண்டர்கள் ஆணும் பெண்ணுமாகச் சிறைப்பட்டார்களே. இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதியரசராக சுழலும் காற்றாடியின்கீழ் காலின் மேல் கால் போட்டுக்கொண்டு பஞ்சணையில் படுத்துறங்க வேண்டிய தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தமது தள்ளாத வயதில் மட்டக்களப்பு சிறையில் வாடினாரே எதற்காக? சிங்கள சிறீயை எதிர்த்து நடத்திய போராட்டத்தினால் அல்லவா?

இதன் காரணமாக, இன்று தமிழ்ப் பகுதிகளிலே சிங்கள அரசாங்கம் தனது சிங்கள சிறீ மோட்டார் வண்டிகளைப் பவனிவிட முடியாமல் பணிந்து கொடுத்ததே, இது ஒரு அரிய சாதனையா, இல்லையா?

இன்னும் உயர்ந்த படியிலுள்ள சாதனை சிங்களக் குடியேற்றத்தைப் பெருமளவுக்கு கட்டுப்படுத்தியதாகும். காலஞ்சென்ற மாபெரும் தலைவர் கோப்பாய்க் கோமான் வன்னியசிங்கத்தின் தலைமையில் காணியமைச்சராயிருந்த திரு ஸி. பி டி. சில்வாவை நெருக்கி பதவியாவில், முதலிக்குளத்தில், வவனியாவில் எல்லாம் சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்துக் தமிழ்க் குடியேற்றத்துக்கு அடிகோலினார்களே, அது என்ன சாமான்யமான சாதனையா?

இவையெல்லாவற்றிற்கும் மேலாக ஒரு பெரிய சாதனை, இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள் யாவரையும்—யாழ்ப்பாணத் தமிழன், மட்டக்களப்புத் தமிழன், திருமலைத் தமிழன், வவனியாத் தமிழன், மன்னார் தமிழன், மலைநாட்டுத் தமிழன் என்றிருந்த பேதத்தையும் பிரிவினையையும் அகற்றித் தமிழ் பேசும் இனத்தை ஒன்றுபடுத்தியதாகும்.

எட்டே எட்டுப் பேர்—முழுத் தொகையில் பாதிப் பேர்—இவ்வளவு காரியத்தையும் சாதித்திருக்கிறார்கள். 8 பேரும் ஒன்றாக—ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களாக நின்றமையினால்தான் அப்படி அரிய சாதனைகளை நிறைவேற்ற முடிந்தது. கடந்த பொதுத் தேர்தலில் 16 பேரையும் ஒரு கட்சியைச் சார்ந்தவர்களாக அனுப்பி அவர்கள் ஒன்றாக நின்றிருந்தால் இன்னும் அதிக பலத்தோடு அதிக செல்வாக்கோடு அதிக காரியங்களைச் சாதித்து அரசாங்கத்தைப் பணிய வைத்திருக்கலாம்.

அடுத்த வாரம் வரும் தேர்தலின்போது மேற்கூறிய திருஷ்டாந்தங்களை மனதில்கொண்டு ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களான 19 தமிழ் அரசுக் கட்சி அபேட்சகர்களையும் தமிழ் பேசும் மக்கள் ஒருமுகமாகத் தேர்ந்தனுப்புவார்களானால், நிச்சயமாக அவர்கள் ஒரு போராட்டத்தை நடத்தி இழந்த உரிமைகளை மீண்டும் நிலைநாட்டக் கூடியதாக இருக்கும்.

பல பட்டடையைச் சேர்ந்த உதிரிகளையும். உதவாக்கரைகளையும், தான்தோன்றித் தம்பிரான்களையும், தனிப்பெருந் தலைவர்களையும் கலந்து அனுப்பி, தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதித்துவத்தைக் கூட்டுச் சாம்பார் ஆக்கினால் அதனால் தமிழ் இனத்தின் அழிவைத் துரிதப்படுத்தலாமே [illegible] நிலையையும் அடைய முடியாது என்பதை வாக்காளப் பெருமக்கள் மனதிற்கொள்வார்களாக.

## யு. என். பியின் முகமூடிதான் ஜீ. ஜீ. யின் தமிழ் காங்கிரஸ்

அகில இலங்கை ஆனைப்பந்தி காங்கிரஸ் தலைவர் திருவாளர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் இம்முறை படு தோல்வியடையப்போகிறார் என்பது சர்வநிச்சயமாகி விட்டது என்று அரசியல் அவதானிகள் ஆருடம் கணிக்கின்றனர். அன்னாருடைய 25 வருட அரசியல் வாழ்வு அறுபதாம் ஆண்டு மார்ச் பத்தொன்பதாந் தேதியுடன் அஸ்தமனமாகப் போகின்றது என்று அவர்கள் திடமாகச் சொல்லுகின்றனர்.

அவர் மட்டுமல்லர், [illegible]ரோடு சார்ந்து நிற்கிறவர்களும் ஒருவர் பாக்கியில்லாமல் தோல்வியின் சுவையையே அனுபவிக்கப்போகிறார்கள்!

தனிப் பெருந் தலைவரின் அரசியல் உச்சகாலம் 1947ம் ஆண்டு ஆகும். அப்போது தமிழ்க் காங்கிரஸின் சார்பில் எழுவர் வெற்றிபெற்று வந்தனர். தலைவரின் நிலையில்லாக் கரணங்களினால் தமிழ் காங்கிரஸ் பிளவுண்டு சின்னாபின்னப்பட்டது.

1947ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் அப்போதிருந்த ஏழு தொகுதிகளுக்கும் தமிழ் காங்கிரஸ் போட்டியிட்டு ஆறு தொகுதிகளில் வெற்றிகண்டது.

1952ல் 6 தொகுதிகளில் மட்டும் போட்டியிட்டு 4 தொகுதிகளில் வெற்றியீட்டியது. 1956ல் தமிழ் காங்கிரஸ் சார்பில் போட்டியிடத் தனிப்பெருந் தலைவரைத் தவிர வேறு ஒருவர்தானும் கிடைக்கவில்லை—முன்வரவில்லை. அதற்கு முன்பெல்லாம் தமிழ் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வந்த கோப்பாய் திரு சி. அருளம்பலமும் சாவகச்சேரி திரு வி. குமாரசாமியும் கூட 1956ல் சுயேச்சையாளராகத்தான் போட்டியிட்டார்கள். எனவே தனிப்பெருந் தலைவர் தனியொரு மரமாகவே நின்றார் 1956ல்.

திரு குமாரசாமி, திரு அருளம்பலம்போன்றோர் கூடக் கைவிடக் காரணம் என்ன?

இன்று ஒரு தமிழ் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிடும் திரு வி. குமாரசாமியின் பூர்வோத்திரங்களைச் சற்று ஆராய்வோம்!

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

1947ம் ஆண்டில் அவர் சாவகச்சேரித் தொகுதிக்கு தமிழ் காங்கிரஸ் அபேட்சகராக நின்று வெற்றிபெற்றார். திரு பொன்னம்பலத்தை அரசியல் குருவாகக்கொண்டு அவர் வாலாக இயங்கி வந்தார். திரு டி. எஸ். சேனநாயகா மந்திரி சபையில் திரு பொன்னம்பலம் மண்டியிட்டுச் சென்று ஒரு மானங்கெட்ட மந்திரியாகச் சேர்ந்ததும் திருவாளர்கள் செல்வநாயகம், வன்னியசிங்கம்போன்றோர் திரு பொன்னம்பலத்தை விட்டுப் பிரிந்தனர். ஆனால் திரு குமாரசாமி மட்டும் குருவின் வாலைப் பிடித்துக்கொண்டு அரசாங்கக் கட்சியில் சேர்ந்துகொண்டார். படிப்படியாக உதவி மந்திரியுமானார்.

திரு டி. எஸ். சேனநாயகா காலஞ்சென்றதும் திரு டட்லி சேனநயகா பிரதமரானார். அவருடைய மந்திரி சபையிலும் தனிப்பெருந் தலைவரும் சிஷ்யன் குமாரசாமியும் இடம்பிடித்துக் கொண்டனர்.

திரு டட்லி சேனநாயகா ராஜினாமாச் செய்ததும் சேர் ஜோன் கொத்தலாவல பிரதம மந்திரியானார். சேர் ஜோன் தமது மந்திரி சபையில் திரு பொன்னம்பலத்தை வைத்திருக்க விரும்பவில்லை உதைத்துத் துரத்தினார் வெளியே.

வெளியே துரத்தப்பட்ட தனிப்பெருந் தலைவர் திரு பொன்னம்பலம், தம்மோடு தமது சிஷ்யன் குமாரசாமியும் ராஜினாமாச் செய்து

(12-ம் பக்கம் பார்க்க)

## வெளியூர்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு, செங்கலடி, வாழைச்சேனை, மன்னம்பிட்டி, பொலநறுவை, வவனியா, அநுராதபுரம், திருகோணமலை ஆகிய இடங்களுக்குச் சென்றிருப்பதாகவும், இவர்கள் அனைவரும் உரியகாலத்தில் ஊருக்குத் திரும்பி 19ந் தேதி தங்கள் மணியான வாக்குகளைத் தமிழரசுக் கட்சிக்கு வழங்கத் தவறக்கூடாது என்றும் பட்டிருப்புத் தொகுதி அபேட்சகரான திரு எஸ். எம். இராசமாணிக்கம் பிரஸ்தாபவேண்டுகோள்மூலம் ஞாபகமூட்டியுள்ளார்.

## பாலா தம்பு வாபஸ் பெறுவாரா?

கொழும்பு மத்திய தொகுதியில் போட்டியிடும் 14 அபேட்சகர்களுக்குமிடையே கடைசி நேரத்தில் சில சமரஸ ஏற்பாடுகளைச் செய்து ஒருசிலரை நிறுத்திவிடப் பெரும் முயற்சிகள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது.

கொழும்பு மத்திக்கு உரிய மூன்று பிரதிநிதிகளில் இருவர் யு. என். பி.யைச் சேர்ந்தவர்களாக வந்துவிடாதபடி தடுத்து நிறுத்தி இடதுசாரி பிரதிநிதிகள் பாராளுமன்றத்துக்கு வரக்கூடிய வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பல இடதுசாரிப் பிரமுகர்கள் கருதுகின்றனராம்.

இந்தக் கருத்துக்கு இணங்க, பிரபல இடதுசாரிகளில் மிகக் குறைந்த அளவு ஆதரவு உடையவரான திரு பாலா தம்புவை வாபஸ் பெற்றுவிட வேண்டும் என்று வற்புறுத்தப்படுவதாகவும், திரு பாலா தம்பு வெற்றியீட்ட முடியாதென்பதை உணர்ந்த சமசமாஜக்கட்சியினர் அவரை தேர்தல் களத்திலிருந்து வாபஸ் பெறுவதுபற்றி ஆலோசித்து வருவதாகவும் சுதந்திரனுக்கு செய்தி கிடைத்துள்ளது.

ஆரம்பத்தில் திரு பாலா தம்புவை ஒரு கணிசமான அளவு தமிழ் மக்கள் ஆதரித்து வந்ததாகவும், கடந்த வாரம் சுதந்திரன் கட்டுரை வெளியானபின் தமிழ் மக்கள் எவரும் அவருக்கு வாக்களிக்கப்போவதில்லையென்பதும் பகிரங்கமாகிவிட்டது.

## வவனியா....

(9-ம் பக்கத் தொடர்ச்சி)


இனத்தைப் பிரித்து வைத்து பார்க்கும் பழக்கம் சிறிதும் அற்றவர். தமிழரசு அணியில் சேர்ந்து அவர் ஆற்றிய அரும் பணியைக் கொண்டு இதை உறுதியாகக்கூறலாம்.

இன்றைய நிலையில் வவனியாத் தொகுதிக்கு அவசியம் தெரிவு செய்யப்பட வேண்டியவர் திரு.ச. சுப்பிரமணியம் என்பது எனது திடமான நம்பிக்கை. எனவே தான் வவனியாத்தொகுதி வாக்காளர்களுக்கு இவ் வேண்டுகோளை விடுக்கிறேன். "திரு. சுப்பிரமணியத்துக்கே உங்கள் வாக்குகளை அளித்து அவரை வெற்றிபெறச்செய்யுங்கள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவனியா தமிழ் பிரதேசத்தின் அரண்

## தனிப்பெருந் தலைவருக்கு இம்முறை தோல்விதானா?




## புள்ளி விவரங்கள் "ஆம்" என்றே சொல்லிக் கொள்கின்றன

அகில இலங்கை ஆலைப் பந்தி காங்கிரஸின் தனிப்பெருந் தலைவர் ஜீ ஜீ. பொன்னம்பலம் தமது அரசியல் வாழ்வில் உயர்ச்சி அடைந்ததையும் வீழ்ச்சிப் பாதையில் காலடி எடுத்து வைத்துள்ளதையும் மேலே தரப்பட்டுள்ள புள்ளி விவர கணக்குப் படம் (Statistical Pojection) காட்டுகிறது. தோல்வியை எண்ணிக் கன்னத்திலே கை வைத்துத் தொங்கு முகத்தோடு கனம் தலைவர் அவர்கள் வீற்றிருப்பதையும் காணலாம்.

இன்ன ஆண்டில் இத்தனை வாக்குகள் அவருக்குக் கிடைத்தன என்பதையும் எத்தனை அதிகட்படி வாக்குகள் எவ்வெப்போது கிடைத்தன என்பதையும் படம் ஆண்டு வரிசைக்கிரமமாகக் காட்டுகிறது.

இதன்படி இம்மாதம் 19ந் தேதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் தனிப் பெருந் தலைவர் தோல்வி அடைவது நிச்சயம் என்பது தெரிகிறதல்லவா?

மற்றும் படத்தில் உள்ள புள்ளி விவரக் கணக்குப்படி பார்த்தால் திரு ஜீ. ஜீக்கு இம்முறை கிடைககக்கூடிய வாக்குகள் 4000 அல்லது அதற்குக் குறைவாக்வே இருக்கும். வெற்றிக்கு இத் தொகை போதாது. அதிகப்படி வாக்குகள் பெறுவதற்குப் பதிலாக ஓராயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகளால் அவர் தோல்வியடையலாம்.

இலங்கையில் இதுவரை நடந்த ஆறு பொதுத் தேர்தல்களில் தனிப்பெருந் தலைவர் ஜீ. ஜீ. போட்டியிட்டிருக்கிறார். அவர் போட்டியிட்ட ஆண்டுகள், தொகுதிகள், கிடைத்த மொத்த வாக்குகள், கிடைத்த அதிகப்படி வாக்குகள் ஆகியவற்றின் விவரம் வருமாறு:-

| ஆண்டு | தொகுதி | மொத்த வாக்குகள் | அதிகப்படி வாக்குகள் |
|---|---|---|---|
| 1931 | மன்னார் | 4,667 | 980 |
| 1934 | பருத்தித்துறை | 10,627 | 8,595 |
| 1936 | பருத்தித்துறை | 14 029 | 7,022 |
| 1947 | யாழ்ப்பாணம் | 14,324 | 9,100 |
| 1952 | யாழ்ப்பாணம் | 12,726 | 4,409 |
| 1956 | யாழ்ப்பாணம் | 8,914 | 1,741 |

## அதைப் பாதுகாக்க சுப்பிரமணியமே சிறந்தவர்

### அவரைத் தெரிவு செய்யும்படி தமிழரசுத் தந்தை வேண்டுகோள்

"வவனியாத் தொகுதி வாக்காளப் பெருமக்கள் இம் மாதம் 19-ந் தேதி நடைபெற விருக்கும் பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி அபேட்சகர் திரு. ச. சுப்பிரமணியத்துக்கு வாக்களித்து அவரைத் தமது பிரதிநிதியாகத் தெரிவு செய்யத் தவறினால் அதனால் அவர்களுக்கு மட்டுமல்ல ஆபத்து; தமிழ் பிரதேசம் முழுவதற்குமே தீங்கு நேரிடலாம். தமிழ் பேசும் இனத்துக்கும் அது பலத்த அடியாகலாம். எனவே இது விஷயத்தில் வவனியாத் தொகுதி மக்கள் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கவேண்டும். கடமையில் தவறக் கூடாது" என்று தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் வவனியாத் தொகுதி வாக்காளர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் கூறியிருக்கிறார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

வவனியா தமிழ் பிரதேசத்தின் எல்லைப்புற அரணாக மிளிர்வது. இதனை அடுத்த பதவிக் குளப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் ஏற்கனவே ஓரளவு நடைபெற்று விட்டது. வவனியாவிலும் இதற்கு இடமளித்து விட்டால் அப்புறம் தமிழ்ப் பிரதேசத்தின் ஏனைய பகுதிகள் தப்பும் என்று நம்புவதற்கில்லை. அரண் தகர்ந்தால் ஆபத்து அல்லவா? அதனால் அரணைக் கரிசனையோடு காப்பாற்றக் கூடிய வரும், சிங்களக் குடியேற்றத்தை தீவிரமாக எதிர்த்துத் தடுத்து நிறுத்தக் கூடிய வருமான பிரதிநிதியே வவனியாவில் தெரிவு செய்யப்பட வேண்டும்.



திரு. ச. சுப்பிரமணியம்

இப்பணியை இப்பொழுதே செய்து வரும் தமிழரசுக் கட்சி இன்னும் திறம்படச் செய்வதற்கு உறுதுணையாக இருக்கக் கூடிய ஒருவரையே அதாவது திரு ச. சுப்பிரமணியத்தையே இத் தொகுதியில் தனது அபேட்சகராக நிறுத்தியிருக்கிறது. அவருக்கே வவனியாத் தொகுதி வாக்காளர்கள் அனைவரும் வாக்களித்து வெற்றியடையச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு சுப்பிரமணியத்துக்குப் பதிலாக இன்னொருவர் தெரிவு செய்யப்படுவாரேயானால் அது தமிழரசு வேலியில் ஓட்டை விழுந்ததாக முடியும். வேலிபலம் குன்றியதாகப் போகும்; அதனால் தமிழ் பேசும் இனத்தின் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படும்.

வவனியாப் பட்டின சபைத் தலைவராக இருந்து பணியாற்றும் திரு. சுப்பிரமணியம் மக்கள் சேவைக்கு முன்னணியில் நிற்பவர். வாழும் இடத்தைப் பொறுத்து தமிழ் பேசும்

(8-ம் பக்கம் பார்க்க)

## சுயநிர்ணய உரிமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளாகவும் சிறு பான்மையினம் ஆளப்படுபவர்களாகவும்அமைவது,ஒற்றைஆட்சி அரசமைப்பில் இயல்பாக உள்ள ஒன்று. ஆனால் சமஷ்டி இணைப்பிலே சிங்கள இனத்துக்கு ஓர் அரசும் தமிழ் பேசும் இனத்துக்கு ஓர் அரசும் ஏற்படும் பொழுது, தமிழ் பேசும் இனத்தை ஆளும் தலைவர் களைச் சிங்கள மக்களின் வாக்குச் சீட்டுகள் நிர்ணயிக்கும் சூழ்நிலை மறைகிறது. தமிழ் பேசும் மக்கள் மீது ஆட்சி புரியுந் தலைவர்களைத் தமிழ் பேசும் மக்களின் வாக்குகளே தீர்மானிக்கும் சூழ்நிலை தோன்றுகிறது. இதனால் தமிழ் பேசும் மக்களின் ஜீவாதார உரிமைகளான மொழி, கலை, கலாசாரம் பாதுகாக்கப்படும் சந்தர்ப்பம் கிட்டுகிறது. சுய-ஆட்சி உதயமாகிறது

ஒற்றையாட்சியில் தமிழ் பேசும் இனத்துக்கு இந்த மேலான சுயாட்சி நிலை மறுக்கப்பட்டது.

இந்தப் பிரளயத்திலிருந்து எம்மினத்தை விடுவிப்பதற்கு இருக்கும் ஒரே யொரு உறுதியான மார்க்கம் இணைப்பாட்சி (சமஷ்டி) ஏற்படுத்துவது மட்டுமே. தமிழ்ப் பேசும் இனத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பு சிங்கள இனத்திடமிருந்து அகற்றப்பட வேண்டும். தன்னைத்தானே ஆக்கவும்அழிக்கவும் வல்லஉரித்து தமிழ் பேசும் இனத்திற்கே அளிக்கப்பட வேண்டும். தமிழினத்தின் மேல் ஆட்சி புரியும் பணி தமிழரசுக்கே கிடைக்க வேண்டும். அதாவது ஒற்றை ஆட்சி ஒழிந்து இலங்கையில் இணைப்பாட்சி ஏற்பட வேண்டும். இதுவே எமது நெஞ்சுறுதி கொண்ட இலட்சியம்.

எனவே,இந்தஇலட்சியமே எமது இதயகீதம் என்பதை இந்நாட்டிலுள்ள சிங்கள இனம் மாத்திரமல்ல, வெளியுலகம் அனைத்துமே திகைக்கும்படி நாம் தெளிவாக்கிவிட வேண்டும். இதற்குரிய ஒற்றுமையில் தமிழ் பேசும் இனம் திரண்டெழுந்துவிட்டது என்பதை நிரூபிக்க, எமக்கு கிடைத்த ஒரு அரிய சந்தர்ப்பம் எதிர்வரும் பொதுத் தேர்தல்.

தனிப்பட்ட சிரமங்களோ வசதியீனங்களோ, கஷ்ட நஷ்டங்களோ ஒரு பேரினத்தின் கடமைக்கு பெரிதல்ல.

ஆயிரம் ஆயிரம் ஆண்டு வாழப்போகும் ஓர் இனத்துக்காக ஒரே யொரு நாளின் சிரமம் ஒரு பொருட்டல்ல.

எனவே தமிழ் பேசும் பேரினத்தின் வாக்காளப் பெருமக்களை மீண்டும் அதி விநயத்துடன் வேண்டுகிறேன்.

சர்வ ஜன வாக்கெடுப்பின் நன்னாள் மார்ச் மாதம் 19-ந் தேதி. அப்பொன்னாளின் முதற் பணியாக, வாக்களிப்பு நிலயங்களில் இலட்சோப இலட்சமாகத் திரண்டு, தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்து, தமிழ் பேசும் இனத்தின் மகத்தான எதிர்காலத்துக்கு வழி சமையுங்கள் என்று தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

தமிழ் பேசும் மக்களுக்கு
ஒரு வீடு!
தமிழரசுக் கட்சியின் சின்னம்
ஒரு வீடு!!

இங்ஙனம்,
[illegible]
எஸ். ஜே. வி. செல்வநாயகம்

சி. சி. சி. நெற்பயிர்

உரக்

கலவைகள்

உலகிலேயே மிகச்சிறந்தவை



கொழும்பு
கொமேர்ஷல்
கொம்பனி லிமிடெட்

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)

தபால் பெட்டி 33, கொழும்பு.

CCC 629

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌலானா
## அச்சடி சீத்தைகள்



**ரமணீகரமாக காட்சியளிக்க இன்றே தெரிவு செய்யுங்கள்**

★ கண்ணைக் கவரும் டிசைன்கள்.
★ சாயம் மங்காதவை.
★ நீடிய உழைப்பு.
★ தரத்தில் உயர்வானது.

விசேஷமாக வரவழைக்கப்பட்டிருக்கும் புத்தம் புதிய டிசைன்களை, தெரிவு செய்ய இன்றே விஜயம் செய்யுங்கள்.

**மௌலானா (சிலோன்) லிமிட்.,**
**கொழும்பு, மருதானை, கண்டி.**


# களவுக் காதலர்கள் கையாண்ட விடுகதைகள்

(வெள்ளவத்தை மு. இராமலிங்கம்)

> "வெய்யில் ஒழுகும், மழை ஒழுகா
> வீட்டிலிருக்கும் பெண்ணே!
> என்ன செய்கிறாய்?"
>
> ★
>
> "நேற்றுச் செத்த பிணத்தை
> இன்று அடக்கஞ் செய்யப்
> போய்விட்டார்"
>
> ★
>
> "முள்ளில்லாக் காட்டிலே
> எலும்பில்லா நாயுங்கொண்டு
> வேட்டையாடப் போய்விட்டார்"

வணிகத்தின் பொருட்டுச் செட்டியொருவன் வேற்றூர் போய் மீளுகிறான். வரும் போது மனைவிக்கு விலையுயர்ந்த பட்டாடையொன்று வாங்கி வந்திருந்தான். மனைவியும் அவனை வரவேற்று உபசரித்து உணவு ஊட்டினள். மறுநாள் இரவு கணவன் நித்திரை போனதன் பின்பு அவன் கொணர்ந்த பட்டாடையை உடுத்தித் தன்னை வெகுவாய் அலங்கரித்துக் கொண்டு நிற்கும்[illegible]து அவன் தற்செயலாகக் கண் விழித்தான். எனினும் விழித்தும் விழியாதவன் போல் யாவையுங் கவனித்துக் கொண்டு கிடந்தான் சிறிது நேரம்.

சுரங்க வழியாக நுழைந்து சென்றாள் மனைவி. அவளையுமறியாது அவனும் பின் தொடர்ந்தான். அரசன் அரண்மனையை அடைந்தனர் இருவரும். செட்டிப் பெண்ணின் வரவை அவ்விடம் எதிர்பார்த்து மனம் வருந்தியிருந்தான் மன்னன். அங்கு எரிந்து கொண்டிருந்த விளக்கு மங்கிக் கொண்டே போனது. இன்னும் சிறிது நேரம் சென்றால் விளக்கு முற்றாக அவிந்துவிடுமோ என்றிருந்தது. அதனைக் கவனித்தாள் செட்டிப் பெண். தனது ஆடையின் உள் தலைப்பில் ஒரு சாண் நீளம் கிழித்து விளக்குக்குத் திரியிட்டாள். அதனைக்காண மனம் பொறுதவனாய்ச் செட்டி வீடு திரும்பினன். யாதொன்றும் அறியான் போல் படுத்திருந்தான் மனைவி வரும் போது.

செட்டிப் பெண்ணும் வீடு திரும்பினாள். ஆடை ஆபரணங்களைக் களைந்தாள். கணவன் படுக்குமிடஞ் சென்று "நாதா! எனக்குத் தூக்கம் வரவில்லை. ஒரு கதை சொல்கிறீர்களா?"! என்று கேட்டுக் கொண்டே அவன் நித்திரையைச் சோதித்தாள். அதன் பின்னும் அவன் சாகசத்தை அவனால் பொறுக்க முடியவில்லை.

> "இழை ஆயிரம் பொன்
> பெற்ற
> இந்திர வர்ணப் பட்டாடையும்
> அரசன் அன்பின் முன்
> பஞ்சாகப் போனதல்லவோ"

என்றான் மெதுவாக. அவன் சொற்கள் ஆயிரம் ஈட்டிகள் கொண்டு தாக்கின போல் அவள் மனத்தைத் தாக்கின. தன் குட்டு வெளிப்பட்டு விட்டதை உணர்ந்து அன்றே கழுத்தில் சுருக்கிட்டு இறந்தாள்.

அவளின் ஈமம் மறுநாள் முறைப்படி தகனிக்கப்பட்டது. தன் வஞ்சந் தீரக் கட்டைகளைப் போட்டு எரித்துக் கொண்டு நின்றான் செட்டி. அவளின் அன்பிற்குக் கடைசி மரியாதை செலுத்த வெண்ணிய மன்னன் மயானத்துக்கு வந்தான்.

> "சந்தனக் கட்டை தனித்
> தெரியுது
> குங்குமச் செட்டி
> குதியெனடா"

என்றான் அரசன் செட்டியை நோக்கி.

> "தேனைக் கருப்பை வெட்டிச்
> சிமிழில் அடைத்து
> வைத்தேன்
> தின்றுரிசி கண்ட இராசாவே
> நீர் குதியும்"

என்றான் செட்டி. வெட்கமும் துக்கமும் மீதூரப் பெற்றவனாய்த் தீயில் குதித்தான் அரசன். காதலின் மகத்துவத்தைக் கண்டும் காணாதவன் போல் நின்றான் செட்டி.

*[இவ் விடுகதையை எழுதி உதவியவர் காங்கேசன்துறை அன்பர் செல்வன் செ. உலகப்பிரகாசம் ஆவர்]*

தாய் தகப்பன் வெளியே சென்றுவிட்டனர்; காதலனை எதிர்பார்த்த வண்ணமே தனியே வீட்டினுள் சமையல் செய்து கொண்டிருக்கிறாள் மகள். அவளுடைய காதலன் மெல்ல மெல்ல அடிவைத்து வளவுக்குள் வருகின்றான். தாய் தந்தையர் எங்கே சென்றுவிட்டனர், எப்போது திரும்புவார்கள், என்று அறிந்து கொள்ள வேண்டிய ஆவலுடையவனாகி

> 'வெய்யில் ஒழுகும், மழை
> ஒழுகா,
> வீட்டிலிருக்கும் பெண்ணே!
> என்ன செய்கிறாய்?"

என்று கேட்டுக் கொண்டே வீட்டினுள் குனிந்து பார்த்தான். தென்னோலைக் கிடுகுகளால் வேயப்பட்ட செம்படவன் குடிலையே அவன் வெய்யில் ஒழுகும் மழை ஒழுகா வீடு எனக் குறிப்பிட்டான். கிடுகின் கண்களுக்கூடால் சூரிய கிரணம் நுழையும், மழை நீர் புகுதல் அரிது. காதலியும் உடனே—

> "தலை வேகுது உடல் அவியுது"

என்று விடை பகர்ந்தாள். அதன் பொருள் உன்னை எதிர்பார்த்து, நீ விரும்பும் வினை மீன் தலையும் உடலும் வேகின்றன என்பது. சிலருக்கு மீன் தலையில் விசேஷ பற்று; அப்படிப்பட்டவர்களுள் அவனும் ஒருவன். பெற்றோர் வீட்டில் இல்லாதபடியால், அவளுக்கு அவர்கள் சம்பந்தமான பயமில்லாமல், காதலன் உவக்கும் உணவிலே அவளுடைய மனம் சென்றது. அவனுடைய எண்ணமோ அவர்கள் எப்பொழுது திரும்புவார்கள் என்று அறிய ஊக்கங் கொண்டு

> "ஆச்சி எங்கே?"

என வினவினான் அடுத்து.

> "நேற்றுச் செத்த பிணத்தை
> இன்று அடக்கஞ் செய்யப்
> போய்விட்டா."

என்றாள். அஃதாவது நேற்றுப் பிடித்த மீனை இன்று விற்று வரப் போய்விட்டாள் எனக் கொள்ள வைத்தாள். மீன் விற்று வரக் காலதாமதம் ஆகும் நீ பயப்படாதே என்பது அவள் கருத்து.

> "அப்பு எங்கே?"

என்றான் பதற்றத்துடன். அவனுடைய உடல் நடுங்கியது. அதனை அவதானித்து குறுநகை புரிந்து கொண்டே

> "முள்ளில்லாக் காட்டிலே
> எலும்பில்லா நாயுங்
> கொண்டு,
> வேட்டையாடப் போய்
> விட்டார்."

என முடித்தாள். முள் இல்லாத காடு=கடல்; எலும்பில்லாத நாய்=வலை; அஃதாவது மீன் பிடிக்கப் போய் விட்டார் என்று வலைஞர் பரிபாஷையில் சொன்னாள். கொண்டு=மூன்றும் வேற்றுமைச் சொல்லுருபு.

# கூழ்முட்டையும் கூட்டுமாறும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு கொத்தலாவலை பேசும்பொழுது "சமசமாஜக் கட்சி, இந்தியர்களை ஆதரித்தும் சர்வதேச வேதாந்தம் பேசியும் வந்த கட்சி சிங்கள மக்களின் நயத்திற்காகக் கொண்டுவரப்பட்ட பிரேரணையை ஆதரிப்பது ஆச்சரியமாக இருக்கின்றது" என்றார். கூழ் முட்டையும் கூட்டுமாறும் தாங்கொணாத வியாதிக்கு உகந்த மருந்தென்று அவர் மேலும் கூறி எள்ளி நகையாடினார்.

இவ் வார்த்தைகள் டாக்டர் என். எம். பெரேராவுக்குப் புண்ணிலே புளிப்பட்டது போல் பற்றிப் பிடித்தன; திரு. கொத்தலாவலைக்கும் டாக்டர் என். எம். பெரேராவுக்குமிடையே மிகவும் அகோரமான வாக்குவாதம் நடந்தது. அதற்கப்புறம்தான் விடயம் புரிந்தது.

இந்தியர்களுக்காகவும் சர்வதேசிய கண்ணோட்டத்திலும் வாதித்து வந்த சமசமாஜக் கட்சியினர்க்கு எங்கோ ஒரு கூட்டத்தில் சிங்கள வெறியர்கள் "கூழ் முட்டையையும் கூட்டுமாறையும்" [illegible] சமாஜக் கட்சியினர் தங்கள் கொள்கையை மாற்றிச் சிங்களவரின் நயத்தை கவனிக்கத் தொடங்கினர். இதைத்தான் திரு. கொத்தலாவலை கேலி செய்தார்.


**பிரேரணைக்கு என். எம். ஆதரவு**

டாக்டர் என். எம். பெரேராவின் பேச்சுப் பெரும்பாலும் "கொள்கை மாறுட்டம்" தங்களுடைய செயலில் இல்லை என்று வாதிப்பதாகவே அமைந்தது, பாவம். "கொள்கை மாறுட்டம் இல்லை, இல்லை" என்று தன் வாழ் நாள் முழுவதும் வாதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் டாக்டர் என். எம். பெரேராவுக்கு அமைந்து விட்டது.

டாக்டர் என். எம். பெரேரா திரு. குணவர்த்தனா ஆகியோரின் ஆசியுடன் பிரேரணை நிறைவேறியது. ஆயிரக் கணக்கில் இந்திய வம்சாவழியினர் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். அவர்கள் தாயகம் அனுப்பப்பட்டனர்.

மலை நாட்டுத் தமிழர் விஷயத்தில் இன்று சமசமாஜக் கட்சியினர் எத்தனை தான் [illegible]டியாகக் கத்தினாலும் அவர்களுடைய உண்மை நிலை இதுதான்.

—வன்னியூரான்

திறமாக நீர்ப்பாய்ச்சுவதற்குகந்த நம்பிக்கைவாய்ந்த பம்ப்.

# விங்கெட்

நீர்மான இயந்திரங்கள் உற்பத்திசெய்யும் உலகப்பிரசித்திபெற்ற மேஸ்ஸர்ஸ் விங்கெட் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்ட இந்த அடக்கமான, உறுதியான தண்ணீர் பம்ப்கள், அதிககாலம் மிகத்திறமான சேவையைத் தருகின்றன.

இவற்றின் பராமரிப்புச் செலவு மிகக் குறைவு. மிகப் [illegible] [illegible] கிடைக்கும். வில்லியர்ஸ் 4 ஸ்ட்ரோக் பெற்றோல் [illegible] என்ஜின்கள் பாவனைக்குச் சிக்கனமானவை. [illegible] [illegible] உள்ளன. [illegible] உதிரிப் பாகங்களும் கை உடனே [illegible] கிடைக்கும்.

ஏகவிநியோகஸ்தர்கள்:

சாமுவேல் அன் கம்பெனி,
244, [illegible] ரோட்,
யாழ்ப்பாணம்.

மேலதிக விபரங்களுக்கு எங்களை விசாரிக்கவும்:

தி கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்

[illegible]

தபால் பெட்டி 78, கொழும்பு

[illegible]

**உயர்ந்த சேவை**

1½" மோடல்- மணித்தியாலம் 1500 - 6000 கலன் இறைக்கிறது.

2" மோடல்-மணித்தியாலம் 1680 - 11900 கலன் இறைக்கிறது.

3" மோடல்-மணித்தியாலம் 4300 - 16800 கலன் இறைக்கிறது.

டெலிவரிக்கேற்ப ஹெட்டும், சக்ஷன் லிவ்ட்டும் தேவை

ஆகக் கூடுதல் முழு ஹெட் 70 அடி

ஆகக் கூடுதல் சக்ஷன் லிவ்ட் 25 அடி

எமது பிரதிநிதியை விசாரிக்கவும்:
எம். பூபாலசிங்கம்,
144, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம். போன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழரசுத் தந்தையின் சிந்தை கவர்ந்தவர்: அன்னவரின் 'வாரிசு'

## யாழ்ப்பாணத் தொகுதி தமிழரசு அபேட்சகர் எஸ். கதிரவேற்பிள்ளை

## கோப்பாய்க் கோமான் கு. வன்னியசிங்கம் அவர்களின் சிஷ்யரும் ஆவர்

யாழ்ப்பாணத் தொகுதியில் தமிழரசுக் கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் திரு எஸ். கதிரவேற்பிள்ளை யார் என்று கேட்டால் அதற்கு இது தான் பதில்: திரு கதிரவேற்பிள்ளை தமிழரசுத் தந்தை எஸ். ஜே. வியின் சிந்தை கவர்ந்தவர். இதில் எல்லாம் அடக்கம்.

இது விஷயம் வெளிச்சமான கதை விநோதமானது. டாக்டர் எஸ். ஏ தர்மலிங்கத்துக்குப் பதிலாக வேறு யாரை யாழ்ப்பாணத் தொகுதிக்கு தமிழரசுக் கட்சி அபேட்சகராக நிறுத்துவது என்ற பிரச்னை தமிழரசுக் கட்சித் தேர்தல் குழுக் கூட்டத்தில் எழுந்தது. எல்லோரும் மனம் குழம்பிச் சிந்தித்தார்கள். மெல்லிய குரல் ஒன்று எழுந்தது. ஆமாம் தந்தை வாயசைத்தார், எல்லோரும் அவர் பக்கம் திரும்பி அவர் மெல்ல மெல்லச் சொன்னதுக்கு உன்னிப்பாகச் செவிமடுத்தார்கள். அமைதி நிலவ, புன்னகை தவழ அவர் சொன்னார்:

### தந்தையின் சிந்தை கவர்ந்தவர்

"ஏன் இவ்வளவு யோசனை? இங்கே தான் இருக்கிறாரே என் உள்ளம் கவர்ந்தவர்; தொண்டு உள்ளம் படைத்தவர்; நியாயவாதி திரு எஸ். கதிரவேற்பிள்ளை. அவரைப் போடலாமே" என்றார்.

எடுத்த எடுப்பில் எதையும் முடிவு செய்பவர் அல்லர் தமிழரசுத் தந்தை. ஆழ்ந்து சிந்தித்து தீர்மானத்துக்கு வருபவர். அவர் கொள்ளும் தீர்மானம் எவரும் எது காரணம் பற்றியும் தள்ளத் தக்கதாக இது வரை இருந்ததில்லை. திரு கதிரவேற்பிள்ளை விஷயத்திலும் அப்படித்தான். தந்தையின் முடிவுப்படி அவரே யாழ்ப்பாணத் தொகுதி அபேட்சகராக நிறுத்தப்பட்டார்.

### தமிழரசுத் தந்தையின் வாரிசு

திரு எஸ். கதிரவேற்பிள்ளை தமிழரசுத் தந்தையின் உள்ளம் கவர்ந்தவர் என்ற விஷயம் அன்று தெரிய வந்தது. பின்னர் எல்லோருக்கும் இன்னொன்றும் தெரிய வந்தது. அதாவது திரு கதிரவேற்பிள்ளையை நேரில் பார்த்தவர்களும் அவர் பேச்சுக்களைக் கேட்டவர்களும் அவர் நடைமுறைகளைக் கவனித்தவர்களும் இவர் தான் தமிழரசுத் தந்தையின் "வாரிசு" என்பதை அறிந்து கொண்டார்கள். வயதில் வித்தியாசமே தவிர மற்றப்படி எல்லா விஷயங்களிலும் தமிழரசுத் தந்தையின் வார்ப்படம் திரு கதிரவேற்பிள்ளை. இது இன்று பகிரங்க ரகஸியம்.

### விசேட பண்புகள்

சிந்தனைத் திறன், தன்னடக்கம், சிந்தித்து செப்பனிட்டு அளந்து பேசும் ஆற்றல், மாற்றாரையும் புண்படுத்தாது கருத்தை எடுத்துரைத்து அன்னாரைத் தம்பாலிழுக்கும் தகைமை, சலியாத உழைப்பு, இன உணர்வு தமிழ்மொழிப் பற்று, கொள்கை உறுதி — இவை தமிழரசுத் தந்தைக்குப் போலத் திரு கதிரவேற்பிள்ளைக்கும் இயல்பாக அமைந்த விசேட பண்புகள்.



திரு. எஸ். கதிரவேற்பிள்ளை

### பெற்ற தந்தையும் தனையனும்

இன்னொன்று. நியாயவாதி திரு கதிரவேற்பிள்ளை கோப்பாய்த் தொகுதியில் தமிழரசு அபேட்சகர் திரு எம். பாலசுந்தரத்தை எதிர்த்துப் போட்டியிடும் வழக்கறிஞர் திரு எஸ். சிவசுப்பிரமணியத்தின் மகன் ஆவர். தந்தை எங்கே? தனையன் எங்கே? தம்மைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய தந்தைபால் அன்பு செலுத்துகிறார்; அடிபணிகிறார். ஆனாலும் பெற்ற தந்தையின் தவறான அரசியல் வழியில் செல்ல மனம் ஒப்பாது தமிழரசுத் தந்தை காட்டும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, என்ற முக்கூட்டுப் பாதையில் ஆயிரமாயிரம் மக்களோடு தமிழரசுக் கொடியின் கீழ் அணிவகுத்துச் செல்கிறார்.

எமது அண்டை நாடான இந்தியாவிலும் இப்படியான ஒரு சம்பவம் நடந்தது. மிதவாதியாய் விளங்கிய தம் தந்தை மோதிலால் நேருவோடு மாறுபட்டு மகாத்மா காந்தியைத் தம் அரசியல் குருவாகக் கொண்டு அவர் தலைமையில் இந்திய மக்களுக்கு தொண்டு செய்யப் புறப்பட்டார் பண்டித ஜவஹர்லால் நேரு. திரு கதிரவேற்பிள்ளையும் ஏறக்குறைய அப்படித்தான்.

### கோப்பாய்க் கோமானின் சிஷ்யர்

1956-ம் ஆண்டு ஜூன் 5-ந் தேதி காலிமுகக் கடற்கரையில் தமிழரசுத் தொண்டர்கள் சத்தியாக்கிரகம் செய்த போது சிங்களக் காடையர்களின் கொடூரமான தாக்குதலுக்கு ஆளானவர் நமது மறைந்த தலைவர் திரு கு. வன்னியசிங்கம் அவர்கள் தான். அன்னாருக்கு அருகிலிருந்து அவர் பெற்ற அனுபவங்களைத் தாமும் பெற்றவர் திரு எஸ். கதிரவேற்பிள்ளை பி. ஏ.

1958 இனக் கலவரத்தின் போது தமிழ் அகதிகள் பிற இடங்களிலிருந்து யாழ்ப்பாணம் திருப்பி அனுப்பப்பட்டிருந்தபோது அவர்களுக்கு அருந்தொண்டாற்றுவதில் மறைந்த தலைவர் திரு கு. வன்னியசிங்கத்தோடு சதா பங்குகொண்டவர் திரு கதிரவேற் பிள்ளை ஆவர். திரு வன்னியசிங்கத்தின் சிஷ்யர் என்று இவர் அழைக்கப்படுவது ஒன்றே இருவருக்குமிடையில் இருந்துவந்த ஒட்டுறவுக்கு எடுத்துக்காட்டாகும்.

### மனவிசாலமும் முற்போக்கும்

திரு கதிரவேற்பிள்ளை தாவர போசனமே உண்ணும் வைதிகக் குடும்பத்தில் பிறந்தவர். ஆயினும் அவர் காலத்தோடு ஒட்டி வாழ்வதே சிறப்பு என்ற கருத்து உடையவர். தீண்டாமை சீர்ஒழிப்பிலும் மற்றும் சமூகக் கேடுகளை ஒழிப்பதில் முன்னணியில் நிற்கிறார். அவருடைய மனவிசாலத்தையும் பெருந்தன்மையையும் அளவிட இதுவொன்றே போதுமானதாகும்.

### சிறந்த நூல் ஆசிரியர்

மெய்விளக்கத்துறையில் (Philosophy) மிக்க ஈடுபாடு உடையவராக விளங்குகிறார் திரு கதிரவேற்பிள்ளை. அவர் ஏறக்குறைய இரண்டு ஆண்டுகட்குமுன் வெளியிட்ட "மேல்நாட்டு தத்துவதரிசனம்" என்ற நூல் இதற்கு சான்று பகர்ந்து நிற்கிறது. அவர்தம் நூலில் சாக்கிரடீஸ், (Socraties) பிளாட்டோ (Plato) அரிஸ்டோட்டில் காரல் மாக்ஸ், ஏஞ்சல்ஸ், முதலிய பல்துறைப்பட்ட மெய்விளக்க வல்லுநரின் (தத்துவஞானிகள்) கருத்துக்களை எவரும் ஏற்றிப் போற்றும் முறையில் எளிய இனிய தமிழில் தந்திருக்கிறார்.

### வகிக்கும் பதவிகள்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நெடுங்கால ஊழியரான திரு கதிரவேற்பிள்ளை தமிழரசுக் கட்சி வாலிப முன்னணியின் தலைவராகவும் தமிழ் வாலிபரின் வழிகாட்டியாகவும் விளங்குகிறார். இன்னும் வேறுபல துறைகளிலும் இவர் பணியாற்றுகிறார். சிவில் (Civil) சட்டத்துறை நியாயவாதியாகவிருக்கும் இவர் யாழ்ப்பாண சட்ட நூலகத்தின் செயலாளராகவும் உலக சகோதரத்துவ இயக்கத்தின் யாழ்ப்பாணக் கிளைச் செயலாளராகவும் பணியாற்றுகிறார்.

### மு. வ.வின் கூற்றும் இவர் வாழ்வும்

சிந்தனை வளமும் பண்பு நலமும் படைத்த தலைவர்களை தமிழ் இனம் உருவாக்கினால்தான் அது தலையெடுக்க முடியும் என்று டாக்டர் மு. வ. அடிக்கடி கூறுவதுண்டு. இத்தகைய வளமும் நலமும் ஒருங்கே பெற்ற திரு எஸ். கதிரவேற்பிள்ளை யாழ்ப்பாணப் பிரதிநிதியாகாமல் வேறு யார் தான் வர முடியும்?

---

# சிறுபான்மையோர் உரிமை...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டபோதும் "தேசியம்" என்ற உயர்ந்த தத்துவத்திற்சாகப் பாராமுகமாக இருந்தார் ஜீ. ஜீ.

### நன்மை கருதியல்ல மார்க்சிய வேஷம்

இன்னும் தமிழ் மக்களை ஏமாற்றலாமென்று தேசியவாதம் பேசுகிறார்கள் இடதுசாரிகள். கொம்யுனிஸ்டு கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி என்பவற்றின் சரித்திரத்தைப் படிக்கும்போது இந்த ஏமாற்று வித்தை புலனாகின்றது.

சிங்களத் தலைவர்களாயிருந்தும் தமிழ் மக்களின் உரிமைக்காப் பாடுபடுகின்றவர்களை தமிழ் மக்கள் ஆதரிக்காது விடுவது எவ்வளவு நம்பிக்கைத்துரோகம் என்ற அபிப்பிராயம் எம் மக்களிற் சிலரிடையே நிலவுகிறது. கொம்யுனிஸ்டு கட்சியாயினுஞ் சரி, சம சமாஜக் கட்சியாயினுஞ் சரி இரண்டினதும் அடிப்படைக் கொள்கைகளும் இலட்சியமும் ஒன்றுதான் — மார்க்சியத்தை நிலை நாட்டல். மார்க்சியம் அதிருப்தி அடைந்த மக்களிடையே தான் இலகுவாகப் பரவும். எனவேதான் இலங்கையிற் சிறுபான்மையராய் இடருற்று வாழும் தமிழ் மக்களுக்குச் சிறிது சாதகமாயிருந்து அவர்களை மார்க்சியப் பாதைக்கு இழுத்துச் செல்ல முயன்றனர், முயல்கின்றனர். எனவே சிறுபான்மையரின் நன்மை கருதியல்ல இந்த இரண்டு கட்சியினரும் சொல்வதும் செய்வதும் எல்லாம் என்பதை அறியலாம்.

### மனச்சான்று ஏற்குமா?

இராசரத்தினு, பண்டாரநாயகா, மெத்தானந்தா கட்சியார் சிங்கள மக்களிடையில் எவ்வளவுக் கெவ்வளவு வகுப்பு வாதிகளாயிருக்கின்றார்களோ, அவ்வளவுக்கவ்வளவு தமிழரசுக் கட்சியார் தமிழ் மக்களிடையே வகுப்புவாதிகளாய் விளங்குகின்றார்கள் என்று பிரசாரஞ் செய்கின்றார்கள் இடதுசாரிகள். அதாவது இலங்கைவாழ் பெரும்பான்மைச் சமூகத்தாராகிய சிங்கள மக்கள், சிறுபான்மையினரைத் தமது அடிமைகளாக்கும் நோக்கத்தோடும், சிறுபான்மையரின் மொழி, கலை, மதம் முதலியவற்றில் பூண்டோடு அழித்தொழிக்கும் நோக்கத்தோடும் இனவாரியாக நின்று அட்டகாசம் செய்வதும் தமதுரிமைகளை இந்த இனவெறியர்களிடமிருந்தும் காப்பாற்றிக் கொள்ளும் ஒரே நோக்கத்துடன் சிறுபான்மையினர் இனவாரியாகக் கூடி நின்று போராடுவதும், ஒரே தன்மையானவை என்று அரசியலறிவு அற்றவர்கள் போல அலறுகின்றார்கள், எங்கள் மனச்சான்று இதனை ஏற்குமா?

### வகுப்புவாதம் என்போர் அறிவிலிகள்

மக்களுள் எல்லாம் சிறந்தவர் ஜெர்மனியர் என்றும் அவர்கள் உலகை ஆளப் பிறந்தவர்களென்றும் இனக்குரல் எழுப்பிய "நாஜிக்" கட்சியினரும் தமது [illegible] பிச்சைக்கு வாதாடிய யூதரும் ஒத்த தன்மை [illegible] வர்களா? இனவாரியாக நின்ற யூதர் வகுப்புவாதிகளா? இந்தியை நாடு முற்றும் திணிக்க முயலும் இந்திய இந்தி வெறியர்களுடன் தமது மொழியைக் காப்பாற்றப் போராடும் வங்காளியர் தமிழர் முதலானவரை ஒப்பிடலாமா? பகுத்தறிவு படைத்தவர் ஒரு நாளும் அங்ஙனம் கூற மாட்டார். எனவே தமிழரசுக் கட்சியின் போராட்டம் வகுப்பு வாதம் என்று சொல்லுகின்றவர்கள் விஷயம் அறியாதவர்கள். தமிழ் மக்களினதும் சிறுபான்மையரினதும் துரோகிகள்.

### பைக்குள் இருந்த பூனை வெளியில்!

மொழிக் கொள்கையைப் பொறுத்த வரையில் கொம்யுனிஸ்டு கட்சியும் சம சமாஜக் கட்சியும் சிங்கள மயக் கொள்கையை ஏற்றுவிட்டன என்பதைத் தற்போது எல்லோரும் அறிவர். இதுகாறும் சம அந்தஸ்துக் கொள்கையைக் கடைப் பிடித்தார்கள். "படிப்படியாகச் சிங்கள மயமாக்கும் உண்மை உள்ளக் கிடக்கையை ஒளித்து வைத்திருந்தார்கள். தற்போது தேர்தற் கால மாகையால் "பைக்குள் இருந்த பூனை வெளி வந்துவிட்டது" சிங்களப் பகுதிகளில் இடது சாரிகள் நடத்துங் கூட்டங்களெல்லாம் வகுப்பு வாதக் குரலைத் தான் எழுப்புகின்றன. கொம்யுனிஸ்டு கட்சி மெத்தானந்தா கட்சியுடன் சேர [illegible]

(15ம் பக்கம் பார்க்க)

---

# அம்பாறை. , .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக் கொடுக்கும் பிரதமரை வரவேற்று உபசரிக்கவே பின்வாங்கி விட்டார்கள்.

### பார்சல் உண்டா?

திரு தஹநாயகா அம்பாறை விமான நிலையத்தில் வந்திறங்கியதும் கச்சேரி திறக்கப்படமாட்டாது என்ற செய்தியை அறிவித்து விட்டு கல்லோயா அபிவிருத்தி சபை அதிகாரிகளுடனும் தமக்காக அங்கு காத்து நின்ற சேர். ராஸிக் பரீத்துடனும் எயர் சிலோன் பஸ்ஸில் கல்முனைக்குப் புறப்பட்டார்.

இடைவழியில் ஜனாப் முஸ்தபா எதிர்ப்பட்டார், பஸ்ஸை மறித்து தமக்கு ஏதாவது பார்சல் உண்டா என்று மட்டும் வினவினார். மற்றக் கவலை எதுவும் அவருக்கு இருக்கவில்லை, பிரதமர் வந்தாரா, வரவில்லையா, இருக்கிறாரா இல்லையா என்று ஒரு வார்த்தை தானும் இல்லை.

---

### தமிழரசு வாலிப முன்னணி

கல்வியங்காடு தமிழரசு வாலிப முன்னணி அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த 27-2-60-ல், ஓய்வு பெற்ற தபாற் சந்தோர் அதிபர் சு. தம்பாபிள்ளை தலைமையின் கீழ் நடைபெற்றது. கீழ் வரும் உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்: நா. பரமலிங்கம், உப. தலைவர்: க. நித்தியானந்தன், செயலாளர்: த. சம்பந்தர், உப செயலாளர் மா. சிவபாதம், பொருளாளர்: த. யோகானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனையில் காரியப்பரை கவிழ்ப்பது கடமை

## காரணம் அவர் நிலை தவறியவர் வாக்காளர்களை ஏமாற்றியவர்

## வஞ்சம் தீர்த்து தொகுதியின் பெயரையும் காப்பாற்ற வழி மௌலானுவை தெரிவதே

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கல்முனைத் தொகுதியில் கேட் முதலியார் எம். எஸ். காரியப்பர் கவிழவேண்டும். அவரைக் கவிழ்க்க வேண்டியது தொகுதி வாக்காளர்களின் கடமையாகிறது. எப்படி?

கடந்த 1956 பொதுத் தேர்தலின் போது ஜனுப் காரியப்பர் சொந்த ஹோதாவில் யாரிடமும் வாக்குக் கேட்கவில்லை. தமிழரசுக் கட்சி சார்பாகவே கேட்டார். அதன் பலன் அவருக்கு கிடைத்தது. அதாவது பெருந்தொகை வாக்காளர்கள் தமது வாக்குகளைத் தமிழரசுக் கட்சியின் பேரில் ஜனுப் காரியப்பருக்கு அளித்து அவரையே தமது பிரதிநிதியாகத் தெரிவுசெய்தார்கள்.

### நம்பிக்கைத் துரோகம்

தெரிவு முடிந்த பின்னர் ஜனுப் காரியப்பர் செய்தது என்ன? எந்தக் கட்சியின் சார்பில் வாக்குப் பெற்று பிரதிநிதியானரோ அந்தக் கட்சியை விட்டுப் பிரிந்து முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் தீங்குக்கு மேல் தீங்கிழைத்துவரும் சிங்கள



ஜனுப் மஸூர் மௌலானு

அரசாங்கங்களோடு கூடிக் குலாவி மந்திரிப் பதவி பெற்று உல்லாசமனுபவித்து வருகிறார். இது நம்பிக்கைத் துரோகம் இல்லையா? நம்பிய வாக்காளர்களை நட்டாற்றில் கைவிட்டதுபோல் இல்லையா?

### மௌலானுவை தெரிவு செய்ய வேண்டும்

இதற்கு என்ன செய்யலாம்? வஞ்சம் தீர்க்க வழியென்ன? உண்டு. கல்முனைத் தொகுதியில் இம்முறை தமிழரசுக்கட்சி சார்பில் ஒருவர் போட்டியிடுகிறார். அவர் ஜனுப் மஷூர் மௌலானு. தமிழரசுக் கட்சியின் ஆரம்ப காலந் தொடக்கம் அதில் ஒருவராக இருந்து உழைத்து வரும் இளம் முஸ்லிம் ஆவர். அவரை இம்முறை தெரிவு செய்வதன் மூலம் ஜனுப் காரியப்பருக்கு நல்லதோர் பாடம் கற்பிக்கலாம். ஜனுப் மஷூர் மௌலானு பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்படுவதோடு ஜனுப் காரியப்பர் அதைப்பார்த்து வெதும்பித் தம் தவறுக்காகத் தாமே வருந்தி வருங்காலத்திலாவது முஸ்லிம்களுக்கு நல்ல வழிகாட்டியாகவும் தொண்டராகவும் மாற வழி செய்யவேண்டும். இந்தக் கடமை கல்முனைத் தொகுதி வாக்காளர்களை எதிர் நோக்கியிருக்கிறது.

### வெற்றிக்கு வழி

ஜனுப் மஷூர் மௌலானு முஸ்லிம்கள் மட்டுமல்லாமல் தமிழர்களுடைய அபிமானத்தையும் அமோகமாகப் பெற்றவர் இன்று இத் தொகுதியில் போட்டியிடுபவர்கள் எண்ணிக்கையையும் வாக்காளர் தொகையையும் கணக்கிட்டுப் பார்க்கும் போது முஸ்லிம்களிடமிருந்து கிடைக்கக்கூடிய வாக்குகளோடு தமிழ் மக்கள் அத்தனைபேரும் தம் வாக்குகளையும் பிரிக்காமல் ஏகோபித்து ஜனுப் மஷூர் மௌலானுவுக்கு அளிப்பார்களேயானல் அவர் வெல்வது நிச்சயம்.

### வெற்றியின் பொருள்

அவர் வெல்கிறார் என்றால் அதன் பொருள் ஜனுப் காரியப்பர் கவிழ்கிறார் என்பது மட்டுமல்ல; தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரலைப் பாராளுமன்றத்தில் உரிமையோடும் உண்மையான உள்ளத் துடிப்போடும் எழுப்பக் கூடிய தமிழரசுக் கட்சி பலம் பெறுகிறது என்றும் அர்த்தமாகிறது. இன்னும் தமிழரசு வேலி கெட்டியாகிறது; பாதுகாப்பு அதிகரிக்கிறது என்றும் பொருள்படும்.

—"வேல்முருகு"

# சங்கப் பலகை

## 25,00,000 மக்கள் தலைவர்

"இன்று இந்தியாவில் முஸ்லிம் சமுதாயம் தமது பாதுகாப்பான வழிகாட்டியாக உங்கள் ஒருவரையேஎதிர்பார்க்கமுடியும்" (You are the only Muslim in India to whom the community has a right to look up for guidance) என்று முகமதலி ஜின்னுவைப்பற்றி அன்று பெருங் கவிஞன் இக்பால் கூறியதைத்தான் இன்று ஈழம் வாழ் தமிழ் பேசும் இனம் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்தைப் பார்த்துக் கூற வேண்டியிருக்கிறது.

### தலைவர்

மாறுபட்டு பிளவு பட்டு தறிகெட்டுக் கிடந்த முஸ்லிம் சமுதாயத்தை தட்டியெழுப்பி உலகம் வியக்கும் முறையில் ஒற்றுமைப் படுத்தி தலையெடுக்கச் செய்த பெருமை ஜனுப் ஜின்னுவையே சாரும். அது போன்றே வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் மலைநாட்டிலும் மற்றும் இலங்கை எங்கணும் இடத்தாலும் மதத்தாலும் மாறுபட்டு அழிவுறும் நிலையிற் கிடந்த தமிழ் பேசும் சமுதாயத்தை ஒரு இயக்கத்தின் கீழ்—ஒரு இலட்சியத்தின் கீழ்—ஒரு கொடியின் கீழ் ஒற்றுமைப் படுத்திய இருபத்தைந்துலட்சம் தமிழ் பேசும் மக்களின் தலைவராகவிளங்குகிறார் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம். அவருடைய எண்ணத்தை எழுத்தை பேச்சை தொகுத்து வெளியிடப்பட்டுள்ள நூல்தான் '25,00,000 மக்கள் தலைவர்' என்ற இந்நூல்.

### நூலாசிரியரின் வியத்தகு தொண்டு

ஒரு சில செய்தி இதழ்களையே சேர்த்து வைப்பதில் பெரும் கடினம் உண்டு. ஆனால் இளம் பராயம் உள்ள இந்நூலாசிரியர் பல ஆண்டுகளாக பொறுமையோடு முக்கிய செய்திகளைத் தொகுத்து நூல் வடிவில் கொண்டு வந்த செய்கை உண்மையிலேயே செந்தமிழ் பேசும் இனத்தின் சிந்தையை ஆட்கொள்ளும் செயல் என்றே கூற வேண்டும்.

### உயிரூட்டும் எழுத்தாளர்

இந்நூலை வெளியிட்ட திரு. இரா. கனகரெத்தினம் வெறும் தொகுப்பு ஆசிரியர் அல்லர், அவர் எம் சிந்தனையைக் கிளறி எமக்கு வாழ்வளிக்கும் ஓர் உயிர் ஊட்டும் இளம் எழுத்தாளரும் கூட என்பதை அவரின் 'உங்களுடன்......!!' என்ற முன்னுரை இனிது எடுத்து இயம்புகிறது திரு. எஸ். டி. சிவநாயகம் அணிந்துரை வழங்கியிருக்கிறார் இந்நூலுக்கு.

நாட்டுக்கு தேவையான நூல் இது. இருபத்தைந்து லட்சம் தமிழ் பேசும் மக்களும் படித்துப் பயனடைய வேண்டியது மட்டுமல்ல, பின் சந்ததியினருக்காகப் பாதுகாத்து வைத்திருக்க வேண்டியதும் கூட.

தொகுத்தவர்: (குரும்பசிட்டி) இரா. கனகரெத்தினம்

கிடைக்குமிடம்: எம். ஏ. சுல்தான், 74/2, பிறவுண்றிக் வீதி, கண்டி

விலை ரூபாய் 1—00

### பழைய மாணவர் சங்கம்

பம்பலப்பிட்டி அர்ச் மரியாயின் தமிழ் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் தேர்தல் கூட்டம் கடந்த 28-2-60-ல் பாடசாலை மண்டபத்தில் ஜோசப் மரியநாயகம் தலைமையில் நடைபெற்றது.

அப்போது கீழ்க்காணுபவர்கள் நடப்புவருட உத்தியோகஸ்தர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்:-

தலைவர்: பீட்டர் முத்தையா, உபதலைவர்: திரு. ஜோசப் மரியநாயகம், செயலாளர்: திரு ஜே. பி றெபட், துணைச் செயலாளர்: திரு, எம். இருதயதாசன், பொருளாளர்: திரு. ஏ. புத்திரசிகாமணி, துணைப் பொருளாளர்: திரு. ச. அகஸ்டின் இலக்கிய குழு தலைவர்: திரு. எஸ். சந்தானம், இலக்கிய குழு செயலாளர்: திரு ஏ. ஜி அன்று. வாசிகசாலை நிர்வாகி திரு. எஸ். வீரசாமி, [illegible] திரு. எஸ். பாலையா, எஸ். அந்தோனி.

# யு. என். பியின்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேறுவார் என்று எதிர் பார்த்தார்; ஏமாந்தார். குமாரசாமி அரை மந்திரிப் பதவியில் பலாப்பால் பூசி ஒட்டியதுபோல் ஒட்டிக் கொண்டார்.

சேர் ஜோனுடைய மந்திரி சபையிலிருந்து வெளியேற்றப்பட்ட பொன்னம்பலம் யாழ்ப்பாணத்தில் ஒரு கூட்டம் போட்டு, கொத்தலாவலை ஆட்சியைக் கண்டித்தார். தமிழ் மக்களுக்கு ஆபத்து வருகிறது என்று அலறினர்!

இதைக் கேட்ட குமாரசாமி என்ன சொன்னர் தெரியுமா? "பாவம், பொன்னம்பலம் ஒரு வாலறுந்த நரி! பதவி போய்விட்டதே என்று ஊளையிடுகிறார்" என்றார். பொன்னம்பலம் பதிலுக்கு "குமாரசாமி நன்றி கெட்டவன் நாசமாய் போவான்" என்று திட்டினர். இருவருக்குமிடையே குத்துப் பகை வெட்டுப் பகை வளர்ந்தது.

சேர் ஜோன் கொத்தலாவலையைப் புதிய எஜமானராகக்கொண்டார் குமாரசாமி. அவருடைய எடுபிடி ஆளாக ஏவல் தாஸனக அடிமைப் பட்டார்.

இப்படியான சந்தர்ப்பத்தில்தான் சேர் ஜோன் கொத்தலாவலை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார் குமாரசாமி கட்டியங் கூறி சேர் ஜோனை வடபகுதியில் வரவேற்று வலம் வந்தார்.

சேர் ஜோன் யாழ்ப்பாணம் சென்றிருந்த சமயம் மற்ெருரு தமிழ் காங்கிரஸ் காரரான திரு சி. அருளம்பலம்—ஆம், இன்று தமிழ் காங்கிரஸ் அபேட்சகராக நல்லூர்த் தொகுதியில் போட்டியிடும் அதே அருளம்பலம் தான்—சேர் ஜோனுக்கு வரவேற்பளித்து மாலைசூட்டினர்.

"வேண்டாம், வேண்டாம்" என்று தனிப்பெருந் தலைவர் கரடியாகக் கத்தியும் திரு அருளம்பலம் கேட்கவில்லை.

சேர் ஜோனுடைய யாழ்ப்பாண விஜயத்தைத் தொடர்ந்து திரு குமாரசாமி சாவகச்சேரித் தொகுதியில் யு. என். பி. கட்சிக் கிளைகளை வாயுவேகத்தில் திறக்க ஆரம்பித்தார். இதற்காக யு. என். பி.யிடம் சில ஜீப் மோட்டார் வண்டிகளும் ஸ்தாபிக்கப்படும் யு. என். பி கிளை ஒன்றிற்கு ரூ 500 வீதம் பணமும் பெற்றார் என்று அப்போது அரசியல் வட்டாரங்களில் பேச்சுகள் அடிபட்டன.

மேற்கூறிய காரணங்களினால் தான் 1956ல் திரு. குமாரசாமியும், திரு. அருளம்பலமும் தனிப்பெருந் தலைவரைக் கைவிட்டு சுயேச்சையாளர்களாகப் போட்டியிட்டார்கள். ஆனால் அப்போதும் அவர்களுக்கு யு. என் பி. பின்னணியில் நின்று உதவியளித்தது என்பது பகிரங்க இரகசியமாகும். அதன் காரணமாகவே இருவரும் தோற்கடிக்கப் பட்டார்கள்.

தனிப்பெருந் தலைவரையும், அவர்தம அகில இலங்கை ஆனைப்பந்தி காங்கிரஸையும், அப்போது கைவிட்டவர்கள் இப்போது திரும்பவும் வந்து அதே காங்கிரஸில் சரணடைந்து, அதே தலைவரின் காலில் விழுந்ததேன்.

திரு. குமாரசாமியை எடுத்துக் கொண்டால் முன்பு தமிழ் காங்கிரஸ் மூலம் அரசியலில் பிரவேசித்தவர். பின்னர் பொன்னம்பலத்தைக் கைவிட்டு, ஒரு காலத்தில் தாமே சாம்பார் கட்சியென்று வர்ணித்த யு. என். பி. யில் இரண்டறக் கலந்தவர். யு. என். பி. களனி மாநாட்டில் சிங்களம் மட்டும் கொள்கையைத் தழுவியதும் அடுப்படி முன்னணிக் கட்சி என்று ஒரு கரடியை அவிழ்த்து விட்டவர். இப்போது தருமபவும் காங்கிரஸில் வருகிறார் என்றால் இதன் ரகசியம் என்ன?

ஒருவன் ஒரு கட்சியிலிருந்து கொள்கை பிடிக்காமல் மனம் மாறி இன்னெரு கட்சிக்குப் போவது நடக்கக் கூடிய காரியந்தான். ஆனால் விட்டுப்போன கட்சிக்கே திரும்பி வருவதென்றால்... எடுத்த வாந்தியைத் திரும்ப அருந்துவது போன்ற அருவருப்பான செயல் அல்லவா இது?

இப்படி நடக்கக்காரணம் என்ன? காரணம் எல்லாம் மேலிடத்து ஏற்பாடு தான். உயர் இடத்துக் கட்டளை தான். ஆம், யு. என். பி. கட்சி தான் இம்முறை தமிழ் காங்கிரஸ் முகமூடியோடு யாழ்ப்பாணப் பகுதியில் போட்டியிடுகிறது. திரு. டட்லியின் கட்டளைப் படியே குமாரசாமியும், அருளம்பலமும் தனிப் பெருந் தலைவரை அண்டிக் கொண்டு ஒரு கூட்டாக, ஒரு சக்தியாகப் போட்டி யிடுகிறார்கள்.

இந்த அந்தரங்கத்தை நிரூபிப்பதற்கு இரண்டு ஆதாரங்களைக் காட்டுகிறோம்.

ஒன்று யு. என். பி. காரரான ஜனுப் டி. பி. ஜயா தமிழ்க் காங்கிரஸ் மேடையேறி திரு. பொன்னம்பலத்தையும், அவர் சகாக்களையும் ஆதரிக்குமாறு கேட்டுக்கொண்டாரே, அது ஒரு ஆதாரம். அதே ஜயா தென் பகுதியில் பேசும் போது 'யு. என். பி. அகில இலங்கையிலும் அபேட்சகர்களைப் போட்டிருக்கிறது. அகில இலங்கையிலும் வெற்றியீட்டும் என்றார்' யாழ்ப்பாணப் பகுதியில் யு. என். பி. அபேட்சகர் வேறு யாராக இருக்க முடியும்?

மற்றொரு, ஆதாரம் சிந்தித்துப் பார்க்கவேண்டியது.

தமிழ் காங்கிரஸ் யாழ்ப்பாணத்திலுள்ள 10 ஸ்தானங்களில் 8க்குத் தான் போட்டியிடுகிறது. மற்ற இரண்டையும் விட்டு வைப்பானேன்? ஊர்காவற்றுறை, உடுவில் ஆகிய இரண்டுமே தமிழ் காங்கிரஸ் போட்டியிடாத தொகுதிகளாகும். இந்த இரண்டு தொகுதிகளிலும் இரண்டுபழைய யு.என். பிக்கள் சுயேச்சை வேஷத்தில் போட்டியிடுகின்றன. ஒன்று திரு. ஏ. எல். தம்பியையா மற்றது திரு. வி. வீரசிங்கம். இப்போது புரிகிறதல்லவா ஏன் இந்த இரண்டு பேருக்கும் தமிழ காங்கிரஸ் தனது போட்டி அபேட்சகர்களை நிறுத்த வில்லையென்று?

இந்த இருவரும் வென்றாலும் தமிழ் காங்கிரஸ் காரர்களைப் போலவே யு. என். பியிடம் ஒட்டிக் கொள்பவர்கள்தரம். அதனால்தான் தமிழ் காங்கிரஸ் போட்டியிட வில்லை.

எனவே, தமிழ் காங்கிரஸின் தனிப்பெருந் தலைவர் யு. என். பியின் ஏஜன்டாகத் தான் யாழ்ப்பாணத்தில் தேர்தலை நடத்துகிறார் என்பதும் யு என். பி. பணமே அங்கு தண்ணீர் பட்ட பாடாக ஓடுகிறது என்பதும், வென்றால் பழையபடி ஒரு மந்திரி பதவிக்காகவே தமிழ் மக்களின் தலையை விலை கூறி விற்பார் என்பதும் ஊர்ஜிதமான விஷயமாகும்.

[அடுத்தவாரம் திருவாளர்கள் எம். சிவசிதம்பரம், ஆர். என். சிவப்பிரகாசம் ஆகியோரின் பூர்வ வரலாறுகள் தொடர்ந்து வெளிவரும்.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பாடசாலைகள், தபாற் கந்தோர் இரப்பதல்ல

## எங்கள் பணி

## இன விடுதலைதான்

## எங்கள் நோக்கம்

### தமிழ் மக்கள் வாழ்வு இலட்சியம்"

மூதூர் தொகுதியில் தமிழரசுத் தந்தை

**தமிழரசுக் கட்சி ஓர் வெறும் அரசியல் கட்சியல்ல. அது அடக்கி ஒடுக்கப்பட்ட தமிழினத்தின் விடுதலை இயக்கம் விடுதலை இயக்கத்திலே பங்குபற்றுகிறவர்கள் ஒரு காலமும், ஆளப்படும் இனத்தவரிடமிருந்து தபால் கந்தோரோ, பாடசாலைகளோ இரந்து பெற்று தமிழ்பேசும் மக்களுக்கு கொடுப்பரென யாரும் எதிர்பார்க்கக் கூடாது. விடுதலைதான் நோக்கம் இனத்தின் வாழ்வுதான் இலட்சியம்.**

மேற்கண்டவாறு தமிழரசுத் தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் திருமலையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பேசும் போது கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் சொன்னதாவது:-

"இலங்கைத் தமிழர்களுக்குத் திருமலைத் தமிழர்கள் எவ்வளவோ முறைகளில் வழிகாட்டியுள்ளனர். இப்பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி தலைவர் திரு. என். ஆர். இராசவரோதயத்துடன் வேறு எந்தத் தமிழரும் போட்டியிட வரவில்லை. இது பாராட்டப்படவேண்டிய ஒரு பண்பாகும்''

### மூதூரில் வரவேற்பு

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலையொட்டி, தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் முதன் முறையாக அணிமையில் மூதூர்த் தொகுதிக்கு விஜயஞ் செய்தபொழுது மூதூர்த் தொகுதிவாழ் தமிழ் மக்கள் (முஸ்லிம்களுட்பட) மகத்தான வரவேற்பு அளித்தனர் அத்தொகுதியைச் சேர்ந்த, சேனையூர் இளிவெட்டி, சம்பூர், கட்டைபறிச்சான், மல்லிகைத்தீவு முதலிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள் மிகவும் உற்சாகமாக வரவேற்று உபசரித்தனர்.

### இரவு ஒன்றரை மணிக்கு

1-ம் தேதி காலை திருமலையிலிருந்து மூதூர் பயணமானவர்கள், ஒவ்வொரு கிராமமாகச் சென்று கடைசியாகச் சேனையூர்க் கிராமம் வரும் பொழுது இரவு ஒன்றரை மணியாய்விட்டது அப்படியிருந்தும் அக்கிராம மக்கள், தமிழரசுத் தந்தையைக் காணவேண்டும் என்ற ஒரே நோக்குடன், காத்து இருந்தமை அங்கு சென்ற குழுவினரின் மனத்தை உருகச் செய்தது.

சுற்றுப் பிரயாணத்தில் முக்கியமாக விளங்கியது ஒவ்வொரு கிராம மக்களும் (பெண்கள் குழந்தைகள் உட்பட) தமிழரசுத் தந்தைக்கு உணர்ச்சி பெருக கண்கள் நீர் மல்க செலுத்திய அஞ்சலியாகும்.

### உருக்கிய காட்சி

சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் நிமித்தம் பழுதடைந்த தெருக்களில் வெள்ளத்தினூடே நடந்து செல்ல முடியாது தமிழரசுத் தந்தை தவிக்கும் பொழுது, கிளிவெட்டி மக்கள், மல்லிகைத் தீவு மக்கள் ஆகியோர் தமிழரசுத் தந்தையைக்கதிரையிலிருத்தி,வெய்யில் படாதவாறு கூடாரம் அமைத்து, ஒரு மைல் தூரம் என்ன பலமைல்கள் தூரம் தூக்கிச் சென்ற காட்சி, காண்போரின் மனத்தை உருகச் செய்யக் கூடிய காட்சியாயிருந்தது.



வெள்ளம் பாய்ந்த மூதூர்ப் பகுதி வீதிகளில் நடந்து செல்ல முடியாதிருந்த தமிழரசுத் தந்தையை அங்குள்ளவர்கள் சிவிகையிலேற்றிச் சென்றார்கள். சிவிகையிலமர்ந்த தந்தை தூக்கிச் செல்லப்படுவதற்கு முன்னால் அவரைப் பலரும் சூழ்ந்து கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

### தமிழ் மக்கள் ஏமாறக் கூடாது

மூதூரில் நடந்த பொதுக் கூட்டத்தில் தமிழரசுத் தந்தை பின்வருமாறு பேசினார்:—

"பத்து வருட காலத்திற்கு முன் ஆரம்பித்த தமிழரசுக் கட்சி, தனது கொள்கைகளை ஒருகாலும் மாற்றியதில்லை. சிறு சிறு கட்சிகள் பல தோன்றி தமிழரினது ஒற்றுமையைக் குலைக்க பலசூழ்ச்சிகள் செய்கின்றன. இதில் இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள் ஏமாறக்கூடாது.

"தமிழரசு கட்சி, தமிழ் மொழிக்காக அல்லும் பகலும் பாடுபடும் ஓர்கட்சி.

"தமிழரசுக்கட்சியின் தேர்தல் நியமனக்குழு பாரபட்சமின்றியே இம்முறை அபேட்சகர்களைத் தேர்ந்து எடுத்துள்ளது. திரு. டி. ஏகாம்பரம் மூதூர்த் தொகுதிக்கு அபேட்சகராகத் தேர்ந்து நிறுத்தப்பட்டுள்ளார். அவருக்கே அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்''.

சுயேச்சை அபேட்சகர் திரு. துரைநாயகத்தின் தகப்பனர் திரு. ஜேம்ஸினுல் எழுதி விடுக்கப்பட்டகேள்விகளுக்கு புரக்டர் எஸ். நடராசா கடச் சுடப் பதிலளித்தார்.

### மட்டக்களப்பு . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

டக்களப்பைப் பொறுத்தவரையில் அவர்கள் (சாட்சியமளித்த மூவர்) வற்புறுத்திய விஷயங்கள் எனக்கு ஏற்புடையனவாக இருந்தன'' என்கிறீர்கள் இங்கும் உண்மை தொனிக்கவில்லையே!

### கண்ணியத்தை இழப்பதா?

இதெல்லாம் எதற்கு? உண்மையைப் பகிரங்கமாகச் சொன்னால் கொஞ்ச வாக்குகளை இழக்க நேரிடுமே என்ற பயமா? உங்கள் கண்ணியம் ஒன்றை இழப்பதைக் காட்டிலும் உலகத்தில் உள்ள அத்தனை வாக்குகளையுமே இழப்பது நல்லதில்லையா?-வண. பிதா ஈ. கிரெனதர் திரு மயில்வாகனத்துக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு உறைப்பாகக் கூறி முடித்திருக்கிறார்.

### சிறுபான்மைத் தமிழர் முன்னேற்றச் சங்கம்

"தமிழன் தன்மானத்துடன் வாழவேண்டுமானால் சிறுபான்மை, பெரும்பான்மைத் தமிழர்கள் அத்தனை பேரும் ஒன்று பட்டுத் தமிழினத்தின் உரிமைகளுக்காகப் போராட வேண்டும். சிறுபான்மைத் தமிழர்களும்—பெரும்பான்மைத் தமிழர்களும் ஒன்றுபட வேண்டுமானால், முதலில் அதற்குத் தடையாய் நிற்கும் தீண்டாமையை ஒழித்துக்கட்டி, மனிதனுக்கு மனிதன் உயர்ந்தவன், தாழ்ந்தவன், என்ற நிலையில்லாது, நாம் தமிழர், ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம் என்ற நிலையுண்டாக வேண்டும்; அதற்கு ஒரே வழி, பெரும்பான்மைத் தமிழர்களின் உள்ளக் கதவுகள் திறபட வேண்டும். அப்போதுதான் தமிழ் மக்கள் சாதிமத பேதமின்றி ஒன்றுபட்டுப் போராடிச் சுபீட்சத்தையடைய முடியும்''

இவ்வாறு 15-2-60-ல் நடைபெற்ற வேலணைத்தீவு சிறுபான்மைத் தமிழர் முன்னேற்றச் சங்கத்தின் மூன்றுவது வருடாந்தக் கூட்டத்தில் ஷெ சங்க மாஜித் தனாதிகாரியும், புதிய தலைவருமான திரு. மு. ஆறுமுகம் பேசுகையில் குறிப்பிட்டார்.

அடுத்து மேற்படி சங்க மாஜிக் காரியதரிசியும், புதிய காரியதரிசியுமான திரு. சி. கந்தசாமி பேசினார்.

பின்னர், பின்வரும் சங்க உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்:— தலைவர்: திரு. மு. ஆறுமுகம், உப தலைவர்கள்: திரு. நா. இ. ராமு, திரு. மு. கந்தையா, திரு மு. மாணிக்கம், செயலாளர் திரு. க. சுந்தரம், கணக்குப் பரிசோதகர் திரு. இ. கந்தசாமி.

சங்க உத்தியோகஸ்தர்கள் உட்பட திருவாளர்கள் ஆ. பாலு, மு. சுப்பிரமணியம், வீ. நாகமணி, சண்முகராசா, சி. குமாரசாமி, த. நல்லையா, அ. அருளானந்தம், மு. பாலசிங்கம், வே. கணபதி, ச. யாக்கோப்பு, க. குருசுமுத்து, க. நடராசா, க. கார்த்திகேசு, க. ஆனந்தன், கா. கந்தன், சி. நாகலிங்கம், வை. இளையதம்பி, வே. வடிவேலு ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

எல்பின்ஸ்டன் (மருதானை)

மார்ச் 17-ம் திகதி வியாழக்கிழமை முதல்

சியாமா—நந்தா—பால்ராஜ்—சஹானி

நடிக்கும்

சோட்டி பாகன்

இந்தியாவில் இப்பொழுதும் 50-வது வாரமாக ஓடிக்கொண்டிருக்கும்

ஹிந்தித் திரை ஓவியம் இதுவே!

எல்பின்ஸ்டன் — றெக்ஸி

ஏ. நாகேஸ்வரராவ்—அஞ்சலிதேவி

ராஜசுலோசனா—கே. ஏ. தங்கவேலு

நடிக்கும்

கலைவாணன்

கெயிட்டி 3-வது வாரம்!

பாலாஜி -மாலினி - விஜயகுமாரி - நாகையா - காகா ராதாகிருஷ்ணன்

நடிக்கும்

அழகர் மலைக் கள்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1960 டிசம்பர் 31-ந் தேதியுடன் தமிழின்

## அற்ப சொற்ப சலுகைகளும் அஸ்தமிக்கப் போகின்றன

## இதை எதிர்த்து 25 லட்சம் தமிழ் பேசும் மக்களும் திரண்டு எழ வேண்டும்

## தமிழரசுக் கட்சி ஒன்றுதான் அத்தகைய கிளர்ச்சியை ஏற்படுத்த வல்லது

### மார்ச் 19-ல் உரிய தத்துவம் வழங்குவது நமது கடமை

"பத்தொன்பது எம். பிக்களுக்குத் தலைவராகத் தமிழரசுத் தந்தை செல்வநாயகம் பாராளுமன்றத்தில் எழுந்து நின்றால் 25 லட்சம் தமிழ் பேசும் மக்களின் குரல் கேட்கிறது என்று அகில உலகமும் சிங்கள இனமும் முக்கிய கவனம் செலுத்தும் நிலைமையை வகுத்துக் கொள்ளும் வாய்ப்பு மார்ச் மாதம் 19-ம் தேதி வரப் போகின்றது. அவ்வேளையிலே, தேமதுரத் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட நாம் அனைவரும் நமது குழந்தைகளின் வருங்கால சுபீட்சத்தை மனத்திலிருத்தித் தமிழரசுக் கட்சியை எமது ஏக பிரதிநிதியாகத் தெரிவு செய்வதே எமது முதற் கடமையாகும்."

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கிய பிரமுகர்களுள் ஒருவரான திரு வ. நவரத்தினம் விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார். அவர் தமது வேண்டுகோளில் மேலும் சொல்லியிருப்பதாவது:—

மார்ச் 19-ம் தேதி இலங்கையில் தமிழ் பேசும் மக்களாகிய எமக்கு ஓர் முக்கியமான நாளாகும். தொடர்ந்து நாம் ஒரு தனிப்பெரும் இனமாக வாழ்வதா, அல்லது பெரும்பான்மை இனமாகிய சிங்கள இனத்துக்கு பணிந்து நமதுரிமைகளெல்லாவற்றையும் கைவிட்டு அவ்வினத்தோடு ஐக்கியப்பட்டு இரண்டறக் கலப்பதெனத் தீர்மானம் செய்வதா என்பது தான் அன்று நாம் அளிக்கப் போகும் வாக்குகளின் கருத்தாகும்.

தமிழ் பேசும் சகோதரர்களே, எச்சரிக்கை! எச்சரிக்கை!! இந்த 1960-ம் ஆண்டு இறுதியில், அதாவது வரப்போகும் டிஸம்பர் மாதம் 31-ம் தேதி, தமிழுக்கும் தமிழ்ப் பேசும் மக்களுக்கும் இப்பொழுது இருந்துவரும் அற்ப சொற்ப சலுகைகளும் முடிவுறப் போகின்றன என்பதை நினைவு கொள்ளுங்கள்.

#### சிங்களம் மட்டும் சட்டம் அமுல்

இருபத்து நான்கு மணித்தியாலத்துக்குள் சிங்களத்தை மாத்திரம் அரசாங்க பாஷையாக ஆக்குவேன் என்ற தேர்தற் பிரசாரத்தின் அலையுச்சியில் மிதந்து வந்து அரசாளும் உரிமையைக் கைப்பற்றிய திரு பண்டாரநாயக்கா 1956-ம் ஆண்டு ஜூன் மாதம் 5-ம் தேதி "சிங்களம் மாத்திரம்" என்னும் மசோதாவைப் பாராளுமன்றத்தில் கொண்டுவந்து சட்டமாக்கினார். ஆயினும் தமிழ் பேசும் மக்கள் காட்டிய எதிர்ப்பினாலும், தமிழ் பேசும் மக்களின் ஏக பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்ட தமிழரசுக் கட்சியார் காலி முக மைதானத்தில் 30,000 வெறியர்களாற் தாக்கப்பட்ட போதிலும் அஞ்சா நெஞ்சத்தோடு தாம் முன்வைத்த காலைப் பின் வாங்காது புரிந்த சத்தியாக்கிரகத்தினாலும் பயந்த பண்டாரநாயக்கா நிலை தளர்ந்து போனார். அந்தச் சட்டத்தை அமுல் நடத்த வகை அறியாது ஒரு "கஸட் அறிக்கை" என்னும் தந்திரோபாயத்தை உபயோகித்து அந்தச் சட்டத்தைப் பூரணமாக அமுல் நடத்துவதை இந்த 1960-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரையே ஒத்தி வைத்துள்ளார் என்பதை நாம் அனைவரும் நினைவு கொள்ளவேண்டும்.

வ. நவரத்தினம்

#### முழித்துப் பார்க்கும் உண்மை

எதிரே வரும் பொதுத் தேர்தலில் சிங்கள மக்களால் தெரிவு செய்யப்படும் எந்த அரசாங்கமானாலும் சரி அந்த "கஸட் அறிக்கையை" மாற்றப் போவதில்லை. அப்படியானால் 1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ந் தேதி தொடக்கம் சிங்களம் மாத்திரம் சட்டம் இலங்கையின் 9 மாகாணங்களிலும் முழு நிஷ்டூரத்தோடு அமுல் செய்யப்படும். இந்த உண்மை நம் இனத்தை ஏளனச் சிரிப்போடு முழித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறது. நாம் என்ன விடை கொடுக்கப்போகிறோம்?

#### எதிர்க்க வேண்டும்

எதிர்க்க வேண்டும்; சந்தேகமில்லை. இனத்தின் முழுப்பலத்தோடும் எதிர்க்க வேண்டும் பாராளுமன்றத்திலும் எதிர்க்க வேண்டும்; புறத்தேயும் எதிர்க்க வேண்டும். நாட்டின் மூலை முடுக்குகளிலும் நகரங்களிலும் கிராமங்களிலும் நமது எதிர்ப்பைக் காட்டவேண்டும். அகில இலங்கையிலும் பயனுள்ள விதத்தில் எதிர்ப்பு காட்டப்பட வேண்டுமானால் தமிழரசுக் கட்சி ஒன்றேதான் அதைச் சாதிக்க முடியும். வடக்குக் கிழக்கு மாகாணங்களையும் ஏனைய தமிழ் பேசும் மக்களையும் ஒன்றுயிணைத்த பெருமை தமிழரசுக் கட்சிக்கே உரியது. இக்கட்சி ஒன்றினால்தான் பெரியதோர் எதிர்ப்பியக்கத்தை நிர்வகிக்க முடியும்.

#### ஒற்றுமையில்தான் நம்முடைய சக்தி

இலங்கையில் நாம் சிறுபான்மை இனமாக இருந்த போதிலும், கடந்த நான்கு ஆண்டுகளில் நமது உண்மையான பலத்தை முதன் முறையாக உணர்ந்துள்ளோம். ஒற்றுமையாய், ஒரே கட்சியின் வீடு என்னும் அரணில் மக்கள் ஒன்றுபட்டு நிற்பார்களானால் அதுவே நமது பாசுபதாஸ்திரம் ஆகும். மக்கள் தமிழரசுக் கட்சி மீது வைத்த நம்பிக்கையும் அன்புமாதரவுமே சிங்க பலங்கொண்ட சிங்கள அரசாங்கத்தைச் சின்னா பின்னப்படுத்தியது; சிங்கள இனத்தையே கூறு கூறாகப் பிரித்துள்ளது. இதே போல, வருங்காலத்திலும் சிங்கள அரசாங்கம் எதுவானாலும் சரி அதைச் சிதைத்துச் சின்னா பின்னப்படுத்தும் சக்தி நம்மிடத்தில் உண்டு.

மக்கள் தமிழரசுக் கட்சி மீது வைத்துள்ள நம்பிக்கையையும் ஆதரவையும் தளரவிடக் கூடாது. பாராளுமன்றத்தில் மாறுபட்ட கருத்துக்களை, ஒத்துழைப்புச் சித்தாந்தங்களைக் கூறிப் பதவி ஏற்கும் தமிழ்ப் பேசும் பிரதிநிதி ஒருவரேனும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய கடமை வாக்காளர்களைச் சார்ந்ததாகும். நமது வருங்காலச் சந்ததிகளுக்கு நாம் செய்து வைக்கும் கைங்கர்யம் இது ஒன்றேயாகும்.

#### தமிழரசுத் தந்தையின் குரல்

பத்தொன்பது எம். பிக்களுக்குத் தலைவராகத் தமிழரசுத் தந்தை செல்வநாயகம் பாராளுமன்றத்தில் எழுந்து நின்றால் 25 லட்சம் தமிழ் பேசும் மக்களின் குரல் கேட்கிறது என்று அகில உலகமும் சிங்கள இனமும் முக்கிய கவனம் செலுத்தும் நிலைமையை வகுத்துக்கொள்ளும் வாய்ப்பு மார்ச் 19-ம் தேதி வரப் போகின்றது. அவ்வேளையிலே, தேமதுரத் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட நாம் அனைவரும் நமது குழந்தைகளின் வருங்கால சுபீட்சத்தை மனத்திலிருத்தித் தமிழரசுக் கட்சியை எமது ஏக பிரதிநிதியாகத் தெரிவு செய்வதே எமது முதற் கடமையாகும்.

## 'தமிழ்பேசும் இனம் இழித்து..

(6-ம்பக்கத் தொடர்ச்சி)

To fight for the civic rights of a people who produce 60% of the wealth of this country, who has made this country their only home is treason—

To fight against the semi slave conditions in which the Tamil labourers in estate areas live is treason—

To fight for a change in the structure of the Government whereby a suitable division of powers, not a division of the country, by establishing a Federal form of Government is treason—

And to launch a campaign to enforce these demands is treason, I am willing to commit these acts of treason, and face the consequences of this treason rather than be humiliated and insulted at every turn, rather than suffer the process of slow torture, one could be anyday be prepared to be charged for treason and be hanged.

#### திரு வி. க.வும், திரு கு. வ.வும்

இப்படி தன்னையே ஒறுத்து வெறுத்து தமிழ் பேசும் இனத்தின் வாழ்வே தம் வாழ்வென வாழ்ந்தவர் தான் திரு கு. வன்னியசிங்கம் அவர்கள். தாயகத்தில் 17-9-53ல் தமிழ்த் தென்றல்—தொழிலாளர் தொண்டன்—அரசியல் அறிஞன் செய்தி இதழ்களிலே செந்தமிழைப் பெய்து எழுதிய செம்மல்—பெண்ணின் பெருமை பேசிய பெருந்தகை திரு வி. க. மறைந்தார். சரியாக ஆறு ஆண்டுகள் கழிந்து சேயகம் தந்த செம்மல்—வண்டமிழ் பேசும் இனத்தை வாழ்வித்த வன்னியசிங்கமவர்கள் அதே மாதம், அதே தேதி, அதே வியாழக்கிழமையில், ஏறக்குறைய அதே நேரத்தில் உலகமெலாம் வாழும் தமிழ் பேசும் இனம் துடிதுடித்து விம்மி அழ எம்மை விடடுப் பிரிந்தார்.

லோகமானிய திலகர் மறைந்தபோது "The giant among men has fallen, the voice of the lion is hushed, Lokamaniya Tilak is no more" 'மனிதருள் ஒரு பேராற்றல் உள்ள மனிதன் மறைந்து விட்டான், சிங்கத்தின் கர்ச்சனை ஓய்ந்துவிட்டது, லோகமானிய திலகர் இனிமேல் இல்லை' என்று காந்தி மகான் கதறினார் நாமும் அக்கூற்றை சிறிது மாற்றி "மனிதருள் பேராற்றல் படைத்த மாமனிதன் மறைந்துவிட்டான், தமிழ்ச் சிங்கத்தின் வீரகர்ச்சனை ஓய்ந்துவிட்டது, இனிமேல் எம்மிடையே வாழ்வளித்த வன்னிய சிங்கம் இல்லையே" என்றுபுலம்ப வேண்டி இருக்கிறது.

#### நமது கடமை

யார்தான் என்ன சொன்னாலும் எம் உடல் எல்லாம் வாயாக மாறி உள்ளம் குழைந்து 'ஓ' என்று கதறி அழுதாலும் அந்த அன்பின் திருவுருவத்தை, அறிவின் ஒளிச்சுடரை—தமிழ் உடை தரித்து உள்ளும் புறமும் தமிழனாய் வாழ்ந்த எளிமையின் தோற்றத்தை—கண்ணுக்கு இனியானை நாம் மீண்டும் காணப்போவதில்லை. ஆனால் தமிழ், தமிழ், தமிழ் என்று வாழ்ந்த அந்தத் தமிழர் உயிர் எம்மைச் சுற்றி வட்டமிட்டபடி—தாய் தன் சேயை இமைகொட்டாது காப்பதுபோல எமது செயல் அனைத்தையும் கூர்ந்து கவனித்தபடியிருக்கிறது. அவர் வாழும்பொழுது அவரை வாழ்த்தி வழுத்தி பக்கதுணையாய் இருந்து பணியாற்ற நம்மில் சிலர் மறந்தோம். அவர் மறைந்த பின்பாகுதல் அவர் விட்டு வைத்த பணியை-தன் உயிரையே பணயம் வைத்து ஆற்றிய பணியை நிறைவேற்றுவோமா அல்லது நன்றி கெட்ட சமுதாயம் தமிழர் சமுதாயமென நானிலத்தார் இழித்துப் பேச ஈனச் செயலில் ஈடுபடுவோமா என்பதை வரும் மார்ச் 19ம் தேதி எடுத்துக்காட்ட வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

#### தமிழ் இலக்கிய சங்கம்

கொழும்பு புனித பெனடிற் கல்லூரித் தமிழ் இலக்கிய சங்கத்தின் பொதுக் கூட்டம் கடந்த 2-3-60-ல் கல்லூரி நூல் நிலையத்தில் நடைபெற்றது. தலைவர் திரு நா. ஹரிரட்ணஜோதியின் தலைமையுரையைத் தொடர்ந்து செயலாளர் செல்வன் ஜோய்ஸ் பர்னாந்து சங்க அறிக்கையை வாசித்து அளித்தார். அதற்குப் பின் இலங்கைக்கு—இணைப்பாட்சி உகந்ததா? என்னும் விடயம் பற்றிக் காரசாரமான விவாதம் நடைபெற்றது. பிரதம மேற்பார்வையாளர் வித்துவான் நீ. மே. யோ. வேதநாயகம் சிற்றுரை வழங்கினார்.

பணம்! சேமியுங்கள்!! பணம்!!!

இன்றே நாஷனல் பாட்டரிகளைப்




பாவிக்க ஆரம்பித்து அதிக லாபம் பெற்று ஆனந்தியுங்கள்.

நீடியகாலம் பாவிக்கிறது



விலையோ மிகக் குறைவு

இறக்குமதியாளர்கள்!

எஸ். யூ. முகம்மது ஹாஜியார்,

70, டாம் வீதி, கொழும்பு. போன்: 7653 ★ 143, மெயின் வீதி, காலி. போன்: 525

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வாதம் புரியும் இடதுசாரித் தலைவர்கள்

## எங்கே பதில் சொல்லட்டும்:

## தொழிலாளர்களுக்கிடையில் இனவாரிக் கொள்கைகள் லட்சியங்கள் இல்லையா?

### அவர்கள் ஒற்றுமையாகவா இருக்கிறார்கள்?

(11-ம் பக்கத் தொடர்ச்சி)
எம். பெரேராவும் வகுப்புவாதிகளான பண்டாரநாயக்கா, மெத்தானந்தா என்ற இருவரையும் புகழாத கூட்டம் கிடையாது. மெத்தானந்தா தனது ஆசிரியரென்றும் அவரைத்தாம் ஆதரிப்பதாகவும், பிலிப்தான் தமது விரோதி என்றும் பகிரங்கமாகக் கூறிவருவதைப் பத்திரிகைகளிற் படிக்கிறோம். பண்டாரநாயக்காவின் "தமிழின் நியாயமான அளவு உபயோகந்தான்" தமது மொழிக்கொள்கை என்றும் சொல்லுகிறார் டாக்டர் என். எம். பெரேரா.

மலைநாட்டுத் தமிழரையும் புறக்கணிக்கத் தொடங்கி விட்டார்கள் இடதுசாரிகள். தாம் பதவிக்கு வந்தால் உடனடியாக நேருவுடன் பேச்சு வார்த்தை நடத்தி நான்கு லட்சத்திற்கு அதிகமான மலைநாட்டுத் தமிழரை நாடு கடத்தவழிசெய்வார்களாம் சமசமாஜிகள். இவ்வாறு துண்டு பிரசுரங்களும் சிங்களத்தில் வெளியிட்டிருக்கின்றனர்.

#### இனவாரி நிற்றல் பிற்போக்கா?

மக்கள் இனவாரியாகப் பிரிந்து வாழ்தல் ஒரு பிற்போக்கான கொள்கையென்றும், அஃது முதலாளித்துவம் என்றும், தொழிலாளர் என்ற ரீதியில் ஒன்றுபட்டுப் போராடுதலே முற்போக்குக் கொள்கையென்றும், அத்தத்துவத்தின் படியே தான் தாம் இதுகாறும் செயலாற்றி வருவதாயும் தம்பட்டம் அடிக்கின்றனர் இடதுசாரிகள். இக்கொள்கை எத்துணைப் பொருத்தமுடைத்து என்பதைச் சற்று ஆராய்வோம்.

மனிதன் சமுதாயத்தில் வாழப் பிறந்தவன். அவனுடைய மொழியும், கலையும் பண்பும் தான் அவனைச் சமுதாயத்துடன் சேர்ந்து வாழச் செய்வன. அவை ஒரு சமுதாயத்தின் பொதுவுடைமைகள். தனிப்பட்டவரைப் பொறுத்தவரையில் அவை தனியுடைமையுங் கூட. எனவே இவை சட்டத்தினாலுந் திட்டத்தினாலும் அழிக்கவும் ஆக்கவுங் கூடியனவல்ல. அப்படியாயின் ஒரு சமூகத்தார் இத் 'தொழிலாளியம்' என்ற ஒரு கொள்கைக்காகத் தமது இனத்தைக் காட்டிக் கொடுக்கவும், தமது மொழி, கலை, பண்பு முதலியவற்றைப் பலி கொடுக்கவும் முன் வருவார்களா? உலக சரித்திரத்திலிருந்து உதாரணங்காட்டி அதனை நிரூபிக்க டாக்டர் என். எம். பெரேராவினால் முடியுமா? அமெரிக்கா, ஆபிரிக்கா போன்ற நாடுகளிலும் என். எம். போன்ற 'முற்போக்குவாதிகள்' இருக்கின்றார்கள் தானே! ஆங்கு வாழும் வெள்ளைத் தொழிலாளரும் தொழிலாளர் தானே!

#### ஏன் மறுக்கிறார்கள்?

அங்ஙனமாயின் அவர்கள் ஏன் தமது சகோதர கறுத்தத் தொழிலாருக்காகப் போராட மறுக்கிறார்கள்? பிரான்சில் இருக்கும் தொழிலாளர் கட்சியான கொம்யூனிஸ்டு கட்சி அல்ஜீரிய ஏழை மக்களை அடக்குவதையும், அழிப்பதையும் ஆதரித்தவர்கள் தானே. பிரெஞ்சுத் தொழிலாளர் ஏன் தமது இனத்தை வெறுத்து அல்ஜீரியத் தொழிலாளருக்காக இரங்கவில்லை? சோவியத் ருஷ்யாவிலுள்ள தொழிலாளர் அரசாங்கந்தானே தங்கள் உரிமைக்குப் போராடிய ஹங்கேரியத் தொழிலாளரை ஈவு இரக்கமின்றி, இயந்திரத் துப்பாக்கிகளினாலும் பீரங்கிகளினாலும் சுட்டுக் குவித்தது! ஏன்?

சோவியத் ருஷ்யாவிற்றானும் வாழ்கின்ற மக்கள் இன்றும் சமஷ்டி ஆட்சி மூலம் இன வாரியாகப் பிரிந்திருப்பவர்களென்பதை எமது முற்போக்கு மறுக்க முடியுமா? எங்கே தொழிலாளர் ஐக்கியம்? வெறும் மார்க்ஸிய வேதாந்தத்தைப் பனம் பண்ணிவிட்டு உலகமே அப்படித்தான் என்று எண்ணுவது வெறும் கற்பனையாகும். பச்சைக் கண்ணாடியை அணிந்தவருக்குப் பார்ப்பதெல்லாம் பச்சையாகத்தானிருக்கும்.

#### சிந்தித்துப் பாருங்கள்

சிந்தித்துப் பாருங்கள். ஒன்று கூறுகிறோம். வெறும் கட்டுக் கதையல்ல, எமது நாட்டில் நடந்த, நடக்கின்ற சம்பவம். சம சமாஜிகளினதும் கொம்யூனிஸ்டுகளினதும் தலைமையின்கீழ் இருபது ஆண்டுகளுக்கு அதிகமாகப் பல தொழிற் சங்கங்கள் இயங்கி வருகின்றன. அவற்றுட் சிங்களத் தொழிலாளரும் அங்கம் வகிக்கின்றனர். ஆயினும் சம சமாஜி சிங்களத் தொழிலாளர், சம சமாஜத் தமிழ்த் தொழிலாளரின் சொந்த உரிமைகளுக்காகத் தமது சகோதர தமிழ்த் தொழிலாளரின் நல் வாழ்வுக்காகப் போராட எப்போதாவது முன்வந்திருக்கிறார்களா? எங்கள் சம சமாஜத் தோழர்கள், சிங்களத்தொழிலாளரின் உரிமைகளுக்காக தமிழ்த் தொழிலாளரைக் கொண்டு வேலை நிறுத்தம் செய்வித்திருக்கிறார்கள். தமிழ்த் தொழிலாளரின் உரிமைக்காச் சிங்களத் தொழிலாளரைக் கொண்டு வேலைநிறுத்தங்கள் செய்விக்க முயலவுமில்லை, முடியவுமில்லை அவர்களால்.

#### இரக்கங் காட்ட முடியவில்லை

மலைநாட்டுத் தோட்டத் தமிழ்த்தொழிலாளரை ஏற்றுக்கொள்ளும் இடதுசாரிகள், இலங்கை ஜனநாயகக் காங்கிரசையும் அதன் தலைவர்களையும் வகுப்புவாதிகள் என்று திட்டும் இடதுசாரிகள், லங்கா தோட்டத் தொழிலாளர் சங்கமே உண்மையான தொழிலாளர் சங்கமென வற்புறுத்தும் சம சமாஜிகள், இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பெனத் திகழும் இந்த ஏழைத் தொழிலாளரின் இழந்த உரிமையைப் (பிரஜா உரிமை) பெறுவதற்கு 1949-ம் ஆண்டுக்கும் 1960-ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் எப்போதாவது ஒரு வாரத்துக்கு, வேண்டாம் ஒரு நாளைக்காவது தமது சம சமாஜச் சிங்களத் தொழிலாளரைக் கொண்டு வேலை நிறுத்தம் செய்வித்திருக்கிறார்களா? அப்படி எத்தனித்தாலுந் தான் நடக்கக்கூடிய காரியமா அது? தமது குறுகிய அரசியல் ஆசைகளைப் பூர்த்தி செய்வதற்காக எத்தனை, எத்தனை வேலை நிறுத்தங்களையும் செய்யும்படி தூண்டக் கூடிய மாபெரும் தொழிலாளர் தலைவர்கள், முற்போக்குவாதிகள், இந்தத் தமிழத் தொழிலாளர்களிடத்தில இரக்கங் காட்ட முடியவில்லை.

#### எத்தனையோ உதாரணங்கள்

சற்று சில மாதங்களுக்கு முன் யாழ்ப்பாண பஸ் தொழிலாளர் வேலை நிறுத்தம் தோல்வி கண்டபோது அத்தொழிற் சங்கத் தலைவராகிய என். எம். பெரேராவால் சம சமாஜிச் சிங்கள பஸ் தொழிலாளரைக் கொண்டு வேலை நிறுத்தம் செய்விக்க முடியவல்லை. பாவம்! சிங்களத் தொழிலாளருக்கு இதேகதி ஏற்பட்டால் தமிழ்த் தொழிலாளர் எப்பொழுதோ வேலை நிறுத்தத்திற் குதித்திருப்பார்கள். இப்படி எத்தனை உதாரணங்கள் வேண்டுமானாலுங் காட்டமுடியும்.

#### அவர்கள் விரித்த மாயவலை.

இதுதான் எமது இடதுசாரிகளின் முற்போக்குக் கொள்கை. இதுதான் தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு அவர்கள் விரித்த மாய வலை. இங்கு இடதுசாரிகளின் உண்மையான தோற்றம் — வகுப்புவாதம் தெற்றெனத் தோற்றுகிறது. சம சமாஜிகளோ அல்லது கொம்யூனிஸ்டுகளோ பதவிக்கு வந்தால் பெரும்பான்மை சிங்களத் தொழிலாளரின் ஆதரவைப் பெற்றுத் தான் வருவார்கள். பெரும்பான்மைப் பிரதிநிதிகளும் சிங்கள மக்களாவர். தற்போது ஒரு சிறிதளவாயினும் (வாய்ப்பேச்சிற் தவிர) சிறுபான்மையருக்காகத் தியாகஞ் செய்ய விரும்பாத சிங்களத் தொழிலாளரும், அவர்கள் தலைவர்களும் ஆட்சிக்கு வந்த பின் ஒரு அங்குலமாவது விட்டுக் கொடுப்பார்களா? அப்படித்தான் கருணை கொள்வார்கள் என்று தமிழ் மக்கள் நம்பினால் நம்பிக்கெட்ட சரித்திரத்தைத் தான் மறுபடியும் காண முடியும்.

எனவே இனவாரியாக ஒன்று திரண்டு எமது உரிமைகளுக்காகப் போராடுவது தான் உத்தமம். எமது மொழி, கலை, பண்பு முதலானவற்றைப் பேணுவதற்கு இது தான் தக்க முறையாகும். எமது போராட்டம் பரிசுத்தமான போராட்டம். சரித்திரத்தில் வெற்றி கண்ட போராட்டம் என்ற திடகாத்திரமான நம்பிக்கையுடன் முன்னேறுவோமாக.

## கழகச் செய்திகள்

#### பெற்றோர் தின வைபவம்

சலாபப் பெரும் பிரிவைச் சேர்ந்த போளவத்தை உரோமன் கத்தோலிக்க தமிழ் ஆண்பாடசாலையின் பெற்றோர் தின வைபவம் கடந்த 28-2-60-ல் சலாப மேற்றிராசனக் கத்தோலிக்க பாடசாலைகளின் பொது முகாமைக்காரர் அதி வந்தனைக் குரிய வி. மைக்கல் பெரேரா சுவாமியாரின் தலைமையில் ஆரம்பமாகியது.

மாணவர் வரவேற்புக்கீதம் பாடித் தலைவரையும், பங்குக் குருவானவர் சங்கை பிதா மேர்வின் பீரிஸையும் மாலை சூட்டி வரவேற்ற பின்னர், மேற்படி பாடசாலை உதவி ஆசிரியர் திரு. றேமண்ட லால் பாடசாலை அறிக்கை வாசித்துக் காட்டப்பட்டது. தொடர்ந்து தலைவருரைக்குப் பின், சலாபம் சென் மேரிஸ் சிரேஷ்ட தமிழ் ஆண் பாடசாலைத் தலைமை ஆசிரியர் சங்: சகோதரர் எஸ். பீரிஸ் "பாலரும் ஆரம்பக் கல்வியும்" என்பது பற்றியும், ஆசிரியர் திரு. டப்ளியு. எலியாஸ் லோவ் "பெற்றோரும் பாடசாலையும்" என்பது பற்றியும் வட மேல் மாகாணத் தமிழாசிரியர் சங்கக் காரியதரிசி திரு. வி. எஸ். பிள்ளை "மாணவரும் தற்காலக் கல்வியும்" என்பது பற்றியும், போளவத்தைப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. எஸ். எஸ். ரொட்றீக்கு பெற்றோரும் "சமயக் கல்வியும்" என்பது பற்றியும், திரு. டப்ளியு. விக்டோரியான் பெர்னேண்டு "தாய் மொழிக் கல்வி" என்பது பற்றியும், இனிய சொற்பொழிவுகளாற்றினர்.

பின்னர் இசை, நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன. "பெருமையின் அழிவும் தாழ்மையின் உயர்வும்" என்ற நாடகமொன்றும் சிறப்பாக நடித்துக் காட்டப்பட்டது. ஈற்றில திரு. வி. வீ. ஜோசப் நன்றி கூறலுடன் முடிவடைந்தது.

#### ஐக்கிய சுதந்திர இஸ்லாமிய சங்கம்

ஐக்கிய சுதந்திர இஸ்லாமிய சங்கத்தில் சென்ற 20, 21-2-60 சனி, ஞாயிறு ஆகிய தினங்களிலும் மௌலவி பாஸில் ஏ. எல். எம். கௌஸ் (பாகவி) தலைமையின் கீழ் ஹதீஸ் மஜ்லிஸ் நடைபெற்றது.

மௌலவி அப்துல் ஹமீது (நூரி) மௌலவி ஏ. எச். எம். ஹுசைன் (அல் அஸ்ஹரி) ஆகியோர் ஒழுக்கத்தின் அவசியம் பற்றி சொற்பொழிவாற்றினார்கள்.

ஹதீஸ் மஜ்லிஸ் துவங்குவதற்கு முன்பதாக சங்கத்தில் ஆதரவுள்ள மாணவ மாணவிகளான ஐய்னுல் செக்கிரியா, நூர் மக்கிலு சம்சுல் மக்கியா, உம்முருவைதா ஆகியோர் இன்னிசை விருந்து அளித்தனர்.

சும்ரதுல் அலவியா, இஸ்ஸதுல் நயீமா, ஐய்னுல் சுலைஹா ஆகியோர்கள் யாசெய்யது ஓதினார்கள்.

மௌலவி ஏ. எல். எம். ஜெய்னுலாப்தீன் (பஹ்ரி) மௌலவி அல் ஆலிம், ஜனாப் ஏ ஆர். எம். சுபைர் (அல் அஸ்ஹரி) ஜனாப் ஏ. எச். எம். பாரூக் ஆகியோர் நோன்பின் மகிமை பற்றிப் பேசினார்கள். ஜனாப் ஏ. எம் எம். அப்துல் காதர் உண்மையின் சிறப்பிற்கு உள்ளத்துத் தூய்மை அவசியம் என்று கூறினார். இறுதியில் செயலாளர் ஓ என் எம். சுபையர் நன்றியுரை கூறினார்.

#### நவராத்திரி தொண்டர் சபை

கொழும்பு கொம்பனித் தெரு, ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் கொம்பனித் தெரு சிவராத்திரி தொண்டர்சபையாரால் சிவராத்திரி விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு திரு என். மாணிக்க இடைக்காடர் தலைமை தாங்கினார்.

கொழும்பு மின்சாரத் துறை உதவிப் பொறிஞர் திரு. அ. வேல்சாமி அவர்களின் கூட்டுப் பிரார்த்தனையுடன் விழா ஆரம்பிக்கப்பட்டது. விழாவில் திருவாட்டிகள்: பத்மா சபேசன், லட்சுமி நடராசன், அகில இந்தியா வானொலிப் புகழ் தூத்துக்குடி வி. சுந்தரமையர் ஆகியோரின் இன்னிசைக் கச்சேரிகள் உட்பட திரு. எஸ். எம். சேவியரின் வேய்ங்குழல் கச்சேரியும், சைவப் புலவர் பண்டிதர் ஆர். வடிவேலுவின் "சிவராத்திரி விரத மகிமை" என்னும் கதா கலாட்சேபமும், கொழும்பு கலாவிருத்திச் சங்கத்தாரின் "ஸ்ரீ வள்ளி" நாட்டிய நாடகமும், "பாம்பாட்டி" நடனமும் சிறந்த அம்சங்களாக விளங்கியது. ஈற்றில் சபையாரின் சார்பில் திரு. ச. சுப்பையாவின் நன்றி நவிலலுடனும், ஸ்ரீ சிவ சுப்பிரமணியசுவாமி வீதி வலம் காட்சி தந்தருளியதுடன் விழா இனிது நிறைவெய்தியது.

#### கிராமத் தலைமைக்காரர்கள் சங்கம்

அகில இலங்கை உதவிக் கிராமத் தலைமைக்காரர் சங்கத்தின் விசேஷக் கூட்டம் சென்ற 28—2—60-ல் கீரிமலையில் சங்கத் தலைவர் திரு. வே. பொன்னம்பலம் தலைமையின் கீழ் நடைபெற்றது. தலைவர் உட்படப் பலர் பேசினார்கள். அதில் உதவிக் கிராமத் தலைமைக்காரர்களின் தற்காலிக சேவையை மாற்றி நிரந்தர சேவையாக்குவது பற்றி அரசாங்கத்திடம் கேட்பது பற்றியும் ஓர் தீர்மானம் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

#### மாணவர் சங்கக் கூட்டம்

ஐக்கிய சகாய சேவா இலவச கலவன் இராப்பாடசாலை மாணவர் சங்க, மாணவர் கலைமன்ற மாதாந்தரப் பொதுக் கூட்டமொன்று கடந்த 28-ம் தேதி தலைவர் திரு. அ. ஆ. சுமனதாஸ தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. பல மாணவிகள் பாடிய பாடசாலைக் கீதத்திற்குப்பின் காரியதரிசி ஜே. அகுஸ்தீன் பார்ணந்து, பொக்கிஷதார் எஸ். தியாகராஜா, செல்வன் ச. கந்தநாதன், எஸ். கனகராஜா, சி. சுப்பரமணியம், ஆ. மயில்வாகனம், செல்வி. ச. நாகேஸ்வரி, பி. எஸ்கிலின் ஆகியோர் பேசினார்கள். காரியதரிசி ஜே. அகுஸ்தீன் பார்ணந்து காரியதரிசி பதவியிலிருந்து ராஜினாமா செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை ஆர்வம் கொண்ட ரசிகர்களை சந்தோஷத்தில் ஆழ்த்தும் அற்புத கருத்தோவியம்!

# இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

**கிங்ஸ்லி** (கொழும்பு) **நவா** (கொம்பனித்தெரு) **ஸ்ரீகிருஷ்ணா** (திருகோணமலை)

**18-ம் தேதி வெள்ளிக்கிழமை முதல்**

**பிளாஸா** (வெள்ளவத்தை) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) **விஜயா** (மட்டக்களப்பு) **வெம்பிளி** (கண்டி)

**ஆகிய தியேட்டர்களில்**

நடிகர்கள்:
பிரேம் நசீர்
எஸ். வி. சுப்பையா
ஜி. முத்து கிருஷ்ணன்
ராமராவ்
பக்கிரிசாமி




நடிகைகள்:
எம். என். ராஜம்
ஸ்ரீ ரஞ்சனி
என். லலிதா
கே. ஆர். செல்லம்
சாரதாம்பாள்

நடிக்கும்

# ஒரே வழி

நடனம்: சாயி - சுப்புலட்சுமி

பின்னணி: சிதம்பரம் ஜெயராமன், டி. எம். சௌந்திரராஜன், ஏ. எம். ராஜா, எஸ். சி. கிருஷ்ணன், ராகவன், எம். எல். வசந்தகுமாரி, பி. சுசீலா, லீலா, பகவதி

★

கதை வசனம்: **ஜாவர்சீதாராமன்**

டைரக்ஷன்: **கே. சங்கர்**

இப் பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்த, 196-ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக பண்டாரநாயக்க மாவத்த, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1960 மார்ச் 13-ந்தேதி பிரசுரிக்கப்பட்டது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org